# ஐரோப்பிய யுத்தம்

படங்களுடன்

ம். எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை, பி. ஏ., எல். டி.,
'ஞானபோதினி'ப் பத்திராதிபரால்
இயற்றப்பட்டது.

---

MADRAS
PRINTED BY P. R. RAMA IYAR AND CO.
1914
விலை அணா 8.

# ஐரோப்பிய யுத்தம்

படங்களுடன்

MADRAS

எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ. எல். டி.

'ஞானபோதினி'ப் பத்திராதிபரால்

இயற்றப்பட்டது.

MADRAS

PRINTED BY P. R. RAMA IYAR AND CO.

1914

விலை அணா 8.

“நூலை நோக்குவர் நோக்கு ணர்ந்தவர்
நுணங்கு கேள்வியர் நம்பிரான்
காலை நோக்குவர் கால் உணர்ந்தவர்
கருணை நோக்குவர் கனிவரே
பாலை நோக்குவ குழவி தாய் முகம்
பார்த்தல் நோக்குவ ஜார்ஜின்செங்
கோலை நோக்குவர் குடியெலாம் அவன்
குழைவை நோக்கு குழையவே.”

# முகவுரை

---


இங்கிலீஷ் கற்காத தமிழருக்குப் பூகோளசாத்திரமே இன்னதென்று தெரியாததனால் கண்டங்களைப்பற்றி இப்புத்தகத்தில் முதலில் கூறப்பட்டுளது. அதன்பின் வரும் அத்தியாயங்களில் பிரிட்டன் ஜெர்மனிதேசங்களின் சரித்திரங்களும் அவற்றின் செழிப்பிற்குக் காரணங்களும் விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஐரோப்பிய யுத்தத்தின் வரலாறு அடுத்த ஒரு அதிகாரத்தில் காணப்படும். முடிவுரையில் சண்டையின் பிற்பயன் பல சரித்திர வல்லுநர[illegible]தசிக்கப்பட்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது. க[illegible]சியான அநுபந்தங்களில் ஐரோப்பிய அதிகாரிகளைப்[illegible]யும், அன்னாரின் பேரவாவைப்பற்றியும், குறிப்புகள் தரப்பட்டிருப்பதுடன் சில அரும்பதங்களுக்கு அருத்தமும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இப்புத்தகத்தில் இரண்டு படங்கள் சேர்த்திருப்பதால் யுத்தம் நடக்கிற தேசங்களும் இடங்களும் நன்கு விளங்கும்.

பூ.

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| I. | கண்டங்கள் ... ... ... ... | 1 |
| II. | ஈரோப்கண்டம் ... ... ... | 3 |
| III. | ப்ரிட்டிஷ்தீவுகள் ... ... ... | 8 |
| IV. | ப்ரிட்டிஷ் மகா இராஜ்யம் ... ... | 21 |
| V. | ஜெர்மனி ... ... ... ... | 25 |
| VI. | ஜெர்மனியின் குடியேற்ற நாடுகள் ... | 42 |
| VII. | ஜெர்மனி சரித்திரம் ... ... ... | 44 |
| VIII. | மஹாயுத்தம் ... ... ... ... | 50 |
| IX. | முடிவுரை ... ... ... ... | 59 |
| அநுபந்தம். I. | அறுவர் ஆசைகள் ... ... | 70 |
| II. | ஈரோப்பில் பெரிய அதிகாரிகள் ... | 72 |
| III. | அரும்பத விளக்கம் ... ... | 91 |

# உலகம்—கண்டங்கள்.


ஆர்ட்டிக் சமுத்திரம்
ஆர்ட்டிக் சமுத்திரம்
க்ரீன் லண்டு
அலாஸ்கா
கனடா
வட அமெரிக்கா
ஐக்கிய மாகாணம்
பசிபிக் சமுத்திரம்
தென் அமெரிக்கா
அட்லாண்டிக் சமுத்திரம்
ஆப்பிரிக்கா கண்டம்
ஐரோப்பா
ரஷ்யா கண்டம் ராஜ்யம்
சைபீரியா கண்டம்
ஆசியா
சீனா
திபேத்து
இந்தியா
பசிபிக் சமுத்திரம்
சீனக்கடல்
சிலோன்
அரபிக் கடல்
இந்திய சமுத்திரம்
நியூகினி
ஆஸ்ட்ரேலியா
அண்டார்ட்டிக் சமுத்திரம்

# ஐரோப்பிய யுத்தம்

## அத்தியாயம் I

### கண்டங்கள்

பாரெங்கும் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை ஏஷியா, ஈரோப், ஆப்ரிக்கா, அமெரிக்கா, ஒஷியானியா என்பனவாம். முதன்மூன்று பகுதிகள் (கண்டங்கள்) புராதனவுலகமெனவும், நான்காவது புதியவுலகமென்றும், ஐந்தாவது பலதீவுகளுக்குப் பொதுப் பெயரென்றும் பூகோளசாஸ்திரிகள் கூறுவர். பழையவுலகத்தைச் சேர்ந்த மூன்றுகண்டங்களில் ஏஷியாகண்டத்தில் ஒருதேசமாகிய இந்தியாவில் நாமிருக்கிறோம். இதன்னியில் சைனா, ஜப்பான், சைபீரியா, தீபெத், பர்மா, மஞ்சூரியா, பெர்ஸியா, ஆப்கனிஸ்டான், பெலுச்சிஸ்டான், அரேபியா, ஏஷியாமைனர் முதலான தேசங்களும் உள. ஈரோப்கண்டத்தில் ரஷியா, ஜெர்மனி, பிரான்ஸ், ஆஸ்டிரியா, டர்க்கி, இற்றலி, ஸ்விட்ஸர்லெண்டு, கிரீஸ், ஸ்பெயின், போர்ட்டுக்கல், ஹாலண்டு, பெல்ஜியம், டென்மார்க், நார்வே, ஸ்வீடன் முதலான தேசங்களும், மேற்கு அற்றத்தில் இங்கிலண்ட், ஸ்காட்லண்ட், அயர்லண்ட் முதலானதீவுகளும் இருக்கின்றன. மேற்கு அற்றத்திலுள்ள தீவைச்சார்ந்தவர்களே நம் தேசத்தை ஆண்டு வருகின்றனர். ஆப்ரிக்காகண்டம் நீக்ரோஜாதியாருக்குச் சொந்தமாயிருந்தது. இப்பொழுது

அது பிரஞ்சு ஆபிரிக்கா, ஜெர்மன் ஆபிரிக்கா, பிரிட்டிஷ் ஆபி ரிக்கா, டர்க்கி ஆபிரிக்கா, டச்சு ஆபிரிக்காவெனப் பிரிக்கப்பட்டுளது. இவையன்றி ஸ்பெயின், போர்ட்டுக்கல், இற்றலி, பெல்ஜியம் முதலான தேசங்களுக்கும் இடங்களுள. இவ்வாறு ஈரோப்கண்டத்தார் இப்பூர்வ கண்டத்தைப் பங்கிட்டுக் கொண்டனராதலால் புராதன நீக்ரோஜாதியாருக்குச்சொந்தமான இடம் சொற்பமே. புதுவுலகமென்று பெயர்பெற்ற அமெரிக்காகண்டம் இரண்டு கண்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவை வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா எனப்படும். வடஅமெரிக்காவில் கனடா, யூனைற்றெட் ஸ்டேட்ஸ், மெக்ஸிக்கோ, நடுஅமெரிக்கா என்ற பகுதிகளுள. தென் அமெரிக்காவில் பிரேஸில், கொலம்பியா, கயானா, ஆர்ஜென்றினா, பொலிவியா, பெரு, உருக்வே, பெருக்வே, ஈக்வேடார் முதலான பாகங்கள் அமைந்துள. ஓஷியானியாவைச் சேர்ந்த தீவுகளிற் பெரியவை ஆஸ்ட்ரேலியா, நியூஸீலண்ட், பாலிநேஷியா என்பனவாம். நம்மையாளும் சக்ரவர்த்தியாகிய ஜியார்ஜ் மன்னருக்கு இவ்வைந்து கண்டங்களிலும் சொந்தமான நாடுகளுண்டு. ஆதலால் பிரிட்டிஷ் இராஜ்யத்தில் சூரியாஸ்தமனங் கிடையாதென்று புகழ்ந்துபேசுவர். ஜெர்மனிதேசத்திற்கு ஆபிரிக்காகண்டத்தில், சிலபாகமும் பஸிபிக்சமுத்திரத்தில் சிலதீவுகளும் உள. பிரான்ஸ்தேசத்திற்கும் ஆபிரிக்காகண்டத்தில் சிலபாகமும், மடகாஸ்கர்முதலான தீவுகளும், இந்தியாவில் புதுச்சேரி, மாகி, சந்தர்நாகூர் முதலானஇடங்களும், கம்போடியா, கொச்சின்சைனா முதலான தேசங்களும் சொந்தம்.

அத்தியாயம் II

# ஈரோப் கண்டம்

1. தேசங்கள். ஈரோப் கண்டத்தில் 18 நாடுகளிருக்கின்றன. அவை விஸ்தீரணம், வளம், ஜாதி, மதம் இவைகளில் வேறுபாடுள்ளன.

| நாடு. | சதுரமைல் ஆயிரம் | ஜனத்தொகை மில்லியன் | தலைநகர் | பெரிய பட்டணம் |
|---|---|---|---|---|
| 1. க்ரேற்று ப்ரிட்டன் அயர்லண்ட் | 120 | 41 | லண்டன் | லண்டன் |
| 2. ப்ரான்ஸ் | 204 | 38 | பாரிஸ் | பாரிஸ் |
| 3. பெல்ஜியம் | 11 | 6 | ப்ரஸ்ல்ஸ் | ப்ரஸ்ல்ஸ் |
| 4. ஹாலண்டு | $12\frac{1}{2}$ | 4 | ஹேக் | ஆம்ஸ்டர்டாம் |
| 5. ஸ்விட்ஸர்லண்டு | 19 | 3 | பேர்ணி | ஜெனீவா |
| 6. ஜெர்மனி | 222 | 67 | பெர்லின் | பெர்லின் |
| 7. ஆஸ்டரியா ஹங்கரி | 241 | 50 | வீயன்ஞ | வீயன்ஞ |
| 8. டென்மார்க் | 14 | 2 | கோப்பன்ஹாபன் | கோப்பன்ஹாபன் |

| நாடு. | சதுரமைல் ஆயிரம் | ஜனத்தொகை மில்லியன் | தலைநகர் | பெரிய பட்டணம் |
|---|---|---|---|---|
| 9. நார்வே-ஸ்வீடன் | 294 | 7 | க்ரிஸ்டியானு ஸ்டாக்ஹாம் | க்ரிஸ்டியானு ஸ்டாக்ஹாம் |
| 10. ரஷ்யா | 2000 | 88 | பெட்ரோகிராட் | பெட்ரோகிராட் |
| 11. டர்க்கி | 64 | 5 | கான்ஸ்டாண்டி. நோபிள் | கான்ஸ்டாண்டிநோபிள் |
| 12. மாண்டிநீக்ரோ | 3½ | ¼ | ஸெற்றிஞ்சே | பாட்கோரிட்ஸா |
| 13. ஸெர்வியா | 19 | 2 | பெல்கிரேட் | பெல்கிரேட் |
| 14. ருமேனியா | 48 | 6 | புக்காரெஸ்ட் | புக்காரெஸ்ட் |
| 15. க்ரீஸ் | 25 | 2 | ஏதென்ஸ் | ஏதென்ஸ் |
| 16. இற்றலி | 114 | 30 | ரோம் | நேபிள்ஸ் |
| 17. ஸ்பெயின் | 198 | 17 | மாட்ரிட் | மாட்ரிட் |
| 18. போர்ட்டுக்கல் | 34 | 5 | லிஸ்பன் | லிஸ்பன் |

2. அதிகாரிகள். இந்தக் கண்டத்திற்குப் பெரிய அதிகாரிகள் அறுவர்:—

க்ரேற்றுப்ரிட்டன், ஜெர்மனி, ரஷ்யா, ப்ரான்ஸ், ஆஸ்ட்ரியா, இற்றலி.

# 1. அறுவர் தளம் (சேனை)

| | யுத்த காலம் | காலாட் படை | சமாதான காலம். | | |
|---|---|---|---|---|---|
| | | | பீரங்கி | குதிரை | மொத்தம் |
| ரஷ்யா | 5,000,000 | ,, | 7230,000 | 120,000 | 1350,000 |
| ப்ரான்ஸ் | 4,000,000 | 361,[illegible]48 | 97,571<br>* 73,368 | 113,356 | 645,644 |
| ப்ரிட்டன் | 380,000 | 95,799 | 32,549<br>26,443* | 14,709 | 169,500 |
| ஜெர்மனி | 5,000,000 | 128,596 | 85,703 | 72,558 | 790,985 |
| ஆஸ்ட்ரியா | 2,506,000 | 265,444 | 50,196<br>488,344* | 57,174 | 424,258 |
| இற்றலி | 2,000,000 | 169,627 | 51,615<br>55,008* | 28,422 | 304,672 |

* மற்றவை.

## 2. அறுவர் கப்பற்படை.

| | டிரெட் நாட் | மற்ற யுத்தக் கப்பல் | டார்ப்பீடோ போட் டெஸ்-டிராயர் | சப்மரீன் | க்ரூஸர் | ஆட்கள் ஆயிரக் கணக்கில் |
|---|---|---|---|---|---|---|
| ப்ரிட்டன் | 36 | 88 | 362 | 85 | 134 | 151,000 |
| ப்ரான்ஸ் | 30 | 11 | 246 | 76 | 37 | 70,000 |
| ரஷ்யா | 0 | 8 | 102 | 25 | 31 | 55,000 |
| ஜெர்மனி | 25 | 19 | 211 | { 24<br>50 | 52 | 79,000 |
| ஆஸ்ட்ரியா | 4 | 12 | 81 | 6 | 12 | 20,000 |
| இற்றலி | 8 | 8 | 132 | 25 | 25 | 37,000 |

டிரெட் நாட் என்றால் ஒன்றிற்கும் பயப்படாத பெரிய யுத்தக்கப்பல்கள். டார்ப்பீடோ போட்டெஸ்டிராயர் என்பது யுத்தக்கப்பல்களை யுடைக்கத்தக்க குண்டுகளையுடைய படவுகளை யுடைக்கும் கப்பல்கள். சப்மரீன் என்பது சமுத்திரத்தில் மூழ்கி எழும்பும் கப்பல். க்ரூஸர் என்பது சத்துருவைத் தேடித்திரியுங் கப்பல், அல்லது மற்ற மரக்கலங்களைக் காப்பாற்றும் சண்டைக் கப்பல்.

## 3. அறுவர் விமானங்கள்.

(ஆகாயப் பறவைகள்)

| | ஆகாயக் கப்பல்கள் | ஆகாய, கடல், பறவைகள் | யுத்தக் கப்பல்கள் |
|---|---|---|---|
| ப்ரான்ஸ் | 15 | 600 | 30 |
| ஜெர்மனி | 24 | 500 | 37 |
| ரஷியா | 10 | 200 | 13 |
| ப்ரிட்டன் | 8 | 200 | 97 |
| ஆஸ்ட்ரியா | 8 | 100 | 6 |
| இற்றலி | 9 | 150 | ,, |

பறவைகள்—தட்டையான பறக்கும் விமானங்கள்.

## 4. அறுவர் யுத்தபண்டு.

| | | |
|---|---|---|
| ப்ரான்ஸ் | 189,761,100 | பவுன் |
| ப்ரிட்டன் | ... 38,132,000 | ,, |
| ரஷியா | 167,314,000 | ,, |
| ஜெர்மனி | 83,441,000 | ,, |
| ஆஸ்ட்ரியா | 64,166,000 | ,, |
| இற்றலி | 48,601,000 | ,, |

## 5. மற்ற ஈரோப்பிலுள்ள இராஜ்யங்களின் யுத்த தளங்கள்.

| | |
|---|---|
| ரூமேனியா | 700,000 |
| ஸ்பெயின் | 600,000 |
| டர்க்கி | 600,006 |
| பல்கேரியா | 550,000 |
| ஸெர்விபா | 300,000 |
| பெல்ஜியம் | 300,000 |
| ஹாலண்ட் | 175,000 |
| மான்டிநீக்ரோ | 30,000 |

3. ஆட்சி. டர்க்கி தன்னரசாட்சிநாடு. ரஷ்யாவும் அனேகமாக தன்னரசாட்சி நாடாயினும் அதில் டுமோ என்ற சபை ஏற்பட்டிருக்கின்றது. ஜெர்மனியில் குடிகள் சபையென்றும் இராஜசபையென்றும் இரண்டுள. எல்லாமாகாணங்களுக்கும் முதன்மை கேய்ஸர், ப்ரான்ஸ், ஸ்விட்ஸர்லண்டு, போர்ட்டுக்கல் இவை குடியரசுநாடுகளாம். ப்ரிட்டன், ஆஸ்ட்ரியா முதலான தேசங்கள் அரசருடைய ஆட்சிக்கு உட்பட்டவை.

---

## அத்தியாயம் III

---

# ப்ரிட்டிஷ் தீவுகள்

1. தீவுகள்.—வேல்ஸ்சேர்ந்த இங்கிலண்டு, ஸ்காட்லண்டு இரண்டிற்கும் க்ரேற்றுபிரிட்டன் என்றுபெயர். இவைதவிர அயர்லண்டு மூன்றாவதுதீவாம். இம்மூன்றுக்கும் பொதுப் பெயர் ஐக்கிய இராஜ்யம் என்பதே. இவற்றைச்சேர்ந்த சிறு தீவுகள் 1500-க்கு மேற்பட்டன. க்ரேற்றுப்ரிட்டன் தீவே எல்லாவற்றிலும்பெரிது. அதன் பரப்பு 90,000 சதுரமைல். அயர்லாண்டுதீவின்பரப்பு 32,360 சதுரமைல். க்ரேற்றுப்ரிட்டனுக்கும் அயர்லண்டுக்கும் இடையில் அயிரிஷ் கடலிருக்கின்றது. இந்தக்கடல் அதிக ஆழமுள்ளது. இங்கிலண்டு ஸ்காட்லண்டு அரசுகள் 1603ல் ஒன்றுசேர்ந்தன. அவற்றின் ஓலக்கங்கள் (பார்லிமென்றுகள்) 1707-ல் ஒன்றாயின. க்ரேற்று ப்ரிட்டன் அயர்லண்டுதீவுகளின் ஓலக்கங்கள் 1800-ல் ஒன்றாயின. சுய ஆட்சி வேண்டுமென்று அயர்லாண்டு கிளாட்ஸ்டன் காலமுதல் வெகு காலமாக வாதாடி அதை இப்பொழுது ஒருவாறு பெற்றிருக்கின்றது எனலாம்.

2. பரப்பும் ஜனத்தொகையும். இத்தீவுகளின் பரப்பும் ஜனத்தொகையும் பின்வரையப் பட்டிருக்கின்றன.

| | சதுரமைல் | ஜனத்தொகை. |
|---|---|---|
| இங்கிலண்டுவேல்ஸ் | 58,324 | 32,527,743 |
| ஸ்காட்லண்டு | 30,405 | 4,472,102 |
| அயர்லண்டு | 32,360 | 4,458,775 |
| மான்தீவு, சானல்தீவுகள் | 302 | 150,370. |
| | | மொத்தம் 41,609,091 |

இங்கிலண்டின்நீளம் உயர்ந்தது 430, அகலம், உயர்ந்தது 370 மைல்; ஸ்காட்லண்டின்நீளம் உயர்ந்தது 288, அகலம் உயர்ந்தது 176 மைல்; அயர்லண்டின்நீளம் உயர்ந்தது 302, அகலம் உயர்ந்தது 174 மைல்.

3. சீதோஷ்ணம். இங்கிலண்டின் சீதமும், உஷ்ணமும் மத்திமம். சாந்தமும் ஈரமும் உள்ளதாயிருக்கும். மேலக்கரை கிழக்கரையைவிட உஷ்ணமாகயிருக்கும். இதற்குக் காரணம் குடாக்கடல் சூடான நீரோட்டமே. இத்தீவுகளில் எப்பொழுதும் மேகமாயிருக்கும். ஒவ்வொரு தினமும் மழை பெய்யலாம். என்றைக்காயினும் மழை பொழியலாம். மாகாணங்களில் அதிகமழை வருஷிக்கும் இடம் கம்பர்லண்டு; குறைந்த மழையுள்ள இடம் கேம்பிரிட்ஜ். கல்ப் ஸ்ட்ரீமிலிருந்து தென்மேற்குக்காற்று மூன்றிலிரண்டு நாள் வீசுவதால் அட்லண்டிக் சமுத்திரக்கரையோரம் வெதுவெதுப்பாயிருக்கும். தென்கிழக்கில் வேனிற் காலத்தில் சூடும் மாரிக்காலத்தில் குளிர்ச்சியும் அதிகம். ஸ்காட்லண்டில் இங்கிலண்டைவிடக் குளிர்ச்சியும் ஈரமும் அதிகம், மாரிக்காலமும் அதிகம். வேனிற்காலத்தில் குளிருண்டு. மாரிக்காலத்தில் தீவில் அனேகபாகம் சூடாயிருக்கும். மேலக்கரையில் மழை

இரண்டுபங்கு வருஷிக்கும். எங்கும் பச்சைகாணப்படு மாதலால் அயர்லண்ட்தீவு மரகதத்தீவு என்றழைக்கப் படும். இதில் வட அட்லண்டிக் சமுத்திரத்திலிருந்து காற்று அடிப்பதால் ஆகாயத்தில் ஈரம் அதிகமாகப் படிந்திருக்கும். ஐரோப்பகண்டத்திலுள்ள தேசம் எதனிலும் இதில் மாரி மிகுதி.

4. முக்கிய நதிகள்.—இங்கிலண்டில் ஹம்பர், தெம்ஸ் நதிகளும், ஸ்காட்லண்டில் க்ளைட், போர்த் நதிகளும், அயர்லண்டில் ஷானன் நதியும் முக்கியமானவை. ஹம்பர் நதிக்கு அநேக உபநதிகளுண்டு. அவற்றில் முக்கியமான வை அவுஸ், ட்ரெண்ட். பர்ட்டன் பட்டணம் ட்ரெண்ட் நதிக்கரையிலிருக்கின்றது. அதில் சட்டி பானை செய்தலும், இரும்பு வேலைகளும், நிலக்கரிச் சுரங்கங்களும் விசேடமாக ஏற்பட்டிருக்கின்றன. தெம்ஸ் நதியின் நீளம் 215 மைல். 160 மைல் தூரம் கப்பல்கள் வரும். ஆக்ஸ்பர்டு, வின்சர், ரிச்மண்டு முக்கிய பட்டணங்கள் இதனருகே காணப்படும். க்ளைட் நதியின் பேரில் கிளாஸ்கோ நகரமும், போர்த் நதிக் கரையில் எடின்பரோ நகரமும், லிப்பி முகத்துவாரத்தில் டப்லின் நகரமும், லீ முகத்துவாரத்தில் கார்க் நகரமும் துலங்கும். ஷானன் நதியின் நீளம் 220 மைல்.

5 விளைவு: ஓட்ஸ், கோதுமை, பார்லி விளையும்நிலம் கிரேற்றுபிரிட்டனில் 100 க்கு 22 பங்கும் அயர்லண்டில் 100-க்கு 7-பங்குமாம், பயறு பச்சைகள் ப்ரிட்டனில் 11-பங் கும் அயர்லண்டில் 13-பங்கும், மேய்ச்சல் நிலம் ப்ரிட்டனில் 53-பங்கும் அயர்லண்டில் 73-பங்குமாம். பழவகை, ப்ரிட்ட னில் 3-பங்காம். அயர்லண்டில் சணல் 2 பங்காம். உலோ கங்களில் இரும்பும் கரியும் மிகுதி. இவையன்றி ஈயம், தக ரம், துத்தநாகம், செம்பு இவைகளும் விளைகின்றன. இரும்பு

மட்டுமே வருஷத்திற்கு 28½கோடி விலை மதிப்புள்ளது எடுக்கப்படுகின்றது. 1907-ல் 267 மில்லியன் டன் கரி விளைந்தது. நிலக்கரிவிளையும் பரப்பு 12, 000 சதுரமைல். நார்தம்பர்லண்டு, டர்ஹாம், யார்க் ஷயர், டெர்பிஷயர், லங்கஷயர், நார்த்ஸ்டாபோர்டு, சவுதஸ்டாபோர்டு, பிரிஸ்டல், சவுத்வேல்ஸ்முதலான இடங்களில் இது வெட்டியெடுக்கப்படுகின்றது. இரும்பு க்ளீவ்லண்டு ஜில்லாவில் அகப்படுகிறது. செம்பு முக்கியமாக காரன்வால், டெவனிலும், ஸ்லேட்டு வேல்ஸிலும் மிகுதி.

6. கைத்தொழில் —இரும்பு வேலை 'பிளாக் நாடு' இல் அதிகம். பர்மிங்ஹாம், உல்வர்ஹாம்டன், டட்லி முதலான பட்டணங்களில் இத்தொழில் விசேடமாக நடக்கிறது. யந்திரங்கள் மான்செஸ்டர், லீட்ஸ் நகர்களிலும், உருக்குச் சாமான்கள் ஷெப்பீல்டு நகரிலும் மிகுதியாகச் செய்யப்படுகின்றன. நூல் நெசவு தென்லங்கஷயரிலும், மான்செஸ்டர் பக்கத்திலும், கிளாஸ்கோவிற்கு சமீபத்தில் பெய்ஸ்லி நகரிலும் நடக்கின்றது. கப்பல்கட்டுதல் ஸ்காட்லண்டில் க்ளைடு நதிக்கரையில் கிளாஸ்கோ முதலான பட்டணங்களிலும், அயர்லண்டில் பெல்பாஸ்டிலும், நியூக்காஸில் முதலானதுறைமுகங்களிலும் நடக்கின்றது. கம்பள நெசவு யார்க்ஷயரில் லீட்ஸ், பிராட்போர்டு, ஹட்டர்ஸ்பீல்டு முதலான பட்டணங்களிலும், பானை சட்டிகள் ஸ்டோக் நகரிலும், இரசாயன சாமான்கள் லங்கஷயரிலும், தோல் தொழில் நார்தாம்டனிலும் நடை பெறுகின்றன.

7. ஏற்றுமதி இறக்குமதி.—இந்தியாவுக்குமட்டும் 1907-ல் பஞ்சுத் துணியில் 25,698,000 பவுனுக்கும், பஞ்சு நூல் 1,953,000 பவுனுக்கும், இரும்பு, இரும்புச் சாமான்கள் 5,845,000 பவுனுக்கும், செம்பு, செம்புச் சாமான்கள்

746,000 பவுனுக்கும், யந்திரம் 5,363,000 பவுனுக்கும், கம்பளம் 950,000 பவுனுக்கும் ஏற்றுமதியாயின. 1907-ல் இந்தியாவிலிருந்து இறக்குமதி பஞ்சு (2,331,000), கோதுமை(7,188,000), சணல்(8,055,000), விதைகள்(4,865,000) தேயிலை (5,755,000), அரிசி (1,897,000), நீலம் (142,000) பவுனுக்கு என்றால் மற்ற அயல் நாட்டுகளுக்கு ஏற்றுமதியும் அவற்றினின்று இறக்குமதியும் எவ்வளவு இருக்குமென்று எளிதில் யூகிக்கலாம். இத்தீவுகளுக்குக் கோதுமை யூனைட்டெட் ஸ்டேட்ஸ், கானடா, ரஷ்யா, ஆஸ்ட்ரியா தேசங்களினின்றும் வருகின்றது. பார்லி, ஓட்ஸ், ரஷ்யா, யூனைட்டெட் ஸ்டேட்ஸிலிருந்து வருகின்றன. வெண்ணெய் ஆஸ்ட்ரேலியா, கானடாவி னின்றும், பாற்கட்டி யூனைட்டெட் ஸ்டேட்ஸ், கானடாவினின்றும் வரும். கரும்புச் சர்க்கரை வெஸ்டு இண்டீஸிலிருந்தும், பீவர் சர்க்கரை ப்ரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்ட்ரியாவிலிருந்தும், காபி நடு அமெரிக்கா, ப்ரேசில், வெஸ்ட் இண்டீஸிலிருந்தும், ஒயின் ப்ரான்ஸ், ஸ்பெயின், ஆஸ்ட்ரேலியா, காலிபோர்னியாவி னின்றும், சுருட்டுகள் இந்தியா, ஹாவனா, மானிலாவி னின்றும் இறங்கும். இறைச்சி யூனைட்டெட் ஸ்டேட்ஸ், ஆர்ஜென்டினா, கானடா. ஆஸ்ட்ரேலியா, நியூஸீலண்டு முதலான இடங்களினின்றும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. பழவர்க்கங்கள் உலகத்தில் ஒவ்வொரு பாகத்தினின்றும் கொண்டுவரப்படுகின்றன. ஆகவே உலகத்தில் விளையும் பொருள்களுக்கெல்லாம் அழிவிடம் இத்தீவுகளே.

8. முக்கிய பட்டணங்கள்.—ஒவ்வொரு தீவிலுமுள்ள முக்கியமான பட்டணங்களாவன :—

### இங்கிலண்டு.

லண்டன் (72 லக்ஷம்), மான்செஸ்டர் ($8\frac{3}{4}$), லிவர்ப்பூல் ($8\frac{1}{2}$), பர்மிங்ஹாம் (6), லீட்ஸ் ($4\frac{3}{4}$), ஷெப்பீல்டு ($4\frac{1}{2}$),

ப்ரிஸ்டல் ($3\frac{3}{4}$), நியூக்காஸில் ($2\frac{3}{4}$), ஹல் ($2\frac{3}{4}$). நாட்டிங்ஹாம் ($2\frac{1}{2}$), லீஸ்டர் ($2\frac{1}{2}$), போர்ட்ஸ்மத் (2), ப்ளிமத் (2), கார்டிப் (2), ஹாலிபாக்ஸ் ($1\frac{1}{4}$)

### ஸ்காட்லண்டு.

க்ளாஸ்கோ ($8\frac{1}{2}$ லக்ஷம்), எடின்பரோ ($3\frac{1}{2}$), அபர்டீன் ($1\frac{3}{4}$), டண்டி ($1\frac{5}{8}$), பெய்ஸ்லி (90,000), லீத் (82,000), க்ரீநாக் (70,000)

### அயர்லண்டு.

டப்லின் ($3\frac{3}{4}$ லக்ஷம்), பெல்பாஸ்டு ($3\frac{1}{2}$), கார்க் (76,000), லண்டன்டெரி (40,000), லிமெரிக் (38,000), வாட்டர்போர்டு (27,600)

9. கப்பல் துறைமுகங்கள். ஹார்விசிலிருந்து ஹாலண்டிற்குப் புகைக்கப்பல்கள் போகின்றன. ப்ரான்ஸ் தேசத்திற்கு டோவர், போக்ஸ்டோன், நீயுஹேவன் துறைமுகங்களிலிருந்து போகலாம். அமெரிக்காவிற்குப் போகிறவர்கள் சவுதாம்டனினின்று புறப்படுவர். லிவர்ப்பூல், க்ளாஸ்கோவிலிருந்தும் ஸ்டீமர்கள் போகும் ஆஸ்ட்ரேலியாவிற்குப் போகும் நீராவிக்கப்பல்கள் சவுதாம்டன், லண்டன் நகரங்களினின்று வெளிப்படும். இந்தியாவிற்கு லண்டன், ப்ளிமத், சவுதாம்டன், லிவர்ப்பூல் முதலான துறைமுகங்களினின்று கப்பல்கள் போகும். மெயில் இந்தியாவிற்கு வெள்ளிக்கிழமை மாலையில் லண்டனினின்று புறப்படும். அது டோவர், கலே, மார்க்கமாய் ஈரோப்கண்டத்திற்குப்போய் இருப்புப்பாதை மூலமாக இற்றலித் துறைமுகமாகிய பிரிண்டிஸிக்குச்சென்று, விரைவாய்ச்செல்லும் நீராவிக்கப்பலில் போடப்படும்; அதுபோர்ட் செயிட் துறைமுகத்திற்குப் போனவுடன் பி. அண்டு ஓ. ஸ்டீமர் அதை எடுத்துக்கொண்டு போகத்தயாராயிருக்கும். பின் சூயெஸ் கால்வாய்வழியாக ரெட்ஸீயைக்கடந்து ஏட

னுக்குவர நான்கு தினங்களாகும். லண்டனிலிருந்துபுறப்பட்டு இரண்டுவாரத்திற்குள் பம்பாய் நகரத்தில் வந்து சேரும். பம்பாயிலிருந்து, சென்னை, டெல்லி, கல்கத்தா, அலகபாத் முதலான இடங்களுக்கு ரெயில் வண்டி மார்க்கமாய் மெயில் வந்துசேரும். பம்பாயிலிருந்து சென்னைக்கு மறுநாள்வரும்.

10. ரேயில்வே.—லண்டன் நகரிலிருந்து எத்திசையிலும் இருப்புத்தொடர்கள் காணப்படுமாதலால் புதிதாக அங்கே போகிறவன் திகைப்பான் என்பதில் ஐயமில்லை. மூன்றுபாதைகள் ஸ்காட்லண்டிற்குச் செல்கின்றன. அவற்றிற்கு கிழக்கரை; நடுநாடு, வடமேற்குப் பாதைகளென்றுபெயர். பெரிய மேனுட்டு இருப்புப்பாதையும், தென்மேற்குத் தொடரும் மேற்றிசைக்கும் தென்மேற்றிசைக்கும் போகின்றன. ப்ரான்ஸ் கரைப்பட்டணங்களை நோக்கிச் செல்லும் தொடர்களும் உள. இவ்வாறு லண்டனிலிருந்து வெளிபோகும் இருப்புப் பாதைகளுக்கும் இருப்புவண்டித் தொடர்களுக்கும் கணக்கில்லை. இதற்குக்காரணம் சர்க்கார் இதில் தலையிடுவதில்லை. பிரைவேற்றுக்கம்பெனிகளே இருப்புப்பாதைகளையும் இருப்புத்தொடர்களையும் போட்டிருக்கின்றனர். அன்றியும் வெளிப்போகும் பிரயாணிகளும் அதிகம். எடின்பரோ ஸ்டேஷனுக்கு 500 பிரயாணித்தொடர் வண்டிகள் ஒவ்வொருதினமும் வந்துபோகின்றன. மலைப்பக்கங்களில் இருப்புப் பாதைகள்சொற்பம். ஸமஸ்தானங்களில் அவை நெருக்கமாகயிருக்கும். அயர்லண்டில் ரெயில்கள் பெல்பாஸ்ட், டப்ளின், வாட்டர்போர்டு, வெக்ஸ்போர்டு துறைமுகங்களிலிருந்து எதிர்க்கரையிலுள்ள லண்டன் டெரி, லிமரிக், கார்க் பட்டணங்களுக்குச் செல்கின்றன. ப்ரிட்டனிலிருந்து அயர்லண்டிற்கு நேரே போக விரும்புகிறவர்கள் வேல்ஸில் உள்ள ஹோலிஹெட் மார்க்கமாக டப்ளின் நகருக்குப் போவார்கள்.

11. சர்வகலாசாலைகள்.—இங்கிலண்டில் ஆக்ஸ்போர்டு, கேம்ப்ரிட்ஜ், சர்வகலாசாலைகள் வெகுபுராதனமானவை. இவையன்றி, லண்டன், டர்ஹாம், பர்மிங்ஹாம், முதலானவையும், ஸ்காட்லண்டில் எடின்பரோ, ஆண்டரூஸ், அபர்டீன், கிலாஸ்கோ சர்வகலாசாலைகளும், அயர்லண்டில் டப்ளின் கலாசாலையும் முக்கியமானவை. சட்டப்பயிற்சிக்கு இங்கிலண்டில் கிரே இன், லிங்கன் இன், மிடில் டெம்பிள், இன்னர் டெம்பிள் என்று நான்கு சபைகள் ஏற்பட்டிருக்கின்றன. தேறி வெளிவருபவர்களுக்குப் பாரிஸ்டர் என்று பெயர். இவர்கள் கோர்ட்டுகளில் வக்கலாத்தன்னியில் கேசு நடத்துவார்கள். இவர்களில் பெயர்பெற்ற பாரீஸ்டர்களுக்குக் கிங்ஸ் கவுன்சல் (கெ.ஸி.) என்றுபெயர். அவர்களுக்கு அதிகப் பீஸ் (தொகை) கொடுக்கவேண்டும். அவர்கள் அணியும் கவுன் (அங்கி) துணியினாலாக்கப்படாமல் பட்டினாற் செய்யப்படும்.

12. ஆட்சிமுறை.—இம்மூன்று தீவுகள் சேர்ந்த ஐக்கிய இராஜ்யத்திற்கு ஒரு அரசனும், இருபகுதியுள்ள ஓலக்கமும் உண்டு. ஆட்சிக்குத் தலைமை அரசனுயினும் சட்டஞ்செய்வது ஓலக்கமே. ஓலக்கஞ் செய்துள்ள சட்டதிட்டங்களின்படி அரசு செய்யும் வரையில் அரசுவுரிமை ஏற்படுகின்றது.

ஓலக்கம்.—ஓலக்கத்தின் ஒரு பகுதியாகிய ஹவுஸ் ஆப் லாார்ட்ஸ் சபையில் பாரம்பரைப் பிரபுக்களும், கண்காணிகள், பெரிய கண்காணிகளும் அங்கத்தினராவர். இவர்கள் ஆமோதித்த பின்னரே எந்தச் சட்டமும் அரசனுடைய சம்மதம் பெற அனுப்பப்படும். இவர்களே உயர்ந்த அப்பீல் கோர்ட்டார் ஆவர். இந்த நியாய வேலை பார்ப்பவர் லார்டு சான்ஸலரும், அப்பீல் லார்டுகள் நால்வரும், உயர்ந்த ஜட்ஜி ஸ்தானங்களை வகித்த மற்றப் பிரபுக்களுமே. சாதாரண பிரபுக்களுக்கு இந்த நியாயந்தீர்க்கும் வேலையில் சம்மந்தமில்லை.

பிரபுக்கள் சபையைச் சேர்ந்த கண்காணிகள், பெரிய கண்காணிகள் இவர்களுக்குப் பரம்பரை பாத்தியம் கிடையாது. இராணுவம், கப்பற்சேனை, கல்வி, தொழில், சாஸ்திரம், இராஜ்யமுறை இவைகளில் பேர்பெற்ற நிபுணர்களை முதன் மந்திரி தெரிந்தெடுத்த பின் அரசன் ஆமோதித்தால் அவர்கள் பிரபுக்களாகலாம். இப்புதிய பிரபுக்களின் தலைப் பிள்ளைகளுக்குப் பரம்பரை ஏற்படும். பிரபுக்கள் ஐவகைப் படுவர்—டியூக், மார்க்வெஸ், எர்ல், வைக்கவுண்ட், பாரன். உயர்ந்த பட்டம் டியூக், தாழ்ந்தது பாரன். இவர்களுக்குள் இவ்வித்தியாச மிருப்பினும் பிரபுக்கள் சபையில் அனைவரும் சமமே. தற்காலத்தில் இச்சபையில் 624-அங்கத்தினர் இருக்கின்றனர். இத்தொகையில் இராஜ வம்சத்தினர் 2, ஆர்ச்பிஷப் (பெரியகண்காணி) 2, பிஷப் (கண்காணி) 24, டியூக் 22, மார்க்வெஸ், 23, எர்ல் 124, வைக்கவுண்ட் 40,- பாரன் 333, ஸ்காட்லண்டு 16, அயர்லண்டு 28. ஸ்காட்டிஷ் பிரபுக்கள் 16-ம் மற்றப்பிரபுக்களின் பிரதிநிதிகளாம். இவர்களுக்கு ஸ்தானம் ஒலக்கம் உலையும் வரையே. ஐரிஷ்ப்பிரபுக்கள் இருபத்தெண்மருக்கும் ஸ்தானங் கிடைத்தது முதல் ஆயிசு முடிவுவரையுண்டு.

மற்றொரு பகுதியாகிய அவுஸ் ஆப் காமன்ஸ் சபையில் ஜனங்களின் பிரதிநிதிகள் அங்கத்தினராவர். தீர்வை ஏற்படுத்தல், செலவுக்கு உத்தரவளித்தல், இந்த இரண்டு அதிகாரங்களும் இந்தப் பகுதிக்கே உரியன. இச் சபைக்கு மெம்பராகத் தெரிந்தெடுப்பவருக்குச் சொந்தமான வீடிருக்கவேண்டும், அல்லது வருஷத்திற்கு 10-பவுன் வீட்டு வாடகை செலுத்தவேண்டும். ஜனப்பிரதிநிதி சபையில் அங்கத்தினர் 670: 40 மாகாணங்களடங்கிய இங்க்லண்டிற்கு 465, 12-மாகாணங்களுள்ள வேலஸ்க்கு 30: 33

மாகாணங்கள் சேர்ந்த ஸ்காட்லண்டிற்கு 72: 32 மாகாணங்கள் பொருந்திய அயர்லண்டிற்கு 103: ஆக்ஸ்போர்டு, கேம்ப்ரிட்ஜ், டப்ளின் சர்வகலாசாலை யொவ்வொன்றிற்கும் 2: லண்டன் சர்வகலாசாலைக்கு 1. எடின்பரோ, ஆன்ட்ரூஸ், கிளாஸ்கோ, அபர்டீன் சர்வகலாசாலைகளும் சேர்ந்து அனுப்பப்படுபவர் 2. ஒலக்க அங்கத்தினருக்குச் சம்பளம் கிடையாது. மந்திரிகளுக்கு உண்டு. புதுச் சட்டம் வரைதல், சட்டத்தை நிறைவேற்றுபவர்களை மேற்பார்த்தல், இராஜ்யவரும்படியை ஆளுதல், தீர்வை ஏற்படுத்தல், இவைகளே இச்சபையின் உரிமைகளாம். ஒருதரம் தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் தம் ஸ்தானத்தை இராஜிநாமாக் கொடுக்கமுடியாது. வேண்டுமானால் ஏதாயினும் பேருக்கு ஒரு அலுவலைப் பெற்றுக்கொண்டு விலகிக்கொள்ளலாம்.

மசோதாக்கள் சட்டங்கள் ஆவதற்குமுன் அவை இச்சபையிலும் பிரபுக்கள் சபையிலும் மூன்றுதரம் வாசிக்கப்படவேண்டும். அவர்கள் அங்கீகரித்தபின்னரே அவை அரசருக்கு அனுப்பப்படும். முதல்தரம் வாசிக்கப்பட்டவுடன் மசோதா அச்சிடப்பட்டு அங்கத்தினர்கட்குப் பிரதியனுப்பப்படும். இரண்டாவது வாசிப்புக்காலத்தில் மசோதாவின் காரணம், நியாயம் ஆராயப்படும். அதன்பின்னர் கமிட்டிக்கு அனுப்பப்படும். அப்பொழுது அதில் சீர்திருத்தமாவது மாறுதலாவது செய்யவேண்டியிருந்தால் அங்ஙனஞ்செய்யப்படும்.

அரசுரிமை.—(1) ஒலக்கத்தைக்கூட்டுதல், நிறுத்திவைத்தல், உலைத்தல். அரசசம்மதமின்னியில் ஒலக்கத்தால்செய்யப்பட்ட சட்டம் சட்டமாகாது; (2) அரசன் பெயரிலேயே யுத்தம் ஆரம்பித்தலும், சமாதானஞ்செய்தலும், அயல்நாட்டினருடன் உடன்படிக்கைகள் முடித்தலும் நடக்கும்; (3) நீதிக்கு மூலம் அரசனே. நீதிபதிகள் அரசனால் நியமிக்கப்பெறுவர்;

அவர்கள் அரசனுக்குப் பதிலாட்கள். அரசன்பெயரிலே எல்லாக்குற்றவாளிகளும் குற்றஞ்சாட்டப்படுவார்கள். அரசனுக்குப்பிரியமிருந்தால் குற்றவிசாரணை எந்தப்படியி லிருந்தாலும் அதை நிறுத்திவிடலாம். குற்றவாளியென்று காணப்பட்டவனைமன்னிக்கலாம்; (4) கௌரவத்துக்குமூலம் அரசனே. பிரபு, நைட், முதலான பட்டங்களை அரசன் அளிக்கலாம். அயல் நாடுகளுக்குத் தூதர்கள், இராஜப்பிரதிநிதிகள், கவர்னர்கள், இராணுவம் கப்பல் இலாக்காக்களில் உத்தியோகஸ்தர்கள், மற்ற இராஜ்ய உத்தியோகஸ்தர்கள் அரசனால் நியமிக்கப் பெறுவர். (5) ஆங்க்லிக்கன் ஆலயங்களுக்கு அதிகாரிகள் எற்படுத்துமுரிமை அரசருக்கே; (6) நாணயம் அடித்தலும் நாணயத்தில் தரப்படும் சொரூபம், எழுத்து இவற்றைக்குறிப்பிடுதலும் அரச உரிமைகளாம்; (7) சொந்தக்காரனில்லாத சொத்துகள் அரசருக் குரியன. இத்தகைய அதிகாரங்கள் அரசருக்கு எற்பட்டிருப்பினும் அரசர் மந்திராலோசனைப்படியே நடக்கவேண்டியதாம். ஆதலால் தான் அரசர் தவறு செய்ய இயலாது என்பது பெருவழக்கு.

பிரிவிக் கவுன்சில்.—அரசருக்கு அந்தரங்க சபையே ஆலோசனைகூறும். அதில் எறக்குறைய 250 அங்கத்தினர் உண்டு. அதில் கட்டாயமாக இருக்கவேண்டிய அங்கத்தினர் 20–பெயர். அவர்களாவன—1. கஜனா முதல்பிரபு, 2. லார்டு ஹை சான்ஸெலர். ( ஆலோசனைத்தலைவர் ), 3. பிரிவிக் கவுன்ஸில் தலைவர். 4. கப்பசாலை ஆலோசனைத்தலைவர். 5 உள்நாட்டுக்காரியாதிகளை நடத்தும் இராஜாங்கக் காரியதரிசி. 6. வெளிநாட்டுக் காரியாதிகளைப் பார்க்கும் இராஜாங்கக் காரியதரிசி. 7. குடியேற்ற நாடுகளின் இராஜாங்கக் காரியதரிசி. 8. இந்தியா இராஜாங்கக் காரியதரிசி. 9. யுத்த இராஜாங்கக்காரியதரிசி. 10. கப்பற்சேனை முதல்பிரபு. இப்பதின்மர் தவிர 11. லார்டு பிரிவி ஸீல், 12. அயர்லாண்டு தேச

த்து லார்டு லெட்டினண்டு, 13 அயர்லண்டு முக்கியகாரியதரிசி, 14. ஸ்காட்லண்டு காரியதரிசி, 15. வியாபாரசங்கத்தலைவர், 16. போஸ்டுமாஸ்டர் ஜெனரல், 17. லோக்கல் கவர்மெண்டுசங்கத்தின் தலைவர். 18. லன்காஸ்டர் டச்சியின் ஆலோசனைத்தலைவர், 19. வேலைகளின் முதல்கமிஷனர், 20. கிருஷிசங்கத்தின் தலைவர் இவர்களும் அங்கத்தினரா யிருக்கலாம்.

காபினெட். அரசன் பேசுங்காலத்தில் நடக்கவேண்டியனவற்றை இச்சபை குறிப்பிடும். காபினெட் மெம்பர்கள் அரசனுடைய வேலையாட்கள். ப்ரிவிக்கவுன்சில் மெம்பர்கள் பிரபுக்கள். காபினெட்டிலுள்ள மெம்பர்கள் சொற்பம். ப்ரிவிக்கவுன்சில் மெம்பர்கள் ஏராளம். காபினெட் மெம்பர்களனைவரும் ப்ரிவிக்கவுன்சில் மெம்பர்களே. முதல்மந்திரி காபினெட்டைக் கூட்டுவர். ப்ரிவிக்கவுன்ஸிலைக் கூட்டுபவர் கவுன்சில் கிளர்க் என்பவர். காபினெட் அரசமுறையைத் தீர்மானிக்கும். ப்ரிவிக்கவுன்சில் அதன் தீர்மானத்தை அநேகமாக அங்கீகரிக்கும். ப்ரிவிக்கவுன்சில்மெம்பர்கள் அதிகரித்தபின் சிறிய சபையொன்று வேண்டியிருந்தது. அப்பொழுது உண்டானது காபினெட் சபை.

காபினெட், ப்ரிவிக்கவுன்சில் இவற்றில் ஒவ்வொருவரும் ப்ரிட்டிஷ் குடியாயிருத்தல் வேண்டும். இவர் 'ரயிட் ஆனரபில்' என்று அழைக்கப்பெறுவர். அரசன் எவரையும் சபையைவிட்டு விலக்கிவிடலாம். இராஜரீக உரிமைப்படி ஆலோசனை சொல்லுபவர் காபினெட் அல்லது மந்திரிகள் சங்கத்தினரே. இவர்கள் அரசனால் தெரிந்தெடுக்கப்படினும் ஜனப்பிரதிநிதி சபையார் யார்யாரைப் பிரியப்படுகின்றனரோ அவர்களினின்றே வேண்டியவர்களை அரசர் பொறுக்கிக்கொள்வர். ஒவ்வொரு அரசருக்கும் பட்டாபிஷேகமானவுடன் சொந்தத்திற்கும் அரண்மனைச் செலவிற்

கும் வருஷத்திற்கு இவ்வளவு கொடுக்கிறதென்று ஓலக்கம் குறிப்பிடும். இராஜவம்சத்தினர்க்குப் பென்ஷனென்றும் வருஷாந்தரத் தொகையென்றும் கொடுப்பது வழக்கம்.

13. சமுத்திர முதன்மை.—இவ் ஐக்கிய இராஜ்யத் தீவுகள் கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் நாளடைவில் பெயர் பெற்றன. நான்கு திசைகளுக்கும் பிரிட்டிஷ் கப்பல்கள் போவதற்கு நடுஸ்தானமாயுள்ளவை பிரிட்டிஷ் தீவுகள். வியாபாரக் கப்பல்கள் அன்னிய நாடுகளுக்குப்போய் கொண்டுபோன சரக்குகளை விற்றுவிட்டு அவற்றில் கிடைக்கும் சரக்குகளைப்பெற்றுத் திரும்பவும்வரும். உலக வியாபாரத்திற்குரிய சரக்குகளைக் கொண்டு போகுங் கப்பல்கள் இங்கிலீஷ் கப்பல்களென்றே சொல்ல வேண்டும். ப்ரிட்டன் ஐஸ்வரியத்திற்கும் அதிகாரத்திற்கும் காரணம் ஆங்கிலேய வர்த்தகக் கப்பல்களே. ஆதலால் சமுத்திர வியாபாரத்தில் அதிகக்கவனஞ் செலுத்துவர் ஆங்கிலேயர். உடல், பொருள், ஆவி மூன்றிற்கும் மூலாதாரமாகக் கடலைக் கருதுவர் அத்தீவுகளிலுள்ளவர். அவர்கள் சமுத்திரத்தில் பெருவழிகளைக் [illegible]றுதல் இன்றியமையாத விஷயம். அவற்றைக் காத்தற் பொருட்டு பெரியமரக்கலங்களும் கப்பற் சேனைகளும் தேவை. அவைகளுஞ் சிறந்தவைகளா யிருத்தல்வேண்டும். இல்லாவிடின் அன்னிய நாட்டுக் கப்பல்கள் இடையூறுசெய்யும். தீவுகளைக்காப்பதற்கும், பிரிட்டிஷ் மகாராஜ்யத்தைப் பந்தோபஸ்தாய் வைத்தற்பொருட்டும், தீவுகளுக்கும் அன்னிய நாடுகளுக்கும் வர்த்தகம் இடையூறின்றி நடப்பதற்கும் மரக்கலச்சிறப்பு வேண்டியதவசியமாயிருந்தபடியால் வெகு காலமாகக் கிடைத்த அநுபவத்தின் பயனாக ப்ரிட்டிஷ் தீவுகள் தம் பெருமையைச் சமுத்திரத்தில் நாட்டின.

---

# அத்தியாயம் IV.

## ப்ரிட்டிஷ் மகா இராஜ்யம்

| கண்டம். நாடு. | கிடைத்த வருஷம் | விஸ்தீரணம் சதுரமைல். | ஜனத்தொகை ஆயிரக்கணக்கு ஏறக்குறைய |
|---|---|---|---|
| **ஈரோப்.** | | | |
| ஜிப்ரால்டர் | 1704 | $1\frac{7}{8}$ | 26 |
| மால்டா, கோஸோ | 1800 | 117 | 200 |
| ஹெலிகோலாண்ட் | | $0\frac{1}{4}$ | 2 |
| **ஏஷியா** | | | |
| ஏடன் | 1838 | 80 | 43 |
| ஸிலோன் | 1798 | 25,364 | $3\frac{1}{2}$ * மில்லியன் |
| ஸைப்ரஸ் | 1878 | 3584 | 237 |
| ஹாங்காங் | 1841 | 30 | 300 |

1890-ம் வருஷத்தில் ஹெலிகோலாண்ட் ஜெர்மனிக்குக் கொடுக்கப்பட்டது. இப்பொழுது நடக்கும் மஹாயுத்தத்தில் மறுபடி அது கைப்பற்றப்பட்டிருக்கிறது.

| கண்டம். நாடு. | கிடைத்த வருஷம். | விஸ்தீரணம் சதுரமைல். | ஜனத்தொகை ஆயிரக்கணக்கு ஏறக்குறைய |
|---|---|---|---|
| இந்தியா | | | |
| பிரிட்டிஷ் | 1625—1885 | 1574,450 | 350 * மில்லியன் |
| இராஜாக்கள் நாடு | | 714,768 | |
| லாபுவான் | 1846 | $30\frac{1}{4}$ | 8 |
| மலயா ஸ்டேட்ஸ் | 1885 | 25,009 | 678 |
| வடபோர்னியோ | 1840 | 27,500 | 200 |
| பீரிம் | 1855 | $4\frac{1}{2}$ | ,, |
| ஸ்ட்ரெயிட்ஸ் குடியேற்றங்கள் | 1765—1819 | 147 | 572 |
| வெய்-ஹா வெய் | 1898 | 285 | 120 |
| ஆப்ரிக்கா. | | | |
| அஸென்ஷன் தீவு | 1815 | 35 | நானூறு |
| பசுட்டோ நாடு | 1858 | 10290 | 350 |
| நடு ஆப்ரிக்கா | 1891 | ,, | 845 |

ஸிலோன் தீவு ஸ்காட்லெண்டை விடச்சிறிது. ஈரோப் கண்டத்தின் பாதி விஸ்தீரணமுள்ளது இந்தியா. வட போர்னியோ ஸ்காட்லாண்டுக்குச் சமம்.

| | | | |
|---|---|---|---|
| கீழ் ஆப்ரிக்கா | 1888 | 20,000 | 2½ * மில்லியன் |
| சோமாலிலாண்டு | 1884 | 2,76,000 | 2½ * மில்லியன் |
| கேப்காலனி | 1806—77 | 1,25,000 | 4 * மில்லியன் |
| மேல் ஆப்ரிக்கா | 1686—1901 | 7,50,000 | ” |
| ரோடிஷியா | 1889—1891 | 15,000 | 410 |
| மரீஷியஸ் | 1810 | 708 | 375 |
| நேட்டால் | 1838 | 42000 | 1108 |
| நைஜீரியா | 1885 | ” | 30 * மில்லியன் |
| ஹெலினு | 1651 | 47 | 3 |
| ஸேச்செல்ஸ | 1814 | 148 | 19 |
| யுகாந்தா | 1894 | ” | 300 |
| டிரான்ஸ்வால் | 1900 | 119000 | 1354 |
| ஆரஞ்சு குடியேற்றம் | | 48400 | 387 |
| **அமெரிக்கா** | | | |
| பகாமாஸ் | 1670 | 5450 | 53 |
| பார்போடாஸ் | 1605 | 166 | 195 |
| பெர்முடாஸ் | 1609 | 20 | 17 |
| கானடா | 1623—1760 | 3510,000 | 5½ * மில்லியன் |

கேப் காலனி ஆஸ்டரியன் மகாராஜ்யத்தை விடப் பெரிது. நேற்ருல் அயர்லண்டு தீவிற்குப் பாதி. கானடா ஈரோப் கண்டத்திற்கு சம விஸ்தீர்ணமுள்ளது. நியூபவுண்ட்லண்டு 1½ அயர்லண்டு என்று சொல்லலாம்.

| கண்டம். நாடு. | கிடைத்த வருஷம், | விஸ்தீரணம் சதுரமைல். | ஜனத்தொகை ஆயிரக்கணக்கு ஏறக்குறைய |
|---|---|---|---|
| பால்க்லண்ட் தீவுகள் | 1833 | 6500 | 2 |
| கயானு | 1803 | 109,000 | 300 |
| ஹாண்டுராஸ் | 1783—6 | 7562 | 37 |
| ஜமேக்கா, டர்க்தீவு | 1629—85 | 4424 | 770 |
| லீவர்டு தீவுகள் | 1626—1763 | 380 | 127 |
| நியூபவுண்ட்லண்ட் | 1583 | 40,200 | 217 |
| டிரினிடாட் | 1797 | 1754 | 277 |
| விண்ட்வேர்டு தீவுகள் | 1605—1803 | 623 | 160 |
| ஆஸ்ட்ரலேஷியா | | | |
| பிஜிதீவுகள் | 1874—81 | 7754 | 120 |
| புதுதென்வேல்ஸ் | 1787 | 325,00[illegible] | 1395 |
| புதுவீலண்ட் | 1841 | 104,[illegible] | 930 |
| குயின்ஸ்லண்ட் | 1859 | [illegible]68,49[illegible] | 510 |
| புதுகினி | 1884 | 86,457 | 440 |
| தென் ஆஸ்ட்ரேலியா | 1836 | 203,690 | 370 |
| டாஸ்மேனியா | 1803 | 26,215 | 180 |
| விக்டோரியா | 1787 | 87,884 | 1200 |
| மேல் ஆஸ்ட்ரேலியா | 1829 | 10,60,000 | 250 |

## அத்தியாயம் V.

---

### ஜெர்மனி.

1. பொதுவுரை. முன் கூறியபடி ஜெர்மனி தேசம் ஈரோப்கண்டத்தில் ஒரு பாகம். இதை அந்தக்கண்டத்திற்கு ஹிருதயமென்று சொல்லலாம். இதற்கு வடக்கில் பால்டிக்கடலும் டென்மார்க் தேசமும், கிழக்கில் பொகீமியா, ரஷியா தேசங்களும், தெற்கில் ஸ்விட்ஸர்லெண்ட், ஆஸ்ட்ரியா, பொகீமியா தேசங்களும், மேற்கில் ஹாலண்ட், பெல்ஜியம், பிரான்ஸ் தேசங்களும் எல்லைகளாம். ஈரோப்பிலுள்ள ஆறு அதிகாரிகளில் இதுவொன்றும். இதன் சிறப்பு இராணுவமே. இதில் சென்ற நாற்பது வருஷங்களில் வியாபாரம், விவசாயம், தொழில், கைத்தொழில், சாஸ்திரக் கல்வி முதலானவை மிகுந்து பெரும்பொருள் படைத்த தேசமாய் விட்டது. இராணுவச்சிறப்புமன்றி போர்க்கப்பல் சிறப்பும் அடையவிரும்புகிறது. இது விஸ்தீரணத்தில் ரஷியா, ஆஸ்ட்ரியா-ஹங்கேரிக்கடுத்த மூன்றாவதாயும், ஜனத் தொகையில் ரஷியாவிற்கடுத்த இரண்டாவதாயும் இருக்கிறது. ஜெர்மன் வடக்குக் கடல் கரையின் நீளம் 293 மைல், பால்டிக் கடல் கரையின்நீளம் 927 மைல், கிழக்கே ரஷியா எல்லைக்கு 343 மைல். தேசத்தின் மொத்த சுற்று விஸ்தீரணம் 60,641,278 மைல்.

2. பிரிவுகள். ஜெர்மன் இராஜ்யத்தில் 26 பாகங்களுள. அவையாவன

இராஜ்யங்கள்-4.

பிரஷியா, பவேரியா, ஸாக்ஷனி, வுர்ட்டம்பர்க்.

### கிராண்ட் டச்சி (பெரிய இறையரசு)–6.

பேடன், ஹெஸ்ஸி, மெக்லென்பெர்க் ஷ்வெரின், சாக்ஸ் வெய்மார், மெக்லென்பெர்க் ஸ்டிரெலிட்ஸ், ஓல்டன் பெர்க்.

### டச்சி (இறையரசு)–5.

ப்ரன்ஸ்விக், சாக்ஸ் மேன்ஜென், சாகஸ் ஆல்டன் பெர்க், சாக்ஸ் கோபர்க் கோதா, அன்ஹால்ட்.

### பிரின்ஸிபாலிட்டிகள் (சிற்றரசுகள்)–7.

ஷ்வார்பெர்க் சண்டர்ஹாஸன், ஷ்வார்பெர்க் ரூடல் ஸ்டாட், வால்டெக், ரேஸ்க்ரீஸ், ரேஸ்ஷ்லீஸ், ஷாம்பெர்க் லிப்பி, லிப்பி.

### சுயாதீனமான பட்டணங்கள்–3.

லூபெக், பிரெமன், ஹாம்பெர்க்.

### மகராஜ நாடு-1.

ஆல்ஸேஸ் லொரேன்.

3. பிரிவுகளின் விஸ்தீரணம், ஜனத்தொகை. இவ்விருபத்தாறு பிரிவுகளின் சதுரமைல்களும் ஜனத்தொகையும் பின்வரும் அட்டவணையில் காணப்படும்.

| மாகாணங்களின் பெயர். | பரப்பு, சதுரமைல் | 1905-ம் வருஷத்தில் ஜனத்தொகை. | சதுர இஞ்சுக்கு ஜனத்தொகை. |
|---|---|---|---|
| **இராஜ்யங்கள்.** | | | |
| பிரஷியா | 134,616 | 37,293,324 | 277·3 |
| பவேரியா | 20,292 | 6,524,372 | 222·7 |
| ஸாக்ஸனி | 5,789 | 4,508,601 | 778·8 |
| வுர்ட்டம் பெர்க் | 7,534 | 2,302,179 | 305·5 |
| **கிராண்ட டச்சிகள்.** | | | |
| பேடன் | 5,823 | 2,010,728 | 345·3 |
| ஹெஸ்ஸி | 2,966 | 1,209,175 | 407·6 |
| மெக்லென் பெர்க் ஷ்வரின் | 5,068 | 625,045 | 123·3 |
| சாக்ஸ்-வெய்மார் | 1,397 | 388,095 | 277·8 |
| மெக்லென் பெர்க்-ஸ்டிரிலிட்ஸ் | 1,131 | 103,451 | 91·5 |
| ஓல்டன் பெர்க் | 2,482 | 438,856 | 176·8 |
| **டச்சிகள்.** | | | |
| ப்ரன்ஸ்விக் | 1,418 | 485,958 | 342·5 |
| சாக்ஸ்-மேனிஜென் | 953 | 268,916 | 282·2 |
| சாக்ஸ்-ஆல்டென் பெர்க் | 511 | 206,508 | 404·1 |
| சாக்ஸ்-கோபர்க்-கோதா | 764 | 242,432 | 317·3 |
| அன்ஹால்ட் | 888 | 328,029 | 369·4 |

| மாகாணங்களின் பெயர். | பரப்பு, சதுரமைல் | 1905-ம் வருஷத்தில் ஜனத்தொகை. | சதுர இஞ்சுக்கு ஜனத்தொகை. |
|---|---|---|---|
| **பிரின்ஸ்பாலிட்டிகள்.** | | | |
| ஷ்வார்ஸ பெர்க் ஸண்டர்ஹாஸன் | 333 | 85,152 | 255·7 |
| மேற்படி ரூடல் ஸ்டாட் | 363 | 96,835 | 266·7 |
| வால்டெக் | 433 | 59,127 | 136·5 |
| ரேஸ் கிரீஸ் | 122 | 144,584 | 453·2 |
| ரேஸ் ஷ்லீஸ் | 319 | 70,603 | 578·7 |
| ஷாம்பர்க் லிப்பி | 131 | 44,992 | 343·4 |
| லிப்பி | 469 | 145,577 | 310·4 |
| **சுயாதீன பட்டணங்கள்.** | | | |
| லூபெக் | 115 | 105,857 | 920·5 |
| பிரமென் | 99 | 263,440 | 2661·0 |
| ஹாம்பெர்க் | 160 | 874,878 | 5467·9 |
| **மகாராஜநாடு** | | | |
| ஆல்சேஸ் லொரேன் | 5604 | 1,814,564 | 323·8 |
| ஜர்மன் தேசம்—மொத்தம். | 208,780 | 60,641,[illegible]78 | 290· |

நாளது 1914-ம் வருஷத்தில் மொத்த ஜனத்தொகை ஏறக்குறைய 67-மில்லியனும். இது இந்தியாவின் ஜனத்தொகையில் 5-ல் ஒருபங்கு ஆகிறது.

4. கரை, தீவு.—ஜெர்மனியின் கரையோரம் ஆழமில்லை. ஆதலால் துறைமுகங்கள் சொற்பம். கீல் ஒன்றே துறைமுகமெனலாம். மற்றவை நதித்துறை முகங்களாம். அவை எம்டென், ப்ரமென், ஹாம்பெர்க், லூபெக், ஸ்டெட்டின், டான்ஸிக், கோனிக்ஸ்பெர்க், மெமெல் என்பனவாம். ஜெர்மன் கரையோரங்களில் எங்கும் கலன்கரை விளக்குகளுண்டு.

ஜெர்மன் சமுத்திரத்தில் ஹெலிகோலாண்ட் தீவும், பால்டிக்கடலில் ஆல்ஸென், மேமார்ன், ரூஜன் தீவுகளும் உண்டு. வடக்கு சமுத்திரத்தில் அலைகள் 12, 13 அடி உயரம் எழும்பும். பால்டிக் கடலில் பெரிய அலைகள் கிடையா. நதிசங்கமுகங்களில் சதுப்புகள் அல்லது களி நிலங்களுள. அவற்றிற்கு ஹாப் (f) என்று பெயர்.

5. நிலப்பரப்பு.—ஜெர்மனியில் பெரும்பாகமாகிய வடபாகமெல்லாம் ஒரே மைதானம். தென், நடு ஜெர்மனியில் பற்பல காக்ஷிகளுள. விஸ்தாரமான மேட்டுநிலங்களையும், வளம் பொருந்திய மருதநிலங்களையும், மலைத்தொடர்களையும், சிறிது உயரமான தனித்த சிறுமலைக்கூட்டங்களையும் பார்க்கலாம். பெரியமலங்காடுகள் மிகுதி. துரிங்கியன் மலங்காடும், பிளாக் (கரு) மலங்காடும், பொகிமியன்மலங்காடும், வாஸ்ஜெஸ்மலங்காடும் இவற்றிற் பெரியன.

6. நதிகள்.—ஜெர்மனிதேசத்தில் பெரிய நதிகள் நான்கு. அவை விஸ்டூலா, ஓடர், எல்ப், ரைன் என்பனவாம். இந்நான்கினும் சிறப்புற்றன எல்ப், ரைன் என்ற இரண்டுமே. இவையன்றி சிற்றாறுகளும், பலவுள. அவை எம்ஸ், வீசர்,

ப்ரேஜெல், மீமென் (டானூப்) மேமெல் என்பனவாம். ப்ரே ஜெல், வீசர், எம்ஸ், ஓடர் இவையே ஜெர்மனி நதிகளெனக் கூறவேண்டும். டானூப் (மீமென்)நதி ஜெர்மனியில் உற்பத்தியாகி ரஷியாவில் செல்லுகிறது. அதன்நீளம் 1750 மைல். அதில் ஐந்திலொருபாகமே ஜெர்மனிதேசத்தில் காணப்படும். அல்ம் என்ற இடம்வரை கப்பல் வரும். இத்தேசத்திற்கு முக்கியமானநதி ரைன் என்பதே. இதன்உற்பத்தியும் சங்கமமும் இத்தேசத்தில் கிடையா. பேசல் என்ற விடத்திலிருந்து எமரிச்க்கீழேவரை 470-மைல்தூரம் இந்த இராஜ்யத்திற்குச்சேர்ந்தது. இத்தனை தூரமும் கபபல்வரும். ஹாலண்டின் செழிப்புக்காரணம் ரைன் நதியேயாம்.

7 ஏரிகள்.—கான்ஸ்டேன்ஸ் ஏரி, பவேரியா, வுர்ட்டம்பெர்க், பேடன் இவற்றிற்கு வடஎல்லையாகும், தெற்கில் சீம்ஸி, அம்மாஸி, வார்ம்ஸி இம்மூன்றும் பெரியவை. பவேரியாவிலுள்ள ஆல்ப்ஸ் மலையில் ஏரிகள் பலவுள.

8. சீதோஷ்ணம்.—இதுவிஷயத்தில் மூன்றுபிரிவுகளுள. வடகடல்பிராந்தியத்தில் கணகணப்புஇருப்பதால் மாரிகொடிதன்று, மழைபொழியும். பால்டிக்ப் பிராந்தியத்தில் ரஷியாவிலுள்ளபடி குளிரும் சீதமும் மிகுதி. உண்ணுடடு உயர்நிலப்பிராந்தியத்தில் உயர்ந்தமலைத்திரள்களிருப்பதால் சீதமும் உஷ்ணமும் திடீரென்று மாறும். நடுநாட்டில் உஷ்ணமிகுதியா யிருப்பது இயல்பாயினும் அதை உயர்ந்த மலைகள் தணிக்கும். ரைன், டானூப் பள்ளத்தாக்குகளின் சீதோஷ்ணம் 52 முதல் 54 டிகிரி(பிரமாணமும்)யும், நடுப்பிராந்தியத்தில் 48 முதல் 50ம், வட மைதானத்தில் 46 முதல் 48ம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

9. பயிரிடுதல். ஜெர்மன் இராஜ்யத்தில் 100-க்கு 90 பங்கில் பயிர்செய்யப்படும். நஞ்சை புஞ்சை நூற்றுக்கு

47,67ம், தோட்டம் 0.89ம், புல்நிலம் 1·102ம், மேய்ச்சல் தரை 5·01ம், திராக்ஷத் தோட்டங்கள் 0·25ம் உண்டு. பெரிய பண்ணை நிலங்கள் போமரேனியா, போசன், சாக்ஸனி, ப்ரஷியா கிழக்கு மேற்கிலும் மிகுதி. ப்ரஷிய ரைன் மாகாணத்திலும், பேடன், வுர்ட்டம் பெர்க்கிலும் சிறுகுடித்தனக்காரர்கள் காணப்படும். தெற்கிலும், தென்மேற்கிலும் கோதுமைப் பயிர் செய்வார்கள். வடக்கிலும் கிழக்கிலும் ரை, ஓட்ஸ், பார்லி என்ற பலதரக் கோதுமைகளும் உண்டு. இவையன்றி தினையும், சோளமும், கம்பும், அரிசிக் கோதுமையும் பயிரிடுகின்றார்கள். இத்தனை விளைவிருந்தாலும் காணாது. வருடந்தோறும் $4\frac{1}{2}$ மில்லியன் டன் தானியம் அயலிடமிருந்தே வரவேண்டும். உருளைக் கிழங்குப் பயிர் ஏராளமாய் நடந்து வருகிறது. அது உணவிற்கும் சாராயம் வடித்தற்கும் உதவுகிறது. கீழ் ஜெர்மனியில் சாராயம் வடிக்கிறார்கள். சாராயம் வடிக்கும் சாலைகள் ஏறக்குறைய எழுபதாயிரமாம். பீட் கிழங்கிலிருந்து சர்க்கரை யாக்குகிறார்கள். ஹாப் பூடு 98,000 ஏக்கரில் பயிர் செய்கிறார்கள். அநேக ஜில்லாக்களில் புகையிலைப் பயிர் செய்து மிகுந்த இலாபந் தேடுகிறார்கள். 35,000 ஏக்கரில் புகையிலை பயிராகின்றது.

10. தாது வர்க்கங்கள்.—எர்ஸ்ஜிபெர்க்மலையில் ஈயம், வெள்ளி, தகரம், செம்பு மிகுதி. துத்தநாகம் இத்தேசத்தில் ஜாஸ்தியாக அகப்படும். இதுவும் இரும்பும், நிலக்கரியும் சைலீசியாவில் ஏராளம். ஒவ்வொரு வகை தாதுவர்க்கமும் ஹார்ஸ் மலையிலுண்டு. நிக்கல் (ஜெர்மன் வெள்ளி), அஞ்சனக்கல், இவையிரண்டும் விளையும். நிலக்கரி விளையும் நிலங்களில் பெரியவை ஆறு உண்டென்றும், வருடத்தில் 125 மில்லியன் டன் தோண்டி யெடுக்கப்படுகிற தென்றும் கூறுவர். பலதர உப்பு விளைவுகட்கும் கணக்கில்லை. அது

தேசச் செலவிற்கு வேண்டியது போக ரஷியா, ஆஸ்டிரியா, ஸ்காண்டிநேவியா (நார்வே ஸ்வீடன்) முதலான தேசங்களுக்கு ஏற்றுமதியாகிறது.

11. கைத்தொழில். ஜெர்மனி தேசத்தைப் போல சொற்ப காலத்தில் கைத்தொழில் விருத்தியான தேசம் கிடையாது. இரும்புவேலை ப்ரஷியா, அல்சேஸ்-லோரேன், பவேரியா, சாக்ஸனியில் அதிகம். மகராஜனே ஓர் பங்காளியாக விருக்கும் எஸ்ஸனில் குருப் கம்பெனியாரால் ஜெர்மனிக்கு வேண்டிய குண்டுகள் வெடிக்குண்டுகள் நாகுவிதமான நவீனபீரங்கிகள் முதலானவை செய்யப்படுகின்றன. உருக்கு ரீனிஷ்ப்ரஷியாவில் அதிகம். துணி நெசவில் சிறந்தவிடம் சாக்ஸனி. பஞ்சுத் துணிகள் பேடன், அல்சேஸ்-லோரேன், பவேரியா, வுர்ட்டம்பெர்க் கிலும், கம்பளம், சகலாத்துகள், ஜரிகை சாக்ஸனியிலும், பட்டு அல்சேஸ், ரீனிஷ்ப்ரஷியா முதலான விடங்களிலும், கண்ணாடி, பீங்கான்பாத்திரங்கள், பவேரியாவிலும், கடியாரங்கள் சாக்ஸனி, நூரம்பெர்க்கிலும், தங்க வெள்ளி வேலை பெர்லின் முதலான நகரங்களிலும், பட்டைச் சாராயம் பவேரியா, ப்ரஷியாவிலும் செய்யப்படுகின்றன. ரைன் மாகாணத்தில் கடிதஞ் செய்யும் யந்திரங்கள் 1020 ஆம். ஏற்றுமதி மட்டும் 3½ மில்லியன் பவுண்டு ஆகிறதென்பர். தோல் வேலைகள் மிகுதியாக நடக்கும் இடம் ஹெஸ்ஸி—டாரம்ஸ்டாட். ரசாயன மருந்துகள் தயாரிக்குமிடம் சாக்ஸனி. ஜெர்மனி தேசத்துடன் பெருத்த வர்த்தகஞ்செய்யும் தேசம் கிரேட் பிரிட்டன் ஒன்றே.

12. முக்கியமான பட்டணங்கள்.—ஜனத் தொகையில் ஒரு லக்ஷத்திற்கு மேற்பட்ட பட்டணங்கள் 41 உண்டு. அவற்றின் பெயரும், அவை எந்தெந்த மாகாணங்களி லிருக்

இன்றனவென்றும், ஒவ்வொன்றின் ஜனத்தொகை இன்ன தென்றும், பின் வரும் அட்டவணையால் வெளியாகும்.

| பட்டணம். | மாகாணம். | ஜனத் தொகை |
|---|---|---|
| பெர்லின் | ப்ரஷியா | 2,040,148 |
| ஹாம்பெர்க் | ஹாம்பெர்க் | 802,703 |
| மியூனிச் | பவேரியா | 538,393 |
| டிரெஸ்டன் | சாக்ஸனி | 516,996 |
| லீப்ஸிக் | ,, | 502,570 |
| ப்ரஸ்லா | ப்ரஷியா | 470,751 |
| கொலோன் | ,, | 428,503 |
| ப்ராங்குபோர்ட் | ,, | 334,951 |
| நூரம்பெர்க் | பவேரியா | 294,341 |
| டஸல்டார்ப் | ப்ரஷியா | 253,099 |
| ஹானோவர் | ,, | 250,032 |
| ஸ்டட்கார்ட் | வுர்ட்டம்பெர்க் | 249,443 |
| செம்னிட்ஸ் | சாக்ஸனி | 244,405 |
| மாக்டிபெர்க் | ப்ரஷியா | 240,661 |
| ஷார்லாட்டன்பெர்க் | ,, | 239,512 |
| எஸ்ஸன் | ,, | 231,396 |
| ஸ்டெட்டின் | ,, | 224,078 |
| கோனிக்ஸ்பெர்க் | ,, | 219,892 |
| ப்ரேமென் | ப்ரேமென் | 214,953 |
| லூயிஸ்பெர்க் | ப்ரஷியா | 192,227 |
| டார்ட்மண்ட் | ,, | 175,575 |
| ஹாலி | ,, | 169,899 |
| அல்டோனு | ,, | 168,301 |
| ஸ்ட்ராஸ்பெர்க் | அல்சேஸ்-லொரேன் | 167,342 |
| கீல் | ப்ரஷியா | 163,710 |

| பட்டணம். | மாகாணம். | ஜனத் தொகை. |
| --- | --- | --- |
| எல்பர்பெல்ட் | ப்ரஷியா | 162,682 |
| மான்ஹீம் | பேடன் | 162,607 |
| டான்ஸிக் | ப்ரஷியா | 159,685 |
| பார்மென் | ,, | 156,148 |
| ரிக்ஸ்டார்ப் | ,, | 153,650 |
| கெல்ஸன் கெர்ச்சன் | ,, | 147,037 |
| ஆ. வா. செப்பேல் | ,, | 143,906 |
| ஷ்கோனிபெர்க் | ,, | 140,992 |
| ப்ரன்ஸ்விக் | ப்ரன்ஸ்விக் | 138,423 |
| போஸன் | ப்ரஷியா | 137,067 |
| காஸெல் | ,, | 120,446 |
| போச்சம் | ,, | 118,455 |
| கார்ல்ஸ்ருகி | பேடன் | 111,200 |
| க்ரீபெல்ட் | ப்ரஷியா | 110,347 |
| ப்ளாயென் | சாக்ஸனி | 105,182 |
| வீஸ்பேடன் | ப்ரஷியா | 100,953 |

13. ஆட்சிவிவரம். 1871-ம் வருஷம் ஜனவரி மீ 18உ முதல் ஜெர்மன் மகாராஜ்யம் ஏற்பட்டு ப்ரஷியா அரசர் ஜெர்மன் மகாராஜா ஆயினர். அவருடைய அதிகாரம் ப்ரஷியாவில் மட்டுமே. மகாராஜபட்டம் ஹோஹென் ஸொலர்ன்வமிசத்தில் முதற்பிள்ளைக்கு இறங்கி வருகிறது. மகாராஜாவிற்கு பண்டிஸ்ராட் என்ற மாகாண ஐக்கியசபை யொன்றுளது. இதில் 58 அங்கத்தினர் உண்டு. ஒவ்வொரு தவணையிலும் இவர்கள் தங்கள் தங்கள் மாகாணங்களினின்று தெரிந்தெடுக்கப்படுவார்கள். மகாராஜ்யத்திற்கு சட்ட திருபணஞ் செய்யும் அதிகாரமுள்ளவர் மகாராஜா, பண்டிஸ்ராட், ரீச்ஸ்டாக் (மகாராஜ சபை) என்ற மூவருமே. மகாராஜ சபையில் மெம்பர்கள் 397 பெயர். இவர்கள் ஜனங்களால் தெரிந்

தெடுக்கப் படுவார்கள். இவர்களுக்கு சபையிலிருப்பு ஐந்து வருஷம். தெரிந்தெடுப்பது ஜனங்களுடைய சீட்டு (வோட்) மூலமாக. ஒவ்வொரு மெம்பரும் ஏறக்குறைய 150,000 ஜனங்களுக்குப் பிரதி மனிதராயிருக்கிறார். இராணுவ காரியாதிகளிலும், போர்க் கப்பல் காரியாதிகளிலும், இராஜ்ய வருவாயிலும், வர்த்தக விஷயத்திலும், தந்தி தபால் விஷயங்களிலும், ரெயில் பாதை விஷயத்திலும், பொதுவான காவல் சம்பந்தப்பட்ட மட்டிலும், இராஜ்யத்திற்கு சுயாதீனமான அதிகாரமுண்டு. பவேரியா, வுர்ட்டம்பெர்க் மாகாணங்கள் சொந்த தந்தி தபால் வைத்துக்கொண்டன. தவிரவும் குடிகள் அயல் நாட்டிற்குப் போதல், அவர்கள் சுதந்திரம், பாங்குகள், பேட்டெண்டுகள், புத்தகங்கள், நதிகள், கால்களில் கப்பல் வருதல், வர்த்தமானப் பத்திரிகை, முதலான அனேக விஷயங்களில் அதிகாரஞ் செலுத்தும் உரிமை மகாராஜ்யத்திற்கேயாம். மற்றத் தேசத்தாருடன் சமாதானஞ் செய்தல், தற்காப்பிற்காக யுத்தம் செய்தல், உடன்படிக்கை செய்தல், தூதர்களை நியமித்தல், அந்நிய தூதர்கள் வரவேற்றல் முதலான அதிகாரங்களும் மகாராஜாவிற்குண்டு. ஒவ்வொரு சிற்றரசும் தனித்தனியே மற்ற இராஜாக்களுக்குத் தூது அனுப்பலாம். அந்நிய தேசங்களிலிருக்கும் ஜெர்மன் பிரதிநிதிகள் மகாராஜாவினால் நியமிக்கப்பட்டு அவருடைய ஆட்சிக்குட்பட்டு இருப்பர். பிறநாட்டின்மேல் யுத்தந் தொடர வேண்டுமானால் ஐக்கிய சபையின் சம்மதம் வேண்டும். ஐக்கிய சபையையும், மகாராஜ சபையையும் வருஷந்தோறும் கூட்டுவித்தல், கலைத்தல், நிறுத்திவைத்தல் மகாராஜா கையிலிருக்கிறது. நிறுத்திவைக்கும் பக்ஷத்தில் அது 60 தினத்திற்கு மேற்படக்கூடாது. சபையைக் கலைக்க நேரிட்டால் மறுபடியும் அதைக் கூட்டத் தெரிந்தெடுக்கும் பொருட்டு 60 தினத்திற்குள் உத்தரவு செய்ய வேண்டும். புதிய கூட்டம் 90 தினத்தில் கூடவேண்டும். இரண்டு சபைகளிலும் அதிகமான மெம்பர்கள் வோட் கிடைத்தாலன்றியில் இராஜ்ய சட்டங்கள் நிலைபெறு. ஒவ்வொரு சபைக்கும் ஒவ்வொரு மாகாணமும் எத்தனை அவையவிகள்

அனுப்புகின்றது என்பதை ஈண்டு தந்துள்ள அட்டவணையால் அறியலாம்.

| மாகாராஜ்யத்தின் மாகாணங்கள் | | பண்டிஸ்ராட்டில்மெம்பரின் தொகை | ரீச்ஸ்டாக்கில் மெம்பரின் தொகை |
|---|---|---|---|
| ப்ரஷியா | இராஜ்யம் | 17 | 236 |
| பவேரியா | ,, | 6 | 48 |
| சாக்ஸனி | ,, | 4 | 23 |
| வுர்ட்டம் பெர்க் | ,, | 4 | 17 |
| பேடன் | பேரிறையரசு | 3 | 14 |
| ஹெஸி | ,, | 3 | 9 |
| மெக்லென் பெர்க் ஷவரின் | ,, | 2 | 6 |
| சாக்ஸ் வேய்மார் | ,, | 1 | 3 |
| மெக்லென் பெர்க் ஸ்டெரிலிட்ஸ் | ,, | 1 | 1 |
| ஓல்டன் பெர்க் | | 1 | 3 |
| பர்ன்ஸ்விக் | இறையரசு | 2 | 3 |
| சாக்ஸ்—மேனிஞ்சன் | ,, | 1 | 2 |
| சாக்ஸ்—அல்டன் பெர்க் | ,, | 1 | 1 |
| சாக்ஸ்—கோபெர்க்—கோதா | | 1 | 2 |
| அன் ஆல்ட் | ,, | 1 | 2 |
| சாண்டர்ஸ் ஹாஸன் | சிற்றரசு | 1 | 1 |
| ரூடல்ஸ்டாட் | ,, | 1 | 1 |
| வால்டெக் | ,, | 1 | 1 |
| ரூஸ் கிரீஸ் | ,, | 1 | 1 |
| ரூஸ் ஷிலீஸ் | ,, | 1 | 1 |
| ஷோம்பெர்க் லிப்பி | ,, | 1 | 1 |
| லிப்பி | ,, | 1 | 1 |
| லூபெக் | சுயாதீனப்பட்டணம் | 1 | 1 |
| ப்ரேமென் | ,, | 1 | 1 |
| ஹாம்பெர்க் | ,, | 1 | 3 |
| அல்சேஸ்—லோரென் மகாராஜ்யநாடு | | 0 | 15 |
| | மொத்தம் | 58 | 397 |

மகாராஜ சபை வருஷம் ஒரு முறையாவது கூடவேண்டும். 1906-ம்வருஷ நவம்பர்மீ முதல் இச்சபை மெம்பர்களுக்கு சம்பளம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சிற்றரசு நாட்டிலும் இரண்டு வகுப்பாயுள்ள சபைகளுண்டு. 25-வயதுள்ள ஒவ்வொருவனும் மாகாணத்தில் ஒரு வருஷம் குடியிருந்தால் வோட் கொடுக்க பாத்தியதை யுடையவனாகிறான். அல்ஸேஸ் லோரேன் நாட்டிற்குரிய 15-மெம்பர்களை மகாராஜாவின் லெப்டினண்ட் என்பவர் நியமுகஞ்செய்கிறார். ஐக்கிய மகாராஜசபைகளில் எந்தச்சட்டஞ்செய்தாலும் மகாராஜா ஒப்புக்கொண்டாலன்னியில் சட்டமாகாது. அவர் ஒத்துக்கொண்டால் மகாராஜ்ய சான்ஸேலர் (ஆலோசனைத்தலைவர்) கையெழுத்து ஆயினபின்னரே பகிரங்கப்படுத்தப்படும். ஆலோசனைத் தலைவருக்கு உதவியாக ஆலோசனை செய்தற்பொருட்டு ஐக்கிய சபையில் ஒன்பது நிலையான கமிட்டிகளுண்டு. ஒவ்வொரு கமிட்டியிலும் மகாராஜ்யத்தைச்சேர்ந்த குறைந்தபக்ஷம் நான்கு இராஜ்யத்தின் பிரதிநிதிகள் இருத்தல் வேண்டும். இக்கமிட்டிகள் இராணுவம், கப்பல், கோட்டை, துறைமுகவரி, தீர்வை, வியாபாரம், வர்த்தகம், தந்தி, தபால், இருப்புப்பாதை, சிவில் கிரிமினல் சட்டம், வரும்படிசெலவு, கணக்கு, அன்னியநாட்டுக்காரியாதிகள், அல்ஸேஸ் லோரேன் விஷயங்களைக் கவனிக்கும்.

14. மதம். ஒவ்வொரு இராஜ்யத்திலும் அததற்கு வேண்டிய மதப்பெருக்கத்திற்குரிய உத்தியோகஸ்தர்கள் இருக்கின்றனர். மகாராஜ்யம் பூராவிற்கும் ஒருமதம்என்பது கிடையாது. மகாராஜா அனைவருக்கும் மதத்தலைமைபெற்றிலர். மகாராஜ்யத்தில் 35,231,104 புராடெஸ்டண்ட் மதஸ்தரும், 20,327,913 ரோமன் கதோலிகரும், 6472 கிரேக் வைதிகரும், 203,678 மற்ற வகுப்பினைச்சார்ந்த கிறிஸ்த

வரும், 586,948யூதரும், 11,597-மற்றவகுப்பாரும், ஒரு வகுப்பிலும் சேராதவர் 5938-பேரும் உளர் என்று 1900-ல் எடுக்கப்பெற்ற ஜனசங்கையால்தெரிகிறது. முக்கியமான பட்டணங்களில் வர்த்தகநிமித்தமாய் யூதர்கள் நாளுக்குநாள் அதிகமாகக்காணப்படுகிறார்கள். ப்ரஷியாவிலேயே அவர்கள் ஜனத்தொகை மிகுதி. ஹாம்பெர்க், பெர்லின், பிராங்குபோர்ட்,ப்ரெஸ்லா, கோனிக்ஸ்பெர்க், போஸன், கொலோன், நூரம்பெர்க், புர்த் இவைகளே யூதர்கள் மிகுந்துள்ள பிரதானபட்டணங்கள். இராஜ்யத்தில் அநேக உத்தியோகங்கள் அவர்களுக்கு அளிப்பதில்லை. முக்கியமாக இராணுவத்தில் அவர்கள் கிடையாது. ஆயினும் அவர்களுக்கு ஜெர்மனியில் செல்வாக்கு அதிகம். ஏனெனில் வர்த்தமானப்பத்திரிகைகள் அவர்கள் கைவசப்பட்டிருக்கின்றன. இதன்றியும் யூதலாயர்கள், யூதமுன்சிபல் கவுன்சிலர்கள் எண்ணிறந்த தொகையுளர். புராடெஸ்டெண்ட் மதஸ்தரில் சீர்திருத்தமடைந்தவரென்றும் யூதரைப்பின்பற்றியவரென்றும் இருவகுப்பினரா யிருந்ததை 1817-ல் ஒன்றாகச் சேர்க்கப்பட்டது. 1866-ல் ஹானோவர் ஷ்லெஸ் விக்-ஹால்ஸ்டீன் மாகாணங்களை மகாராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டகாலத்தில் இவற்றிலுள்ள ஊதரர்கள் இந்த ஐக்கியத்திற்கு உட்படசம்மதிக்கவில்லை. அதுபோலவே ஹெஸியிலிருந்த சீர்திருத்தமடைந்த கூட்டத்தாரும் இணங்கவில்லை. பின்னர் இவரும் இணங்கும்படிநேரிட்டது. ஐக்கியந்தலைப்பட்டது. ரோமன் கதோலிகருக்கு ஐந்து ஆர்ச்பிஷப் (சிரேஷ்டகுரு) புகளும், இருபது குருக்களும் உளர். பிரஸ்லாவிலுள்ள குரு தலைமையானகுருவென் றழைக்கப் படுவர்.

15. கல்வி. எவ்வகைக்கல்வியினும் ஜெர்மனியில் முக்கியமான கல்வி படைக்கல்வியேயாம். ஜெர்மனி இராஜ்யத்தி

லுள்ள ஒவ்வொரு ஜெர்மானியனும் இராணுவப் பயிற்சி பெற்றே தீரவேண்டும். சமயம்வரின் ஒவ்வொருவனும் யுத்த பாணியாய் சத்துருவுடன் தேசத்தைக் காப்பாற்ற வல்லவனாகின்றான். இவ்வழக்கத்தால் ஜெர்மனி மகா இராஜ்யத்தின் ஜனத்தொகை பூராவும் போர்வீரர்களென்றே சொல்லலாம். இவ்வழக்கம் ஸ்விட்ஸர்லண்டு, ப்ரான்ஸிலிருப்பினும் இந்த இராஜ்யத்திற்றான் மிகுதியாக நடைபெறுகின்றது. இதற்கு பேர் பதியப்படுதல் அல்லது கன்ஸ்கிரிப்ஷன் என்று பெயர். இவ்வழக்கம் சுயாதீனத்திற்குக் கேடு என்பர். சில ப்ரிட்டிஷார் இதற்கு "இராணுவச் சிச்சிலுப்பை" என்ற வசைப்பெயருமளித்திருக்கின்றனர். எவர் எவ்விதம் நகைத்தாலுஞ்சரி, ஜெர்மானியனுடைய சுதேசாபிமானங்குறைவதில்லை. இது தாய்முலைப்பாலுடன் பருகப்பட்டுவருவதுமன்றி பள்ளிச்சாலைப் பாடங்களெல்லாம் இதை வளர்த்துவருகின்றன. அதனால் ஜெர்மானியன் படை தூக்குங்காலத்தில் முகமலர்ச்சியுடன் தன்கடமையைச் செலுத்தப்போகிறேனென்று கூறிக்கொண்டு வெளிப் புறப்படுகிறான். இது நிற்க, உலகத்திலுள்ள நவீன நாகரீகமடைந்த தேசத்தாரனைவரிலும் கல்வி விருத்தி செய்வதில் முதன்மை பெற்றவர் ஜெர்மன் தேசத்தவரே. மகாராஜ்யமெங்கும் கல்விபொது, கட்டாயம். ப்ரஷியாவில் நடந்தேறும் கல்வி முறையை மற்ற மாகாணங்களும் பின்பற்றுகின்றன. ஒவ்வொரு பட்டணத்திலும் கிராமத்திலும் வோல்க் ஸ்கூலன் என்ற முதற் பாடசாலைகளுண்டு. இப்பாடசாலை மாணவரின் வயது ஆறுமுதல் பதினான்குவரை. வேறு பள்ளிக்கூடங்களில் கல்விகற்றுவருவதாக ருஜுப்படுத்தினலொழிய ஒவ்வொரு தகப்பனும் தன்பிள்ளைகளை இம்முதற் பாடசாலைகளுக்கு அனுப்பியே தீரவேண்டும். 1906-7ல் இப் பாடசாலைகளின் தொகை 60,584; வாத்தியார்கள்,

166,597; மாணவர், 9,737,262. ஆகவே 900 ஜனங்களுக்கு ஒருபள்ளிக்கூடமுண்டு. சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகளைத்தவிர பிரைவேட் பாடசாலைகள் 643 உள. இவற்றிலுள்ள மாணவர் தொகை 41,000. சர்க்கார் பாடசாலைகளுக்கு வருஷச்செலவு 26,000,000 பவுன். தொழிற்சாலைகளும், உயர்தரக்கலாசாலைகளும் அனேகமுண்டு. மகாராஜ்யமென்று அழைக்கப்பட்டதற்குமுன் ஒவ்வொரு இராஜ்யமும் கல்விவிஷயத்தில் எடுத்துக்கொண்ட சிரத்தையால் கல்விச்சாலைகள் கணக்கில்லாமல் உண்டாயின. போசன் என்பதைத் தவிர ஒவ்வொரு பெரியமாகாணத்திலும் சகல கலாசாலை யொன்றுயினுமிருக்கும். மொத்தம் 22 சகல கலாசாலைகளுள. மன்ஸ்டர் சகல கலாசாலையில் வைத்தியக் கல்வி கிடையாது. பான், ப்ரஸ்லா, டியூபிஞ்சன் கலாசாலைகளில் புராடெஸ்டண்ட், கதோலிக்சமயசாத்திரங் கற்பிக்கின்றனர். ப்ரீபேர்க், மியூனிச், மன்ஸ்டர், வுர்ஸ்பேர்க் கலாசாலைகள் கதோலிக் சமயக் கோட்பாடுகளையே போதிக்கின்றன. ப்ரஷியாவில் ப்ரான்ஸ்பெர்க் நகரில் லிஸியம்—ஹோஸியானம் என்ற கலாசாலையில் கதோலிக் சமயநூலும், தத்துவசாத்திரமும், வைத்தியநூலும் சொல்லிக் கொடுக்கின்றனர். பொதுஜனப் புத்தகசாலைகள் கணக்கில்லாம லிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை பேர்லின், மியூனிச், ஹெண்டல்பேர்க், காட்டிஞ்சன், ஸ்டராஸ்பேர்க், டிரேஸ்டன், லீப்ஸிக், வுர்ஸ்பேர்க், ப்ரேஸ்லா, கோனிக்ஸ்பேர்க் முதலான நகர்களில் இருக்கின்றன. பின் தரப்படும் ஜாப்தாவில் 1907-8 லுள்ள சகல கலாசாலைகளின் பெயர்களும் அவை ஏற்பட்ட தெய்தியும், வாத்தியையின் தொகையும், மாணவர் கற்கும் பாடத்தின்படி அன்னர் தொகையும் காணலாம்.

| சகல கலாசாலைப் பெயர் | தெய்தி | வாத்திமை | சமயம் | சட்டம் | வைத்தியம் | தத்துவம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| பெர்லின் | 1809 | 493 | 326 | 2747 | 1153 | 3934 | 8220 |
| பான் | 1818 | 190 | 395 | 833 | 282 | 1699 | 3209 |
| ப்ரெஸ்லா | 1811 | 189 | 350 | 617 | 284 | 840 | 2071 |
| எர்லாங்கன் | 1743 | 77 | 155 | 323 | 355 | 225 | 105[illegible] |
| ப்ரீபெர்க் | 1457 | 150 | 219 | 373 | 580 | 642 | 1814 |
| ஜிபெலன் | 1607 | 100 | 63 | 204 | 333 | 546 | 1144 |
| காட்டிஞ்சன் | 1737 | 161 | 102 | 441 | 188 | 1126 | 1857 |
| கிரீட்ஸ்வால்டு | 1456 | 105 | 68 | 188 | 186 | 361 | 803 |
| ஹாலி | 1694 | 174 | 331 | 450 | 217 | 1239 | 2237 |
| ஹேடல்பெர்க் | 1385 | 177 | 55 | 357 | 385 | 879 | 1676 |
| ஜீனு | 1558 | 116 | 48 | 267 | 265 | 795 | 1375 |
| கீல் | 1665 | 121 | 35 | 271 | 239 | 480 | 1025 |
| கோனிக்ஸ் பெர்க் | 1544 | 152 | 68 | 317 | 218 | 502 | 1105 |
| லீப்ஸிக் | 1400 | 234 | 303 | 1013 | 605 | 2419 | 4341 |
| மார்பெர்க் | 1527 | 117 | 133 | 400 | 261 | 876 | 1670 |
| மியூனிச் | 1826 | 239 | 169 | 1892 | 1903 | 1979 | 5943 |
| மன்ஸ்டர் | 1902 | 95 | 278 | 458 | 0 | 870 | 1606 |
| ரோஸ்டாக் | 1418 | 65 | 48 | 67 | 211 | 322 | 648 |
| டியூபிஞ்சன் | 1477 | 111 | 464 | 467 | 263 | 384 | 1578 |
| ஸ்ட்ராஸ் பெர்க் | 1872 | 167 | 241 | 369 | 255 | 844 | 1700 |
| வுர்ஸ் பெர்க் | 1582 | 102 | 106 | 351 | 625 | 320 | 1382 |
| லி[illegible]யம் | 0 | 13 | 150 | 0 | 0 | 0 | 163 |

இவையன்றி உயர்தரத் தொழிற் கூடங்கள் 10 உள. அவை பாலிடெக்னிக்கா என்று பெயர்பெறும். அவை சகல கலாசாலைகளை யொக்கும். அவை சில பட்டங்களளிக்கும். அவற்றில் கட்டடம், சிற்பசாத்திரம், யந்திரப்பயிற்சி, ரசாயனம், வேதைவித்தை, உடற்கூற்றுநூல் முதலானவை கற்பிக்கப்படும். அவை பேர்லின், மியூனிச், டார்ம்ஸ்டாட், கார்ல்ஸ்ரூகி, ஹானேவர், டிரெஸ்டென், ஸ்டட்கார்ட், ஆல்ஷப்பேல், ப்ரன்ஸ்விக், டான்ஸிக் முதலான நகரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளில் 1908ல் 14 140 மாணவர்களிருந்தனர். அன்னாரில் 2531 வர் அன்னியதேசத்தார். அவர்களுக்குப் போதகாசிரியர் 753. சுரங்கம் கற்பிக்க பேர்லின், ஹார்ஸில் க்ளவுஸ்தல், சாக்ஸனியில் பரேய்பர்க் என்ற பட்டணங்களில் மூன்று பாடசாலைகளுள. பயிர்த்தொழிற் கல்வி அநேக சகலகலாசாலைகளில் பயிற்றுகின்றனர். அவற்றில் முக்கியம் பேர்லின், ஹாலி, காட்டிஞ்சன், கோனிக்ஸ்பேர்க், ஜீனு, பான் (பாப்பல்ஸ்டார்ப்), மியூனிச், லீப்ஸிக். இவையன்றி காட்டிலாகாக் கல்வியை ஒன்பது ஸ்தானங்களிற் போதிக்கின்றனர். ஐந்து கால்நடைக் கலாசாலைகளும், ஐந்து வர்த்தகக் கலாசாலைகளும் (424 தாழ்தர வர்த்தகப் பள்ளிக்கூடங்கள் தவிர), நெசவுப்பாடசாலைகள் 100, தச்சுவேலை, கப்பலோட்டும்கல்வி, உலோகப்புடக்கல்வி இவைபோன்ற கல்வி பயிற்றுமிடங்களும் பலவுள. இராணுவக்கல்வி பேர்லின், மியூனிச்சிலும், போர்க் கப்பற்கல்வி கீலிலும் தருவதுடன் மன்னர் பிள்ளைகளைப் பயிற்றும் பாடசாலைகளும் உண்டு.

---

## அத்தியாயம் VI.

---

### ஜெர்மனியின் குடியேற்ற நாடுகள்.

ஜெர்மன் குடிகள் ஸ்தாபித்த நாடுகள் சொற்பமே. அவை பின்வரும் அட்டவணையால் விளங்கும். அவற்றில் சைனுவிடமிருந்து கட்டுக்குத்தகைக்கு வாங்கிய கயாச்சோ

ஒன்று மட்டும் கப்பல் இலாகா அதிகாரத்தி லிருக்கின்றது. மற்றவை குடியேற்ற ஆபீஸரால் ஆளப்பட்டு வருகின்றன. இவற்றின் வர்த்தகம்:—ஜெர்மனியில் இறக்குமதி (1906) 1,028,000 பவுன்; ஜெர்மனியிலிருந்து ஏற்றுமதி 2,236,000 பவுன். இவற்றின் மொத்த வரும்படி 1907ம் வருஷத்தில், 8,59,000 பவுன். இராஜ்யச்செலவு 4,362,000 பவுன். இதனால் குடியேற்ற நாடுகளினால் தாய் தேசத்திற்கு ஏராளமான செல்வே யொழிய வரும்படி யில்லை யென்பது வியக்தமாம்.

| பெயர் | கிடைத்த காலம் | சதுரமைல் (உத்தேசம்) | ஜனத் தொகை (உத்தேசம்) |
|---|---|---|---|
| ஆப்ரிக்கா கண்டத்தில் | | | |
| டோகோ லாண்ட் | 1884 | 33,700 | 1,000,000 |
| காமரூன் | 1884 | 190,000 | 3,500,000 |
| தென்மேற்கு ஆப்ரிக்கா. | 1884 | 322,450 | [illegible] |
| கிழக்கு ஆப்ரிக்கா | 1885 | 364,000 | 7,000,000 |
| ஆப்ரிக்காவில் மொத்தம் | | 910,150 | 11,700,000 |
| பாஸிபிக் சமுத்திரத்தில் | | | |
| ஜெர்மன் நியூகினி | 1884 | 70,000 | 110,000 |
| பிஸ்மார்க ஆர்க்கிபிலாகோ | 1884 | 20,000 | 188,000 |
| காரோலைன், பீலு, மேரியானு தீவுகள் | 1899 | 800 | 41,600 |
| சாலமன் தீவுகள் | 1886 | 4,200 | 45,000 |
| மார்ஷல் தீவுகள் | 1885 | 160 | 15,000 |
| சாமோவன் தீவுகள் | 1899 | 985 | 33,000 |
| மொத்தம் | 1884—99 | 1,006,412 | 12,192,600 |

# அத்தியாயம் VII.

---

## ஜெர்மனி சரித்திரம்

இருநூறு வருஷங்களுக்குமுன் முதலாவது ப்ரடரிக் பிரஷிய இராஜப்பட்டம் பெற்ற காலத்தில் அவருடைய குடிகளின்தொகை 1,500,000. அவருடைய தலைநகராகிய பெர்லினில் 20, 000 ஜனங்களிருந்தார்கள். அப்பொழுது நாட்டில் நாகரீகங் கிடையாது. அது வளமில்லாத ஏழையாயிருந்தது. தற்காலத்தில் ஸெர்வியா, பல்கேரியாவைப்போன்ற வோர் சிற்றரசாகவிருந்தது. இன்று ஜனத்தொகை 67,000,000. முன்னர் விவசாயத்தை தவிர வேறு தொழிலில்லை. இப்பொழுது கைத்தொழில், வியாபாரம், சமுத்திரப் போக்குகளால் பெரும்பொருள் படைத்த தேசமாயிருக்கிறது. அதன் தற்கால ஐஸ்வரியம் பிரான்ஸ், கிரேட் ப்ரிட்டன் இவற்றிற் [illegible]ளைக் காட்டிலும் ஜாஸ்தி. ஜெர்மனி கைத்தொழிலில் ஈரோப்பாவில் முதல் ஸ்தானம் பெற்றுளது. அதுபோலவே சமுத்திரத்திலும் உத்தம ஸ்தானம் பெற முயலுகின்றது.

ஜெர்மனி தேசம் ஆரம்பமுதல் ஒருவனுட்சிக்கு உட்பட்டே வருகிறது. முதலாவது ப்ரடரிக் வில்லியம், ப்ரடரிக் கிரேட், வில்லியம் I, பிஸ்மார்க் இவர்கள் நன்முயற்சியாலும் ஆழ்ந்த முன் யோசனையாலும் ஜெர்மன் மகாராஜ்யம் உண்டாயிற்று. ப்ரடரிக் கிரேட், ஆஸ்ட்ரியா ஜெர்மன் சிற்றரசுகள், ப்ரான்ஸ், ரஷியா, ஸ்வீடன் இவற்றின் சேனைகளுடன் யுத்தஞ் செய்து தோற்கடித்தனர். இவர் இறந்தது 1786ல். இவர் இறந்த காலத்தில் ஈரோப் கண்டத்தில் ஜெர்மனியின் கீர்த்தி அதிகம். அவருக்குப் பின்வந்த இரண்டு அரசர்

களும் அவரைப் போன்று அத்தனை சக்தியுடையவர்க ளல்லர். ஆயினும் முன்னோன் ஏற்படுத்தியதைச் சரிவர நடத்தி வந்தனர். இருபது வருஷங்கழிந்ததும் அதாவது 1806ல் உலகத்தை எதிர்த்து ஏழாண்டு இடைவிடாமல் போர் செய்த ப்ரஷியாவை முதலாவது நெப்போலியன் ஜீனாவில் முறியடித்தனன். வில்லியம் I சேனையைச் சேர்ப் பதிலே கண்ணுங் கருத்துமாயிருந்தார். முகஸ்துதி செய் பவர்கள் அவரை அணுகிலர். இராணுவத்தில் மேலான வுத்தியோகம் வேண்டுபவர் தங்கள் திறமையாற் பெறலாமே யன்றி பிறர் சிபார்சால் பெறுதலரிது. அரசனுக்கேற்ற முதல்மந்திரியும் இருந்தார். அவர் பெயர் பிஸ்மார்க். அரசன் நோக்கம் போன்றே சேனை சேர்த்தலில் அவர் கருத்துடையவராயிருந்தார். ஏனெனில் அவர் அதிதீவிர புத்தியுடையவர், வருமுன் காக்கவல்லவர். ப்ரஷியாவிற்கு கிழக்கில் ரஷியாவும், மேற்கில் ப்ரான்ஸும் இராணுவத்தில் சிறந்த தேசங்களாம். இவை தங்களுக்கு [illegible] முறையே மே[illegible] எல்லையிலும் கீழ் எல்லையிலும் இராணுவந் தயார் செய்து வைத்தாற் போதும். ஜெர்மனி தேசத்திற் கோ மூன்று [illegible]திசையிலும் பலமான சத்துருக்கள் சுற்றி யிருப்பதால் ஏராளமான சேனை யிருந்தாலொழிய தன்னைக் காத்தலியலாது. அதுபற்றியே இராணுவந் திரட்டுவதில் ஜெர்மனி தேசத்திற்கு எப்பொழுதும் நோக்கம். இது பற்றியே மூவர் கூட்டுறவு ஏற்பட்டது. ப்ரான்ஸ், ரஷியா, ப்ரிட்டன் மூன்றுமே ஒன்றுசேர்ந்தன. பிரித்து ஆளுவதே பிஸ்மார்க்கின் வல்லமை. எந்தத் தேசத்தின் மேலாகினும் படையெடுக்க அவருக்குப் பிரியமிருந்தால் அவர் தந்திரமாக அந்தத் தேசம் மற்ற அக்கம்பக்கத்திலுள்ள தேசத்தா ருடைய உதவி பெறாமல் தனிக்கச் செய்வதுமன்றி சத்துரு வினால் ஜெர்மனி தேசத்திற்குக் கெடுதி செய்யப்பட்டதாகப்

பகிரங்கப்படுத்தி அக்கெடுதியை மாற்றும்படி. ஜெர்மனி தற்காப்பின் பொருட்டு யுத்தந் தொடருவதாகவே மற்ற அதிகாரிகளுக்குப் படும்படி செய்வர். அவர் முதன் மந்திரியாயிருந்த காலத்தில் அன்னியதேச ஆபீஸின் தலைமையையும் முதன் மந்திரி ஸ்தானத்தையும் தாமே வகித்தனர். ரஷியாவிற்கு டர்க்கி, ஏஷியாவின்மேல் கண்ணுண்டென்று தெரிந்து அந்த அவாவை அதிகரிக்கச் செய்து ரஷியாவிற்கும் ப்ரிட்டனுக்கும் மனஸ்தாபத்தை யுண்டுபண்ணி ரஷியாவின் பெருமையைக் குறைத்தார். ப்ரான்ஸும் ரஷியாவும் ஒன்று சேர்ந்தபடியால் ப்ரிட்டனுக்குப் பயமுண்டாகி ஜெர்மனியுடன் சேரும்படி நேரிட்டது. பெர்லின் காங்கிரஸில் ஆஸ்ட்ரியா ஹங்கரிக்கு விரோதமாக ரஷியாவைத் தூண்டிவிட்டு ரஷியாவிற்குக் கிடைத்த வெற்றியின் பயன் ஒன்றும் அதுபெறுமற் போகும்படி செய்தனர். ஆயினும் ஆஸ்ட்ரியாவிற்கு பாஸ்னியா, ஹெர்ஸ்கோவினு ஆகிய இரண்டு நாடுகளை [illegible]க்கொடுக்கும்படி செய்தனர். அவரா[illegible]லேயே ப்ரான்ஸ்க்கு டியூனிஸ் கிடைத்தது. இதனால் ப்ரான்ஸ்[illegible]க்கும் இற்றலிக்கும் நல்லெண்ண மில்லாமற் போயிற்று. ஆஸ்ட்ரியாவிற்கு ரஷியாவின் பேரிலுண்டான பயத்தினாலும், ப்ரான்ஸின் பேரில் இற்றலிக்குண்டான பீதியினாலும் மூவர் கூட்டுறவு இன்றியமையாததாயிற்று. ஜெர்மனிக்கு ப்ரிட்டனுடைய உதவி இருந்தபடியால் அது பகைவர் பயமில்லாமலிருந்தது. தேசச் செழிப்பிற்கு வேண்டிய நன்முயற்சிகள் செய்ய அதற்கு அவகாசங் கிடைத்தது. 1871ல் ப்ராங்கோ ஜெர்மன் யுத்தம் முடிவானபின் ஜெர்மன் மகாராஜ்யம் ஏற்பட்டது. அதற்குமுன் வடபாகக் கூட்டுத் தேசமென்றும் தென்பாகச் சிறு இராஜ்யங்களென்றும் பிரிவுபட்டு பலஹீனமாயிருந்த தேசம் ௸ யுத்தத்தின் பின் ஐக்கியப்பட்டு மகாராஜ்யம் ஆயிற்று. முன் அத்தி

யாயத்திற் கூறியபடி மகாராஜா வார்த்தையே வேதமா யிருந்தது. முதன் மந்திரியை நியமிக்கும் அதிகாரம் அவருக்கு இருந்தது. மன்னன் நோக்கப்படி மந்திரிகள் நடப்பது வழக்கமன்றோ. மந்திரிகளெல்லாம் மன்னனு டைய சிருஷ்டிகளாதலால் தக்க புத்திமதி சொல்லக்கூடிய நண்பர் மகாராஜாவிற்குக் கிடையாது. பிஸ்மார்க் ராஜி நாமாக்கொடுத்தபின் அவர் ஸ்தானத்தை வகித்த காப்ரிவி, ஹோஹன்லோகி, பூலோ, ஹால்வெக் நால்வரும் அத்துணை அதியூகிகளல்லர். ஆதலால் அவர்கள் காலத்தில் சிறப்பு ஒன்றும் தேசத்திற்கு ஏற்படவில்லை. தற்காலத்திலுள்ள சக்கரவர்த்தி 1888ல் பட்டத்திற்குவந்து ஏறக்குறைய இரு பத்தைந்து வருஷமாகிறது. இவர் பெயர் வில்லியம். இவர் பிஸ்மார்க்கின்வழியைப் பின்பற்றினவராயினும் அடக்கமில் லாதவர், தன்னுடைய கருத்தைச் சத்துருக்களறிய வெளிப் படுத்திவிடுகின்றனர். அதனால் எதிரிகள் எச்சரிக்கையாயி ருக்கின்றனர். அன்றியும் செல்வச்செருக்கால் பிஸ்மார்க் கின் இராஜதந்திரத்தைக் கையாளாமல் பெரிய அதிகாரிகள் ஒன்றுகூடும்படி இடம் கொடுக்கின்றனர். தற்காப்பு நிய மத்தைக் கைக்கொள்ளாமல் பிறர் நாடுகளின்மேல் படை யெடுப்பதால் பகையாளிகள் ஒன்று சேருகின்றனர். தற்கால முதன்மந்திரியாகிய ஹால்வெக் என்பவர் அத்துணை இராஜ தந்திரியன்று. அவர் வார்த்தையையும் அரசன் ஏற்பதில்லை. தன் மனம்போனபோக்கிலே போகிறவர் ஜெர்மன் சக்கிர வர்த்தி. இவருடைய பேரவா ஜெர்மனி தேசம் சமுத்திரத் திலும் முதன்மை பெறவேண்டுமென்பது. அதனால் அவருக் குச் சேனை சேர்ப்பதில் சிரத்தைகுறைந்தது. வெகுநாளாக சமுத்திரத்தில் முதன்மைபெற்று விளங்கும் பிரிட்டனுக்குப் பகையுண்டாயிற்று. போர்க்கப்பல்கள் செய்வதில் வருஷந் தோறும் மிகுந்ததிரவியஞ் செலவாய்வருகிறது. மந்திரிகள்

வார்த்தையைக் கேளாமல் தாம் நினைத்தவாறே செய்வதால் பக்கலில் பகைகிளம்பிற்று. சொந்ததேசத்திலும் குடியரசுக் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. அக்கூட்டத்தாரில் மகாராஜசபையிலும் 111 பெயரிருக்கின்றனர். ஸேவிங்க்ஸ் பாங்குப்பணங்கள் இராஜ்யத்தில் செலவு செய்யப்படும் பொழுது அவற்றிற்கு உறுதியொன்றுங் கிடையாது. அயல் நாட்டுடன் காரியாதிநடத்துவதிலும், இராணுவந்தயாரிப்பதிலும், பொருள் சேர்ப்பதிலும் ஜெர்மனி இராஜ்யத்தின் பெருமைகுறைந்து வருகின்றது. தத்துவ விசாரணையில் கீர்த்தி பெற்ற ஜெர்மானியர் தற்காலத்தில் இகத்திற்குப் பொருளீட்டுவதில் கவனஞ்செலுத்துகின்றனர்; இகசுகமனுபவிப்பதில் இடையறாத சிந்தனையுடையவரா யிருக்கின்றனர். பாரிஸ் நகரத்தில் துன்மார்க்கம் மிகுதியென்பது உலகமறிந்தவிஷயம். அதற்குப் பதின்மடங்கு பெர்லின்நகரம் பெயர்பெற்றுளதென்றால் அதன் சிறுமையைச் செப்பவும் வேண்டுமோ! அன்றியும் கடவுள்பயமே எவருக்கும் இல்லையெனலாம். எவ்வித சமயத்திலும் சேராதவர் அனேகர். பின்வரும் அட்டவணையில் 1901 முதல் 1910 முடிய ஜெர்மன் தேசத்திலுள்ள சேனை, கப்பலின் தொகையும் செலவுங்காணப்படும். அதை வாசிப்பதனால் மரக்கலம் ஜாஸ்தியாவதும் அதற்கு நேரிடுஞ் செலவால் மற்றையகாரியாதிகளுக்குச் செலவு குறைவுபடுவதும் விளங்கும். அடுத்த அட்டவணையால் 1888 முதல் 1910 முடிய பத்துவருஷத்திற்கு ஒருதரம் அதிகப்படும் இராஜ்யக்கடன் இன்னதென்று தெரியவரும்.

| வருஷம் | சேனைத் தொகை | செலவு மார்க் | கப்பல் தொகை | செலவுமார்க் * |
|---|---|---|---|---|
| 1901 | 604,168 | 677,932,000 | 31,171 | 194,892,000 |
| 1902 | 605,811 | 669,180,000 | 33,563 | 205,356,000 |
| 1903 | 605,975 | 659,970,000 | 35,768 | 212,628,000 |
| 1904 | 606,872 | 647,078,000 | 38,406 | 206,555,000 |
| 1905 | 609,758 | 697,126,000 | 40,862 | 231,483,000 |
| 1906 | 614,353 | 752,640,000 | 43,328 | 245,473,000 |
| 1907 | 616,838 | 806,831,000 | 46,747 | 290,883,000 |
| 1908 | 619,940 | 827,459,000 | 50,323 | 337,708,000 |
| 1909 | 621,112 | 854,784,000 | 57,068 | 405,568,000 |
| 1910 | 622,285 | 807,223,000 | 62,013 | 434,015,000 |

## கடன் விவரம்.

| | | |
|---|---|---|
| 1888 | பவுன் | 36,050,000 |
| 1890 | ,, | 55,899,900 |
| 1900 | ,, | 114,925,000 |
| 1910 | ,, | 244,831,700 |

ஜெர்மன் கைத்தொழில் க்ஷீணதசை யடைவதற்குக் காரணம் வேலையாட்களுக்குக்கூலியும், தீர்வையும் அதிகமாய்விட்டது. முன் இவையிரண்டும் சொற்பம். இப்பொழுதுள்ள கூலியுஞ் சர்க்கார்தீர்வையும் ப்ரிட்டனிலுள்ளதைவிட ஜாஸ்தியாயிருப்பதால் லண்டன்நகர் கைத்தொழிலில் சிறப்புறும். ஜெர்மனிக்கு வரும்படி குறையும். 1905 ல் எல்லா ஏற்றுமதியின் கிரையம் 5,841,800,000 மார்க்; 1910 ல் 7,474,700,000 மார்க், ஏற்றுமதி அதிகரித்திருக்கிறது.

ஜெர்மன் இன்ஷூரன்ஸ் விஷயத்தில் இராஜ்யத்திற்கு நஷ்டம் அதிகம். ஜெர்மன் சேனை, கப்பல் இரண்டிற்கும்

* ஒருமார்க் = ஒரு ஷிலிங்கு அல்லது 12 அணா.

செலவாகும் தொகையைவிட அதிகச் செலவு ஏற்படுகிறது. வருஷச்செலவு 50,000,000 மார்க்குக்குத் தாழ்வில்லை.

1911ல் மொராக்கோ விஷயத்தில் ஜெர்மனி ப்ரான்ஸ் தேசத்தை எதிர்த்தால் ரஷியா ஜெர்மனி தேசத்தின்மேல் படையெடுக்கும் என்றுகூறியது. ப்ரிட்டன் தேசத்துப் பிரதம மந்திரி ஆஸ்குயித், லாயிட் ஜியார்ஜ் இருவரும் தங்களுடைய எண்ணங்களை இவ்விஷயத்தில் ஒளித்துவைக்கவில்லை. மேற் கூறிய காரணங்களால் ஜெர்மனி இராஜ்யத்தின் தற்கால நிலைமை அத்தனை சிறந்ததென்று சொல்ல ஏதுவில்லை.

---

## அத்தியாயம் VIII.

---

### மஹாயுத்தம்.

ஈரோப் கண்டத்தில் ஆறு பெரிய அதிகாரிகளுண்டு. அவை ஆஸ்ட்ரியா, ப்ரான்ஸ், ஜெர்மனி, கிரேட் ப்ரிட்டன், ரஷியா, இற்றலி என்பவனவாம். அவற்றில் கிரேட்பிரிட்டன் ஒன்றேதீவு. ஆதலால் அதை சத்துருக்களினின்று காப்பாற்றுவதற்குக் கப்பல்கள் ஜாஸ்தியாக வேண்டியிருக்கின்றது.*
எலிஸபெத் இராணிகால முதல் பிரிட்டிஷ் கப்பல்கள் தூர தேசங்களுக்குப் போய்ப் புதிய நாடுகளைக் கண்டு பிடித்தும் பழையநாடுகளைக் கைக்கொண்டும் டச்சுக்காரர், ஸ்பெயின்

---

* தற்காப்பு முதல் நியமம். அதற்கு இன் சுலாரிட்டி என்பர். அதன்பின் தன்னைவிட மற்றவர் பெரியவராகக்கூடாது. அதற்குஅதிகார சமநிலை(பாலன்ஸ் ஆப் பவர்) என்றபெயருண்டு. நாடுவிருத்தி செய்தற்குக் கப்பலும் இராணுவமுந் தேவை. இதனை விரிவு அல்லது எம்பயர் எக்ஸ் பான்ஷன் என்பர். தன்னையுந் தன் மதலைகளையுங் காப்பாற்றுதல் கடமை. இதற்கு ஸோஷியல் சேர்விஸ் என்று சொல்லுவர். இந்த ஊழியத்தைச்செய்ய தேசத்தைச் சார்ந்த ஒவ்வொருவனுங் கடமைப் பட்டிருக்கிறான். வெகுகாலமாக சுக

தேசத்தார், பிரஞ்சுக்காரர் இவருடன் போர்புரிந்துமுறியடித்தும் தங்களுடைய பெருமையை நிலை நாட்டின. பிரிட்டிஷார் கப்பல் வல்லமையால் இந்தியா, ஆப்ரிக்கா, அமெரிக்கா, ஆஸ்ட்ரேலியா முதலான தேசங்களில் காலூன்றி செழிப்புற்றிருக்கின்றனர். ரஷியா, ஆர்ஜென்றினு, கானடா, இந்தியா, ஆஸ்ட்ரேலியா யூனைட்டெட் ஸ்டேட்ஸ் (ஐக்கிய நாடுகள்) முதலானஇடங்கள் ப்ரிட்டிஷ்தீவுகளுக்கு உணவு அளிக்கின்றன. பலவகை இறைச்சி ஜெர்மனியி லிருந்து ஏற்றுமதி யாகின்றது.

ப்ரிட்டிஷ் தீவுகளில் கரியும் இருப்பும் மிகுதி. இவற்றைக்கொண்டு யந்திரத் தொழில்கள் விருத்தியாயின. ஷெடிதீவில் ஆக்கப்படும் சரக்குகளெல்லாம் விலையாவதற்கு சந்தைகள் வேண்டும். இவற்றிற்காக பிரிட்டிஷார் அன்னிய நாடுகளைச் சொந்த மாக்கினர். அன்றியும் நாளுக்கு நாள் இதுகாறும் ஜெர்மனி தேசத்திற்கும் அக்கம் பக்கத்திலுள்ள நாடுகளுக்கும் மேற்கு அற்றத்திலுள்ள ப்ரிட்டிஷ் தீவிற்கும் உட்பகை எவ்வாறு நேர்ந்ததென்றும், இவ்வுட்பகையால் ஜெர்மனிக்கு ஏற்படக்கூடியகஷ்டநஷ்டங்களையும் கூறினேம். தற்காலத்தில் நடக்கும் ஜெர்மன் சண்டைக்குக் காரணமென்ன என்பதைச்சிறிது விசாரிப்போம். ஸெர்வியா வென்பது ஆஸ்ட்ரியாவிற்குட்பட்ட ஒரு சிற்றரசுநாடு. அதற்கும் ஆஸ்ட்ரியாவிற்கும் அத்துணை அந்தரங்கமில்லை. ஸெர்வியாவிலுள்ள சபைகள், வர்த்தமானப்பத்திரங்கள் ஆஸ்ட்ரியாவைப்பற்றிக் குறைவாய்ப்பேசிவந்தன. இஃதன்றி 1914 ஞு ஜுன்மீ 28-ல் ஸராஜீவோ என்னும் பட்டணத்தில் ஒருபைத்தியக்காரப் பயலால் ஆஸ்ட்ரியாவின் இளவரசன் இளவரசி

---

மனுபவிப்பவனுக்கு இது பொருத்தமாகாது. ஏனெனில் ஸ்டராக்கி கூறுமாறு தன்னுடைய பழைய வாழ்வை மாற்றிப் புதிதாக வழிதேட நேரிடுகின்றது.'

கொலைசெய்யப்பட்டார்கள். இதற்கு மூலகாரணர் செர்வியாவைச் சேர்ந்தவர்களே. ஏனெனில் பெர்டினண்டு என்பவர் பால்கன் யுத்தங்கட்குக்காரணபூதராயிருந்ததுமன்றி 1908 ல் பாஸ்நியா ஹெர்ஸ்கோவினு நாடுகளை ஆஸ்ட்ரியாவிற்குச் சேர்க்க முயன்று முன்வந்தனர். அல்லாமலும் ஸெர்வியாவிற்கு அட்ரியாட்டிக்கடலில் துறைமுகம்ஏற்படாதிருக்கும் பொருட்டு அவர்செய்த பிரயத்தனம் மிகுதி. அதனால் வெளிஏற்றுமதிவியாபாரநஷ்டம் ஸெர்வியாவிற்கு உண்டாயிற்று. தவிரவும் ஆல்பேனியா என்ற சுயாதீன இராஜ்யமொன்று ஏற்பட அவரே முயன்றனர். இந்த இராஜ்யம் பால்கன் ஜனங்களுக்குப் பக்கத்தில் தைத்த முள்போலாம்; என்றாயினும் இந்த இராஜ்யம் ஆஸ்டரியாவைச்சேரும் என்று முழுநம்பிக்கை அவருக்கு இருந்தது. இத்தகையகாரணங்களால் ஸெர்வியாவிற்குப் பெர்டினண்டின் உயிரை எடுக்க எண்ணமுண்டானது என்பர். ஆஸ்ட்ரியா, ஹங்கேரிக் குடிகளை இவ்வாறு கொலைசெய்தனரென்றும் விரோதமுள்ள ஸெர்வியாவின் தலைமேல் குற்றத்தைச் சாட்டினரென்றும் வதந்தி உலாவுகின்றது. உண்மை எதாயினும் சரி, ஆஸ்ட்ரியாவிற்கும் ஸெர்வியாவிற்கும் யுத்தமுண்டானதில் ஐயமில்லை. கொலை செய்தது பெரியகுற்றமே. இதைத்தண்டித்தல் அவசியமாம். ஆஸ்ட்ரியா, நியாயமானபடி குற்றவாளியை சிக்ஷைசெய்யக் கேட்டுக்கொண்டால் குற்றநிவாரணை எளிதில் ஏற்படும். இன்ன இன்னவிஷயத்திற்கு ஒத்துக்கொள்ளாத பக்ஷத்தில் ஆஸ்ட்ரியா ஸெர்வியாவின்பேரில் படையெடுக்கும் என்று முடிவான எழுத்துஅனுப்பப்பட்டது. நிபந்தனைகள், இணங்கத்தக்கனவல்லவாதலால் ஸெர்வியா எதை எதை ஒத்துக் கொள்ளக் கூடுமென்று விடையனுப்பியது. அதன்மேல் ஆஸ்ட்ரியா மற்ற நான்கு அதிகாரிகளுக்கும் தகவல்கொடுக்கும்பக்ஷத்தில் ஆஸ்ட்ரியாவிற்கு அவைவேண்டிய உதவி

செய்யும். அங்ஙனஞ்செய்யாமல் ஆஸ்ட்ரியா யுத்தபாணி யாகக் கிளம்பிற்று. செர்வியாவின் தலைநகராகிய பெல்கி ரேட்டின்பேரில் ஆஸ்டரியா யுத்தந்தொடரவே ரஷியா யுத்தத்திற்குத் தயார்செய்ய ஆரம்பித்தது. சேனைகளைத் திரட்டியது. உடனே ஜெர்மனி ப்ரான்ஸிற்கு முடிவான பதில்வேண்டுமென்று எழுதியது. முடிவு தெரியு முன், மேற்கெல்லையில் நடுவுநிலையிலுள்ள இளவரசியாலா ளப்பட்டுவந்த லக்ஸம்பெர்க் என்னும் சிற்றரசைத் தொந் தரவுசெய்தது. ஆகஸ்டு முதல் யுத்தம் ஆரம்பித்தது. மற்றொரு நடுநிலை யரசாகிய பெல்ஜியத்தின்மேல் ஜெர்மனி படையெடுத்தது. இதற்கு ப்ரிட்டன் நியாயங்கேட்டது. பதி லில்லை. யுத்தவேலை நடந்தது. ஆகஸ்டுமீ 4உ ப்ரிட்டன் ஜெர்மனிக்கு விரோதமாக யுத்தத்திற்குத் தலைப்பட்டது. ஏழாம் எட்வர்டு மகாராஜாகாலத்தில் அவர் பல இராஜ்யங் களுக்குள்ளும் யுத்தம்வாராமல் சமாதானஞ்செய்துகொண்டு வந்தனர். அதற்காக அவரை 'சமாதான வலைஞர்' என்று உலகத்தார் கூறுவர். சமாதானவலைவீசி சாவாத சண்டைக்கு சரியான கொடியுயர்த்தினர் என்பது அவருடைய பகைஞர் கூற்று. எவ்வாறாயினும் அவர்காலத்தில் யுத்தம்நேரிடாமல் தடைகட்டினர். அதேவிதமாக ஐந்தாம் ஜியார்ஜ் மன்னனும் மந்திரியையனுப்பிச் சமாதானஞ் செய்ய முயன்றும் பயன் படவில்லை. ஜெர்மனி யுத்தபாணியாய்விட்டது. அது ஒரு வர் மதியையும் பெரிதாகக்கருதவில்லை. ஈஜியன் கடல்வரை நாடுகளைப்பிடித்து ஏஷியாமைனரில் பாக்டாட் இருப்புப் பாதையமைத்துக் குடியேற்றஞ்செய்விக்கவேண்டுமென்ற எண்ணம் கெய்ஸருக்குத் தோன்றியபடியால் சமாதான மார்க்கம் தவறியது. ஸெர்வியாவைத் தொலைத்துவிடுவதே ஆஸ்ட்ரியாவின் முழுமனதாயிற்று. இவ்விதமாக இரண்டு அதிகாரிகளும் யுத்தசன்னத்தராயினர். ஆஸ்டரியாவும்

இற்றலியம் ஜென்மவிரோதிகளாயினும் உடன்படிக்கைப்படி இற்றலிதேசம் இவர்களுடன் சேரவேண்டும். சேராத தன் காரணம் எளிதில் விளங்கும். ஆஸ்ட்ரியாவின்மேல் ரஷியா படை யெடுத்தால் ஆஸ்ட்ரியாவைக் காப்பதற்கு இற்றலி உதவியாயிருக்கும். அதிக நாடுகளைக் கவரவேணு மென்ற எண்ணத்துடன் ஆஸ்ட்ரியா யுத்தத்திற்கு ஆரம் பித்தால் அதற்கு இற்றலி உடன்பட வேண்டியதில்லை. ஆதலால் இற்றலி நடுநிலையிலிருக்கின்றது. 1839ல் செய்த உடன்படிக்கைப்படி பெல்ஜியத்தின் சுவாதீனத்தைக் காப் பாற்ற உதவி செய்வது ப்ரிட்டனுடைய கடமையாம். கடமையை நிறைவேற்றுதலே ஆங்கிலேயரின் பெருமை யாம். துண்டுக் கடுதாசியென்று உடன்படிக்கையை நிரா கரிப்பது அவர்களுக்கு வழக்கமில்லை. ஆதலால் ஜெர் மனி பெல்ஜியத்துட் சென்ற பொழுது ப்ரிட்டிஷார் முன் வந்துதவி செய்யத் தலைப்பட்டனர். பெல்ஜியத் தையும் ஹாலண்டையும் ஜெர்மன் இராஜ்யத்துடன் சேர்த் துக் கொள்ளுவதே ஜெர்மனியின் அந்தரங்க விருப்பம். ஏனெனில் ஜெர்மனிக்கு முக்கிய துறைமுகங்களாகிய ஆம் ஸ்டர்டாம், ராட்டர்டாம் முதலானவை மேற் கூறிய நாடுகளிலிருக்கின்றன. ஹாலண்டின் செல்வச் செருக்கு ரைன் நதியின் வழியாய் ஜெர்மன் வர்த்தகம் ஹாலண்டிற் குச் செல்வதனாலேயே. இதைத்தடுக்க வெகு பொருள் செலவு செய்து டார்மண்டு எம்ஸ்கால் வெட்டப்பட்டது. இது வெட்டப்பட்ட பின் ஹாலண்டிற்கு வரும்படி குறைந் தது. இவ்வாறு வரும்படி நாளுக்கு நாள் குறைவுபடும் பக்ஷத்தில் அத் தேசம் ஜெர்மனி இஷ்டப்படி நடக்கு மென்று கெய்ஸர் நினைப்பு. ‘ரைன் நதியைத்திருடினாலும் எங் கள் சுவாதீனத்தைத் திருட இடங்கொடோம்’ என்றார் ஹாலண்டர் ஒருவர். இது நிற்க. பெல்ஜியம் ஜெர்மன்

படையை எதிர்த்தபடியால் அது தேசம் பாழானாலும் ப்ரெஞ்சுப்படை திரண்டுவர அவகாசங் கொடுத்ததுமன்றி தேசத்தின்போர்வீரத் தனத்தையும் நாட்டியது. இதல்லாமல் பெல்ஜியமும் ப்ரான்ஸும் ஜெர்மனியின் படை செல்வதற்கு இடங்கொடுக்குமானால் இதுவரை சரித்திரத்திலில்லாத பெரிய யுத்தம் நேராது. உயிரழிவும் பொருளழிவும் நகர நசிவும் வரமாட்டாது. இரண்டு தேசங்களும் கண்மூடித்தனமாய் வழிகொடுக்கும் பக்ஷத்தில் ஜெர்மனியின் அபரிமிதமான சேனை ப்ரிட்டனை இலகுவில் விடாது. ப்ரிட்டிஷார் தரைச்சண்டையில் ஜெர்மனிக்கு ஈடாக மாட்டார் என்பது உலக அபிப்பிராயம். ஆதலால் கப்பற் சண்டையால் தங்களைக் காப்பாற்ற வேண்டிவரும். அப்பொழுது ஜெர்மானியக் கப்பலின் ஊழல் வெளிப்படும். 'பார்கண்டது தண்ணீர் கண்டது', என்று இருவரும் ஓயாத யுத்தஞ் செய்வர். இத்தகைய பெரிய யுத்தம் வாராமல் ப்ரிட்டன் முன்யோசனை செய்து ரஷியா, ப்ரான்ஸ், ஜப்பானுடன் கூட்டுறவு செய்தது. ஆதலால் மேற்கே ஜெர்மனி, பெல்ஜியம், ப்ரான்ஸில் சண்டை போடுகிறது. ப்ரான்ஸிற்கு ப்ரிட்டிஷார் உதவி செய்ய மார்ஷல் ப்ரெஞ்சு என்பவரின் தலைமைக்கீழ் சேனையனுப்பி யிருக்கின்றனர். இது போலோன் துறைமுகத்திலிறங்கி ஜெனரல் ஜாபரால் நடத்தப்படும் பிரெஞ்சுப் படையொடுசேர்ந்து ஜெர்மனி இராணுவத்தைத் தாக்குகின்றது. ஜெர்மனிப்படை பெர்லின் நகரத்தைவிட்டுப்புறப்பட்டு லீஜ் நகரத்தைப் பிடித்து, அதிலிருந்து இரண்டு பகுதிகளாகப் பிரிந்து ஒரு பகுதி பெல்ஜியத்தின் வழியாகச் சென்று லூவேன் என்ற நகரத்தையும் புத்தகசாலையையும் நாசப்படுத்தி, ப்ரஸல்ஸ் நகருக்கு ஏகி, அதைக் கைப்பற்றி முக்கிய ஸ்தானமாக்கி, அதன்பின் டோர்னே,

லிலீக் கோட்டையையும் பிடித்து பாரிஸ் நகரத்திற்கு நாற்பதுமைல் தூரம்வரை சென்றது. மற்றொரு பகுதி லீஜி லிருந்து நாமூருக்குச் சென்று ப்ரஸல்ஸிலிருந்து வந்த பட்டாளத்தைச் சேர்த்துக்கொண்டு ஷார்லராய், மாபியூஜ், குவேன்டின் வழியாய் பாரிஸ் நகரஞ்செல்லத் தலைப்பட்டது. மான்ஸ், மார்ன் இவ்விரண்டு இடங்களிலும் பலத்த சண்டை நடந்தது. இவ்வாறு செல்லுங் காலத்தில் ப்ரான்ஸ் அதிகாரிகள் பாரிஸ் நகரத்தைக் காலி செய்துவிட்டு பிஸ்கே குடாக்கடற்கரைப் பட்டணமாகிய போர்டோ வைத் தலை நகராக்கினர். இத்தருணம் ரஷியா ஆஸ்ட்ரியாவை சில விடங்களில் தோற்கடித்து காலிஷியா வைக் கைப்பற்றியது. இஃதன்றி ஜெர்மன் இராஜ்யத்தின் கீழ் எல்லையைக் கடந்து 40- மைல்தூரம் உட்சென்ற சமாசாரம் கெய்ஸருக்கு எட்டியது. அவர் உடனே 168 இருப்பு வண்டித்தொடரில் ஆட்களையும் ஆயுதங்களையுங் கொண்டுபோய் உள் வருவதைத் தடைசெய்து ஆஸ்ட்ரியாவிற்கும் சிறிது உதவிசெய்தனர். காலதாமதமாய்விட்டபடியால் ஜெர்மனியினுதவி ஆஸ்ட்ரியா விற்குப் பயன்படவில்லை. கெய்ஸர் மேற்கே திரும்பி வந்ததும் பாரிஸ் காலி செய்யப்பட்டதென்று கேள்விப்பட்டவுடன் அது சூதடியென்று கருதித் தானும் தன்படை இனிச்செல்லும் முறையைப்பற்றி ஆலோசிக்க ஆரம்பித்தனர். பாரிஸ்நோக்கி இரண்டு பகுதிகளாகச் சென்றபடையைத் திரும்பும்படி கட்டளையிட்டனர். அங்ஙனமே படை திரும்பிற்று. இப்பொழுது ப்ரான்ஸில் எயின் நதிக்கரையில் சண்டையும் முற்றுகையும் பலமாக நடக்கிறது. ஆறுவாரத்திற்கு மேலாகியும் முடியவில்லை. வடகடல் நோக்கி ஜெர்மன் படைகள் செல்வதன் கருத்து ஜெர்மனி தன் கப்பல் தொகுதியால் கடற் சிங்கமாகிய ப்ரிட்டனுடன் நீரில் யுத்தஞ்செய்து வெற்றி பெறலாமென்ற கனவுபோலும். பெல்ஜியத்தில்

மாலேன்ஸ், ஆன்ட்வேர்ப், ஆஸ்டெண்டு முதலான விடங்களி லும் போர்நடந்தது. ஆன்ட்வெர்ப் பிடிபட்டதும் ப்ரான்ஸில் ரீம்ஸ் அக்கினிக்கு இரையாயிற்று. தரைச்சண்டை மட்டு மன்னியில் ஆகாயக்கப்பல்களும் சண்டைக்குவந்துள. ஆஸ்ட் ரியா ஜெர்மனிக்கு உதவி செய்ய முடியாததால் ஜெர்மனி தனியே பெல்ஜியம், ப்ரான்ஸ், ப்ரிட்டன் தேசப் படைக ளுடன் மேற்கில் சண்டை போடுகின்றது. கீழ் எல்லேயில் ரஷியா, ஸெர்வியா, மாண்டி நீக்ரோவின் படைகளே எதிர்க் கின்றது. சமீபத்தில் டர்க்கி ஜெர்மனியுடன் சேர்ந்து டார்ட னெல்ஸ் கால்வாயை அடைத்தது. ஜெர்மன் படைகள் அதைக்காக்கின்றன. ரஷ்யக்கப்பல்கள் சிலவற்றை டர்க்கி யின்கப்பல்கள் நாசஞ்செய்தன. ரஷ்யா ஜெர்மனி, டர்க்கி இரண்டினுடன் போர்புரிந்து வருகிறது. ஈஜிப்து, பெர்ஷ் யன் குடாக்கடல் இந்த இரண்டு இடங்களிலும் யுத்தம் நடக் கின்றது. ஜப்பான் கயாச்சோ, ஸிங்டாவைப்பிடிக்கவும் அவ் விடத்திலுள்ள ஜெர்மானியர் உணவுகிடையாமல் சரண் அடைந்தனர். சைனுவில் ஏதோ குழப்பம் நடக்குமென்று தோன்றுகிறது. கீழ்ஆப்ரிக்காவில் பலத்த சண்டைநடந்து வந்தது. சென்னே ஹாஸ்பிட்டல் கப்பல் அவ்விடஞ்சென் றிருப்பதாக வதந்தி. அமெரிக்கா கண்டத்தில் சிலியில்நடந்த கப்பற் சண்டையில் அனேக உத்தியோகஸ்தர்களும் ஆட் களும் மாண்டனர் என்று சமாசாரம் வந்திருக்கிறது. இத் தருணத்தில் இந்தியயுத்தவீரர்கள் பேரிலுள்ள அன்பின் மிகுதியால் அவர்களே யுத்தகளத்தில் வைத்துப் பார்க்கப் போன ராபர்ட்ஸ்பிரபுவும் ஆங்கே உயிரிழந்தனர். ப்ரான் ஸில் ஒய்ப்பிரஸ்க் கால்வாய்ப் பக்கத்தில் மும்முரமான போர் நடந்துவருகிறது. ஜெர்மனிப்படை கலேய்க்குப்போகவிடா மல் இங்கிலீஷ் ப்ரஞ்சு இந்தியப்படைகள் அதைத்தாக்கு கின்றன. இற்றவிதேசத்துத்தூதர்கள் லண்டன், பாரிஸ்,

பெட்ரோகிராட் நகரங்களிலிருந்து உரோமாபுரியிலுள்ள போப் என்பவரிடம் ஆலோசிக்கப்போ யிருக்கின்றனர். முடிவு தெரியவில்லை. ஆகவே இணையற்ற யுத்தத்தின்முடிவு எவ்வாறும்? இறைவனுக்கே வெளிச்சம். ப்ரிட்டனுக்குப் பொருளும் படையும் நான்கு திசையினின்றும் குமிகிறது. டிரான்ஸ்வால் ஆரஞ்சுநதிக் குடியேற்ற நாடுகளிலுள்ள போவர்கள் தலைவர்களாகிய கர்னல் போதா, ஜோபர்ட் என்பவர்கள் விடாக்கண்டர்களாகிய போவர் சேனைகளுடன் யுத்தத்திற்கு ஏகுகின்றனர். ப்ரான்ஸ் படையின் சேதமும் பெல்ஜியத்தின்படையழிவும் கணக்கிடப்பட்டு வெளி வரவில்லை. அது போன்றே ரஷ்யாவின் ராணுவத்தில் அழிந்தவர் தொகை திட்டமாகத் தெரியவில்லை. இவற்றிற்கு முக்கிய காரணம் யுத்தகளத்திலிருந்து தந்திச் சமாசாரம் நேரில் இந்த நாட்டிற்கு வருவதில்லை. லண்டன் நகருக்குப் போய், பரிசோதனை செய்யப்பட்டு, வெளியிடக்கூடிய விஷயம்மட்டும் நமக்குக் கிடைக்கின்றது. இது நிற்க. இந்தியா வொன்றிலிருந்து மட்டுமே போயிருக்கும் யுத்தபண்டு நாலுகோடிக்குக் குறையாது. இது தவிர, சீக், கூர்க்கர், பஞ்சாபி, பலூச்சித் துருப்புகளும் சண்டைக்குச் சென்றிருக்கின்றன. இந்தியாவில் பலவிடங்களிலும் புதிதாகப் படைகள் சேர்த்து வரப்படுகின்றன. ஆஸ்ட்ரேலியாவினின்று சென்ற படைகள் ஆப்ரிக்காவில் ஜெர்மன் நியூகினியைக் கைப்பற்றியது. பின் காமரூன் தீவுகளும் தொலைந்தன. இத்தகைய பெருமித ஐஸ்வரியம் படைத்த ப்ரிட்டனுக்குப் பயமில்லையென்றே சொல்லவேண்டும். ஆயினும் தற்காலத்தில் நேரிட்டிருக்கிற செலவிற்கும் உயிர்ச் சேதத்திற்கும் கணக்கில்லை. ஆதலால் நவீன கதைகள் எழுதுவதில் மிக வல்லுநராகிய கோனன் டாயில் என்பவர் ஒவ்வொரு பிரிட்டனும் இத்தருணத்தில் யுத்தத்திற்குத் தயாராக வரவேண்டுமென்று வற்புறுத்தி

ஒரு சிறிய புத்தகம் எழுதியிருக்கின்றனர். அதற்கு முன் னுரை எப். இ. ஸ்மித் என்ற ஒலக்கத்தினரால் எழுதப்பட் டிருக்கின்றது. தீவு எங்கும் சேனை தயாரிக்கப்பட்டு வரு கின்றது. இந்தியர்களுடைய இராஜ விஸ்வாசத்தை க்ரூ, ரோஸ்பரி, கர்ஸன் முதலான பிரபுக்கள் சுட்டிக்காட்டிப் பேசியபின் சுதேசப் பெருமைநாடும் இராஜாக்களும், ஆயிரக்கணக்கான வாலிபர்களும் முன் வந்திருக்கின்றனர். அபரிமிதமான சேனை நம்மரசனுக்குச் சேர்ந்திருக்கின்றது. ஜெர்மனி தேசம் எத்தனையோ வருஷகாலம் பொருள் சேமித் துப் படைகள் தயார் செய்தபோதிலும் யுத்தம் நீடிக்கு மானால் கெய்ஸர் கதி அதோகதியாம். கெய்ஸர் அநியூகி யென்றாலும் அவசரவாணி. இனி யுத்தத்தை நீடிக்க விடா மல் தம்மிடமுள்ள பட்டாளங்களைத் திரட்டி முறட்டடி யாகப் போர்செய்து அதை முடிவுக்குக் கொண்டுவர முயலுகின்றனர். ஆயினும் அவரைக் கூட்டுறவினர் இலகு வில் விடார். இந்த யுத்தத்தில் நம்முடைய அதிபராகிய ப்ரிட்டன் ஜெயம்பெற யாமெவரும் காலைமாலை கடவுளைத் தோத்திரஞ் செய்வோமாக.

---

## அத்தியாயம் IX

---

### முடிவுரை.

இப்பொழுதுபோர் ஜெர்மனிக்கும் கூட்டாளிகளுக்கும் நடந்த போதிலும் அது ஜெர்மனிக்கும் ப்ரிட்டனுக்கும் நடப்பதாகவே கொள்ளவேண்டும். ஆதலால் ஜெர்மன் போர்க் கப்பலொன்றுக்கு பிரிட்டன் கப்பல் இரண்டிருந்தா லொழிய பிரிட்டனுக்கு எப்பொழுதும் ஆபத்துத்தானென்று ஆஸ்டின் ஹாரிஸன் எழுதுகிறார். அவ்வாறு இரண்டுபங்குக் கப்பல்கள் ப்ரிட்டனுக்குத் தற்காலம் இல்லை. கூடிய விரை

வில் இந்த யுத்தத்தின் பயனாக ப்ரிட்டிஷார் கப்பல் ராணு வங்களைப் பெருக்குவர் என்று நினைக்க இடமுளது. ஜெர் மனியின் சிறு கப்பலாகிய எம்டன் வங்காளக் குடாக்கட லிலும் அரேபியன் கடலிலும் எத்தனை கப்பல்களை முழுகச் செய்தது. சென்னையில் செப்டெம்பர் மீ 22உ இரவு 9 மணிக்கு 10 நிமிஷ நேரத்தில் எவ்வளவு பொருட் சேதமும் உயிர்ச்சேதமும் முண்டு பண்ணிவிட்டது. சென்னைக் கஷா யோரமாயிருந்த பீரங்கிகள் அதைத் தொலைக்காமல் விட்டு விட்டன. இதற்குப் பயந்து சென்னையை விட்டுப் போனவர் கள் எத்தனை ஆயிரம் பெயர். மூன்று கப்பல்கள் எம்ட னைத் தேடுகின்றன வென்று காருண்ய இராஜப் பிரதி நிதி யவர்கள் அனுப்பிய தந்தியால் சிலருடைய பயபீதிகொண்ட மனங்குளிர்ந்தது. நம்முடைய இராஜதானிக்கவர்னராகியமகி மைதங்கிய பேன்ட்லண்ட் பிரபுவும் உதகமண்டலத்தி லிருந்து சென்னைக்குவந்து கடற்கரையோரத்தில் எண்ணைக் குளங்கள் தீப்பற்றி எரிந்ததையும் எம்டன் குண்டினால் காயப்பட்டு சிகிச்சைக்காக ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்த வர்களையும் தரிசித்து, பின் எம்டனால் இனியாதொரு கெடு தியும் வராது என்று ஜனங்களுக்கு மனோதைரிய முண்டா கும்படி சபைகளில் பேசினதுமன்றி, பற்பல சுதேசபாஷை களில் துண்டுப் பத்திரங்களைப் பதிப்பித்து வெளியாக்கி நகரெங்கும் பரப்பி, அதன் பின்னரே மலைக்கு மறுபடியுஞ் சென்றனர். இப்பிரபு கூறியவாறே இந்த நவம்பர்மாதத்தில் கோக்கோஸ் தீவுப்பக்கத்தில் ஸிட்னி என்ற ஆஸ்ட்ரேலியாக் கப்பல் எம்டனை நாசப்படுத்திற்று. ஜனங்களின் பீதியும் விலகியது. இது நிற்க.

ஜனத்தொகை விருத்தியாவதால் ப்ரிட்டிஷ் தீவுக ளில் உணவு போதுமானபடி கிடைப்பது அரிது. ஜாஸ்தி யானவர்கள் ப்ரிட்டிஷ் கொடிபறக்குந் தேயங்களுக்குப்

போய்க் குடியேறினர். தற்காலத்தில் குடியேற்ற நாடுகளெல்லாம் பிள்ளைகளாகவும் ப்ரிட்டன் தாய் தேசமாகவும் பாவிக்கப் படுகின்றன. ஒரு சிறிய தீவிற்கு இத்தனை பெருமை வாய்த்தது மற்றவர்களுக்குப் பொறாமையே. ப்ரிட்டனும் தன்னைப்போன்று கப்பற் கூட்டம் சேர்ப்பவர்களைக் கண்டால் தன்பெருமை அழிந்து விடுமோ வென்று நினைப்பதும் இயல்பு. இவ்விதமாகவே இராணுவச் சிறப்புற்ற ஆஸ்ட்ரியா, ப்ரான்ஸ், ரஷியா தேசங்களும் தங்கள் தங்கள் இராணுவப்பெருமையைக் காப்பாற்ற முயலுவர். நாள்தோறும் இராணுவத்தை விருத்திசெய்வர். இம்மூன்று இராணுவச் சிறப்புற்றதேசங்கட்கு நடு நாயகமா யிருப்பது ஜெர்மனி இராஜ்யமே. பலவரசுகள் சேர்ந்த இந்த இராஜ்யம் 1871ல் ஒற்றுமைப் பட்டு மகாராஜ்ய மாயது. இது ப்ராங்கோ - ஜெர்மன் யுத்த முடிவில் ப்ரான்ஸிட மிருந்து ஆல்சேஸ்-லோரேன் என்ற மாகாணத்தைப் பிடுங்கிக் கொண்டது. இது ப்ரான்ஸ் தேசத்திற்கு மேற் கெல்லையில் ஒரு பெரிய இயற்கைக் கோட்டை போன்றதாம். இதைக் கைப்பற்றியதால் ப்ரான்ஸ் தேசத்திற்கும் ஜெர்மனிக்கும் உட்பகை ஏற்பட்டது. மெட்ஸ் என்னும் நகரம் ஷை லோரேனிலுள்ளது; இதில் 15-மைல் தூரஞ் சுற்றளவுள்ள பெரிய கோட்டை யிருக்கின்றது. இதைத் தற்காலத்தில் ஜெர்மன் சக்ரவர்த்தி பலவிதமாகப் பலப்படுத்தி ப்ரான்ஸுடன் சண்டைசெய்வதற்குத் தம்முடைய இராணுவத்திற்கு முக்கிய ஸ்தானங்களிலொன்றாக ஆக்கிக்கொண்டனர். தொழில், எந்நாட்டிலுந் தடையற்ற வர்த்தகம், பலவித விருத்திகளால் அபரிமிதமான பொருள் ஜெர்மனிதேசத்திற்கு வந்துசேரவும் இராணுவச் சிறப்பைக்காட்டிலும் கடற்பெருமை வேண்டுமென்ற எண்ணம் ஜெர்மன் சக்ரவர்த்திக்கு உண்டானது. முன் அத்தியாயத்திற்கூறியபடி கப்பல்களைச்

நாளுக்குநாள் அதிகமாகச்செய்தனர். 'ஜெர்மனியின் பெருமை இனி கீரிலே' என்றனர் கெய்ஸரும். இந்த அவா கெய்ஸருடைய நனவிலுங் கனவிலும் தோன்றவே பெரும்பொருள் செலவிட்டு மரக்கலங்கள் ஆக்கப்பட்டன. ஆறு அதிகாரிகளுள் ஒருவருக்கொருவர் நாட்டிலும் அதிகாரத்திலும் அதிகப்படக்கூடாதென்ற பயமுண்டாதலால் அவர்களுக்குள் உடன்படிக்கை செய்துகொள்வது வழக்கம். அவர்கள் சந்திக்கும் இடம் ஹாலெண்டில் ஹேக் என்ற நகரமாம். 1907ல் அவர்கள் ஒன்று கூடியகாலத்தில் ஜெர்மனி தேசத்திற்கு அதிக மரக்கலங்கள் தேவையில்லை யென்றும் ஆதலால் அவற்றைக் குறைக்கவேண்டுமென்றும் சொல்லியபடியால் ப்ரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் துவேஷம் அதிகரித்தது. அக்காலத்தில் ஜெர்மன் பத்திரிகைகளெல்லாம் "ப்ரிட்டனுக்கு வேண்டியதெல்லாம் வந்தாய் விட்டது. அவற்றைச் சுகமாகப் பிறர் இடையூறின்றி அநுபவித்தலிலேயே கவனமாதலால் தங்களைப்போன்று பிறரும் புதியநாடுகளைப் பிடித்தல், வர்த்தகத்தைப்பெருக்குதல், மிகுந்த ஜெர்மானியருக்கு பிழைப்பிடந் தேடுதல், இவற்றைக் காத்தற்பொருட்டுக் கப்பற்றொகையை அதிகரித்தல், இவற்றைக் கண்டால் மனம் புழுங்குகின்றனர், உலகமெங்கும் மகாராஜப்பெருமையைத் தாங்களேவகிக்க நாட்டமுற்றிருக்கின்றனர்" என்று பறை சாற்றின. அதுமுதல் ஜெர்மனி ப்ரிட்டன் விஷயத்தில் இடையூறுசெய்துகொண்டுவரத் தலைப்பட்டது. சில்மிஷஞ்செய்வதால் ஜெர்மனிக்கு இலாபம் இல்லையெனினும் பகையாளிக்கு நஷ்டம் அதிகப்பட்டது. ஸ்பானிஷ் அமெரிக்கன் யுத்தத்தில் ஜெர்மனி தலைநீட்டியதால் அமெரிக்காவின் விரோதம் ஏற்பட்டது. அட்லாண்டிக் சமுத்திரத்தில் போர்க்கப்பல்களின் தலைமையென்று குரூகருக்கு அனுப்பிய தந்தியால் போயர் யுத்தமுண்டாயிற்று. அதில் ப்ரிட்டனுக்கு செலவுமிகுதி.

எண்ணிறந்த வீரர்கள் மடிந்தனர். கடவுள்கிருபையால் கடைசியில் வெற்றிகிடைத்தது. மஞ்சூரியா யுத்தத்தில் ஜெர்மனி ரஷியாவிற்கு உதவிசெய்தும் ஒன்றும் பலிக்கவில்லை. ஆனால் ஜப்பான் விரோதமுண்டாயிற்று. ரஷியாதோல்வியடைந்தது. இதற்குமுன் 1877-ல் ரஷியா டர்க்கியின்மேல் படையெடுத்து முக்கிய நகராகிய கான்ஸ்டான்டிநோபிளுக்குவந்து ஸான்ஸ்டீபானோ உடன்படிக்கையின் நிபந்தனைகளைக் கூறியகாலத்தில் பெர்லின்நகரில் பிஸ்மார்க்கின் தலைமையின்கீழ் பஞ்சவதிகாரிகளுங்கூடினர். ரஷியாவின் பேரவாவாகிய பல்கேரியா பெரிதாதலால் ரஷியாவின் செல்வாக்கு அதிகரித்தலைத் தடுத்து சிறிதுஞ் சம்பந்தமில்லாத ஆஸ்ட்ரியாவிற்கு பாஸ்நியா, ஹெர்ஸிகோவினா மாகாணங்களைப் பிடுங்கிக்கொடுத்தபடியால் ரஷியாவிற்கு ஜெர்மனியின்பேரில் மிகுந்த கோபமுண்டாயிற்று. ப்ராங்கோ ஜெர்மன்யுத்தத்தில் ரஷியா தலையிடாமலிருந்ததற்காக ஜெர்மனி விஸ்வஸிக்கவேண்டியதிருக்க செய்ந்நன்றி மறந்தது என்று சினந்தது. ஆதலால் மூன்றுமகாராஜாக்களுக்கும் ஏற்பட்ட ஒற்றுமை ஒழிந்தது. 1879-ல் ஒன்றுசேர்ந்த ஜெர்மனியும் ஆஸ்ட்ரியாவும் 1891-ல் இற்றலியுடன் கைகோத்தன. இற்றலி சேர்ந்ததன்காரணம் ப்ரஞ்சுக்காரர் டியூனிஸை தங்களுடைய காவல்மாகாணமாக ஏற்படுத்திக்கொண்ட நிமித்தமே. இற்றலி தன்னுடைய கூட்டாளிகளின் உதவியால் ப்ரான்சுக்கு இடையூறு செய்ய நினைத்தது.

1887-ம் வருஷத்தில் ரஷியா இந்தியாவின்மேல் படையெடுக்குமோவென்றபீதியிருந்தது. ருஸ்ஸோ ஜப்பானிய யுத்தத்தால் ரஷியாவின் வல்லமை வெளியாயிற்று. இந்தியருக்குப் பீதியும் தொலைந்தது, இதற்குமுன் மொராக்கோ விஷயத்தில் ஸுல்டான் பக்கம் ஜெர்மனி தலையிட்டபடியால் ப்ரிட்டன் ப்ரஞ்சுக்காரருக்கு உதவிசெய்ததுமன்றி ஜெர்ம

னிக்கு ப்ரான்ஸின்பகையும் அதிகரித்தது. ஆல்ஜெஸிராஸில் கூடின சபையில் ப்ரிட்டனும் ரஷியாவும் பிரான்ஸ்பக்கமிருந்தன. பிரிட்டனுக்கும் ரஷியாவிற்கும் பந்தம் அதிகரித்தது. ஜெர்மனிக்கும் இற்றலிக்கும் இணக்க முண்டாயினும் இங்கிலண்டும் பிரான்ஸும் விரோதிகளாயின. ஆஸ்ட்ரியா, ஜெர்மனி, இற்றலிமூன்றிற்கும் கூட்டுறவுநேரிட்டது. இதனால் ரஷியாவிற்கும் பரம்பரை சத்துருக்களாகிய ப்ரான்ஸ் ப்ரிட்டனுக்கும் ஒற்றுமை அதிகரித்தது. அதுமுதல் ரஷியாவின் சேனையும் போர்க்கப்பலும் விருத்திசெய்யப்பட்டன. டர்க்கி பலவீனப்படவே ரஷியாவினுதவியால் பால்கன் ராஜ்யங்கள் தலையெடுக்க ஆரம்பித்தன. இதுஜெர்மனிக்கு அபாயமென்று கருதப்பட்டது. ஆஸ்ட்ரியாவிற்கு பாஸ்நியா, ஹெர்ஸ்கோவினு தேசங்கள் கிடைத்தன. ரஷியாவின்பகையும் அவற்றால் சம்பவித்தது. ஜெர்மனி ஆஸ்டரியாவிற்கு உதவி செய்ததன் முக்கியநோக்கம் அட்ரியாட்டிக்கடலில் தனக்கு ஒருதுறைமுகம் வேண்டுமென்றே. கருதியவண்ணம் சித்தித்திருக்குமாயின் ஜெர்மன் கப்பல்கள் நடுத்தரைக் கடலில் (மெடிட்டரேனியன்) ஏராளமாகவரும். அதனால் ப்ரிட்டன், ப்ரான்ஸ் கப்பல்களுக்கு இடையூறுவருமாதலால் அந்த இரண்டு அதிகாரிகளும் ஒன்று சேர்ந்து உறவுசெய்துகொண்டனர். மூவர் ஒற்றுமைப்படி ப்ரான்ஸ் போர்க் கப்பல்கள் மெடிட்டரேனியன் கடலைக்காக்கவேண்டுமென்றும், ப்ரிட்டன் யுத்தக்கப்பல்கள் நார்த்ஸீக் கரையோரமாயுள்ள ப்ரான்சின் வடபாகத்தைக் காக்கவேண்டுமென்றும், ரஷியா பால்டிக்கடல் காக்கவேண்டுமென்றும் ஏற்பட்டது. பெல்ஜியம், ஹாலெண்டுமுதலான சிறு இராஜ்யங்கள் ஒரு கக்ஷிக்காரரையுஞ் சேராதவை. இவற்றிற்குக் கெடுதல் வராதவண்ணம் காப்பது ப்ரிட்டன்போன்ற பெரிய அதிகாரிகளின் கடமையாயிற்று. ப்ரிட்டன் சுயநயங்கருதி யுத்தத்தில் இல

# ஈரோப் கண்டம்




1. எடின்ப்ரோ
2. லண்டன்
3. டோவர்
4. பாரிஸ்
5. ரீம்ஸ்
6. வெர்டன்
7. நான்ஸி
8. ஹூணிவில்லி
9. ப்ரஸல்ஸ்
10. நாமூர்
11. லீஜ்
12. மெதுயர்
13. ஆன்ட்வெர்ப்
14. ஹெலிகோலண்டு
15. கீல்
16. வில்ஹெம்ஸ்ஹேவன்
17. காக்ஸ்ஹேவன்
18. பெர்லின்
19. கோலோன்
20. காப்லென்ஸ்
21. ப்ரெஸ்லா
22. காணிக்ஸ்பர்க்
23. டான்ஸிக்
24. லிபோ
25. மெமல்
26. பெட்ரோக்ராட்
27. வார்ஸா
28. இன்வின்கெராட்
29. ப்ரெமிசெல்
30. கிராக்கோ
31. வியன்னா
32. பூடாபெஸ்த்
33. பெல்கிரேட்
34. புக்காரெஸ்ட்
35. டிரீஸ்ட்
36. வெனிஸ்
37. ரோம்
38. மார்சேல்ஸ்
39. ஜிப்ரால்டர்
40 லிஸ்பன்
41. மாட்ரிட்
42. கான்ஸ்டான்டி நோபிள்
43. டார்டெநெல்ஸ்
44. போர்டோ
45. கலே
46. புலோன்
47. ஹாவெர்
48. ஆம்ஸ்டர்டாம்
49. கோப்பன்ஹாவன்
50. க்ரிஸ்டியானியா

கொடாதிருந்தால் 750 மில்லியன்பவுன்கடனும் ஜனச்சேத மும் நேரிட்டிருக்காது. சேனையையும் கப்பலையும் அதிகப் படுத்த அவகாசங்கிடைக்கும். ஜெர்மனியுத்தத்திற்குவந்தால் அதை முறியடிக்க நல்லநிலைமையிலிருக்கலாம். ஆயினும் கடமைசெய்யத் தவறியவர்கள் என்ற அபவாதம் வரும். அதை யொழித்தற்பொருட்டே பிரிட்டன்போரில் புகுந்தது என்றறிக.

இந்த யுத்தத்தால் வரும் பயன் யாது? ஜெர்மனி இராஜ னாகிய கெய்ஸர், முன்னொரு காலத்தில் பிரிட்டிஷ் மந்திரி யொருவர் ஈரோப் மாப்பை (படத்தை) ச்சுருட்டுக என்று சொன்னது போல, சொல்லுகின்றார். அதாவது தம்மு டைய ராஜ்யத்தின் எல்லைகள் மாறும், பக்கத்திலுள்ள மாகா ணங்கள் தம்முடைய ராஜ்யத்திற்குச் சேரும், தமக்கு முன் னிருந்ததைவிடப் பதின்மடங்கு பெருமையும் செல்வாக்கும் உண்டாகும் என்பதே அதன் கருத்தாம். ஜெர்மனி தேசத் தாருக்குள் யுத்தத்தைப்பற்றிய அபிப்பிராயம் இரண்டுபட் டிருக்கின்றது. இந்த யுத்தத்தால் ஜெர்மனி தேசத்தில் பழைய ஏற்பாடுகள் மாறி ஆலக்கத்தின் (பார்லிமெண்டின்) அதிகாரம் விருத்தியாகும் என்பதுஒன்று. ப்ரிட்டனில் அரச னுக்கும் ஆலக்கத்திற்கும் ஆச்சரியமுண்டாகி ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் தெய்வீகவுரிமை பெற்றதா கப்பெருமைபாராட்டிய ஸ்டூவர்ட் அரசர்களில் ஒருவராகிய முதலாவது சார்ல்ஸ் என்பவரை சிரச்சேதஞ் செய்தவாறு இனி கெய்ஸருக்கும் குடிகளுக்கும் வேற்றுமையுண்டாகி குடியரசை நிலைநாட்டமுயலினும் முயலுவர் என்பது மற் றொன்று. இது நடந்தேறவேண்டுமானால் ஜெர்மனி இந்த யுத்தத்தில் கைசோர்ந்து முற்றிலுந் தோல்வியடையவேண் டும். நாட்டுக்குடிகள் கருத்து இதுவாயின் ஜெர்மனியை முறியடிப்பவர்கள் என்ன நினையார்கள். கூட்டாளிகள்

ஜெர்மனி இராஜ்யத்தை உடைத்துப் பங்கிட்டுக்கொள்வார்கள், என்பதில் ஐயமில்லை. இரண்டு நூற்றாண்டுகளுக்குமுன் ஜெர்மனி எவ்விதக்கேவல நிலைமையிலிருந்ததோ அவ்வாறு இப்பொழுதும் ஆகும். புதிதாய்ச் சம்பாதித்த குடியேற்ற நாடுகளும் கைவிட்டுப்போம். 19-ம் நூற்றாண்டும் பின்னும் என்ற பிரிட்டிஷ் பத்திரிகையின் செப்டெம்பர் சஞ்சிகையில் இதைப்பற்றி எல்லிஸ்பார்க்கர் பின்வருமாறு எழுதியிருக்கின்றனர்.

"ஜெர்மனி தோல்வியடைந்தால் அதன் இராஜரீகமும் வருமானமும் கெடும். அதற்கு கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும் உள்ள பெரியநாடுகளை இழக்கும். ப்ரான்ஸ் தேசம் ஆல்ஸேஸ் லோரெயினைப் பிடுங்கிக்கொள்ளும். அதனால் தற்காலத்தில் ஜெர்மனியில் அபிவிர்த்தியாயிருக்கும் இரும்பு உருக்குலைவியாபாரத்திற்கு இன்றியமையாதனவான அங்குள்ள இரும்புச் சுரங்கங்கள் போய்விடும். அஃதன்றி ரைன் நதிவரையுள்ள மாகாணங்களை ப்ரான்ஸ் தனக்கு வேண்டுமென்று கேட்கும். 1864-ம் வருஷம்வரை ஷ்லெஸ்விக் ஹால்ஸ்டீன் என்ற மாகாணத்துக்கு அதிபதியாயிருந்த டென்மார்க்தேசம் அதையும், அதிலுள்ள கீல் துறைமுகத்தையும், கீல்காலையும் தனக்குத் தரவேண்டுமென்று வாதிக்கும். ப்ரிட்டனுக்கு ஹெலிகோலாண்டும், பார்க்கமும், குடியேற்றநாடுகளும் வந்துசேரும். ரஷியா சக்கிரவர்த்தி முன்னரே விளம்பரஞ்செய்திருக்குமாறு போலண்டு நாட்டை ஜெர்மனியினின்று பிரித்து ஒரு ராஜ்யமாக்கித் தம் ரக்ஷணையில் வைத்துக்கொள்வர். அதனால் ஜெர்மனி இராஜ்யத்தின் கிழ் எல்லையில் ஒரு பெரிய ஜில்லா அதைவிட்டு நீங்கும். அஃதன்றி சைலீஷியாவில் ஒரு பகுதியும் டான்ஸிக், கோனிக்ஸ்பேர்க என்ற முக்கியமான துறைமுகங்களும் ஜெர்மனி இழக்கநேரிடும். இவற்றை இழக்கின் ரஷியாவின் எல்லை

யிலிருந்து பெர்லின் நகரத்திற்கு தற்காலத்திலுள்ள தூரம் ஒன்றுக்குப் பாதியாகிவிடும். ரஷிய இராணுவம் சில நாட்களில் மேற்படி நகரத்திற்குச் செல்லுதல் எளிதாகும். இவற்றால் ஜெர்மனி இராஜ்யம் விஸ்தீரணத்திலும்வரும்படியிலும் குறைவுபட்ட போதிலும் ஜெர்மன் ஜாதியார் அழியார்... ஜெர்மனியின் மிருகத்தனமும் படைச்செருக்கும் பாழ்பட்டு அது குடியரசாக ஆயினும் ஆகும். அங்ஙனம் ஆகும்பக்ஷத்தில் அது கிரேட்பிரிட்டன், (அமெரிக்கா) ஐக்கிய இராஜ்யங்களுடன்சேர்ந்து கூட்டாளியாகலாம்... இவற்றைவிட ஆஸ்ட்ரியா, ஹங்கரிக்கு நஷ்டம் மிகுதியாம். போலண்டு தனி இராஜ்யமாகுங்காலத்தில் ஆஸ்ட்ரியாவின் ஜனத்தொகையில் 5,000,000 குறையும். 3,5000,000 ருதீனியர்கள் ரஷியர்களைச்சேருவர். 5,000,000 செர்ப்ஜனங்கள் ஸெர்வியாவிற்குப்போவர். 3,000,000 ருமேனியர்கள் ருமேனியாவைச் சேருவர். 1,000,000 இற்றாலியர் இற்றலிக்குப்போவர். போலண்டு, ருமேனியா, ஸெர்வியா—இவை தனி இராஜ்யங்களாகும். ஹங்கரி சுயாதீனம் பெறும். ஆஸ்ட்ரியா சக்கிரவர்த்திக்கு மீதமிருக்கக்கூடியது சிற்சில துண்டுப் பகுதிகளேயாம். மற்றச்சிறு இராஜ்யங்கள் போன்று இதுவும் ஒரு சிறிய இராஜ்யமாகும்.''

இஃதன்னியில் ஜெர்மனி வெற்றிபெறுமானால் கூட்டாளிகளுக்குப் பெருத்த நஷ்டங்களுண்டாகும். ப்ரிட்டிஷார் கடலில் உச்சம்பெற்றிருப்பது மங்கும். மங்கினால் நமக்குப் பெரும்பீடை யுண்டாகும். ருஷிய-ஜப்பான் யுத்தம் வருமுன் 1887-ம் வருஷத்தில் ரஷியர் இந்தியாவின் மேல் படையெடுப்பரென்ற பயபீதி உண்டானதுபோல இப்பொழுது ஜெர்மனிதேசம் இந்த நாட்டைப்பிடிக்க நினைக்கும்; பிடிக்க ஒரு அடிநிலமாவது வேண்டுமென்று சாதிக்கும். சென்ற 150—வருஷங்களாக நம்மையாண்டு

வரும் ப்ரிட்டிஷார் ஒழுங்கும் சீர்திருத்தமும், நாகரீகமும் பாழ்படுமென்று நாம் பயப்பட இடமுண்டாம். இத்தகைய கேட்டினின்று எல்லாம் வல்ல இறைவன் நம்மை ரக்ஷிப்பாராக. இது நிற்க.

ஜெர்மனி முறியடிபட்டுச் சின்னாபின்னமாகப்போகும் பக்ஷத்தில் கூட்டாளிகளுக்குள் ஒற்றுமை நீடிக்குமோ என்பது சந்தேகம். ரஷியா மகா இராஜ்யம் ஏசியா, ஈரோப் கண்டங்களில் பாதி விஸ்தீரணமுள்ளதென்று கூறலாம். அதில்பெரிய இராணுவவீரர்கள் மிகுதி. இந்தியாவின் மேரில் பழையபடி ரஷியாவிற்கு எண்ணமுண்டாகலாம். இவ்வ[illegible] கேடுகள் வாராதபடி, ப்ரிட்டிஷ் மந்திரிகள் அறிவும் பொறுமையும் படைத்தவர்களானபடியால் உடன்படிக்கை நிபந்தனைகளைச்சரியாகச் செய்துகொள்வர். நமக்குக் கவலை வேண்டாம். அன்றியும் இந்த யுத்தத்தில் இந்தியருடைய பொருளுதவியும் படையுதவியும் இராஜவிச்வா[illegible]மும் நதிப் பிரவாகம்போற் பெருக்கெடுத்து ஓடுவதால் இந்த யுத்தம் ப்ரிட்டிஷாருக்கு அனுகூலமாக முடிந்தபின் இந்தியாவிற்கு இன்னும் க்ஷேமமுண்டாகலாம். குடியேற்றநாடுகளுக்கு ஏற்பட்டுள்ள ஆட்சிபோன்று இந்தியாவிற்கும் கிடைக்கும் என்று மேற்றிசையாரில் சிலர் கருதுகின்றனர். மேற்றிசையாரிற் பெரும்பாலார் இதுவரை கறுப்புநிறத்தவரைக்கண்டால் தாழ்ந்தமனித ஜென்மமென்று எண்ணின எண்ணம் மாறும். இந்தியர்களை சகோதரர்களாகப் பாவிக்கலாம். அங்ஙனமாயின் இந்தியருடைய விச்வாஸமும் வீரமும் பன் மடங்குபெருகும். இந்தியர் இராணுவத்தில் உயர்ந்த உத்தியோகங்கள்பெறுவர். தங்கள் வீரத்தைக்காட்டுவர். அதனால் எவரும் இந்தியாவைக் கவரநினைக்கார். இந்தியரை தரைச் சேனையில் சேர்க்கப்படுமாயின் கோடிக்கணக்கான படை சேரும். இது ப்ரிட்டிஷாருடைய கப்பல் யுத்தவன்மையுடன்

சேர்ந்தால் நம்மையாளுபவருக்கு ஜப்பான்பேரிலுங்கூட எக்காலத்திலும் ஐயம் நேரிடாது. சிரஞ்சீவிகளாக அனைவரும் அன்புடன் ஒற்றுவாழலாம். ப்ரிட்டன் மன்னனாகிய நம்முடைய ஜியார்ஜ் அரசன் இந்தப்பெரிய யுத்தத்திற் புகுந்தது மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் மெலிந்தவரைக்காக்கும் நீதியான நல்லெண்ணத்தாலென்று பன்முறை பறையறைந்திருப்பதால் இதனால் எவராலும் நமக்கு எவ்வகையாலும் சிதைவுவாராதிருக்க இறைவன் அருள்புரிவாராக.

“வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.”

## அநுபந்தம் I.

### அறுவர் ஆசைகள்

### ஜெர்மனி

பால்க்கன்ஸ் வழியாக ஈஜியன்கடல்வரைசெல்லுதலும், டச்சுபெல்ஜியன் துறைமுகங்களைக் கைவசப்படுத்தலும், குடியேற்ற நாடுகளை இன்னும் விருத்திசெய்தலும், தெய்வீகமாகப்பெற்ற அரச அதிகாரவுரிமையை நிலைநாட்டலும், கடலிலும் முதன்மை பெறுதலும், ஜெர்மனியின் ஆசைகளாம்.

### ரஷியா

ஸ்காண்டிநேவியாவின் கடலுக்குப்போவதும், பால்க்கன் இராஜ்யங்களைப்பிடித்தாவது தன்வசப்படுத்தியாவது நடுத்தரைக் கடலுக்குப் போகும்வழிபெறுதலும், கான்ஸ்டாண்டி நோபிளைக் கைக்கொண்டு கருங்கட (ப்ளாக் ஸீ) லுக்கும் நடுத்தரைக் கடலுக்கும் தடையற்ற போக்குவரத்து உண்டுபண்ணுதலும், பஸிபிக் சமுத்திரத்தில் சிறந்த துறைமுகம் சம்பாதித்தலும், ஜபானியர் பிடுங்கிக்கொண்ட மஞ்சூரியாவைத் திரும்பக் கைப்பற்றுதலும், மகாராஜ்யப் பெருமையும் அரசமகிமையும் மென்மேலும் பெருகச் செய்தலும், பால்கனில் ஜெர்மனிக்கு இடங்கொடாதிருத்தலும் ரஷியாவின் பேரவாக்களாம்.

### ப்ரிட்டன்

உலகமெங்கும் நாடுகளிருப்பதால் இனிப்புதிதாக நாடு வேண்டியதில்லையாயினும் வெகுகாலஞ் சண்டைசெய்து கிடைத்த கடலில் முதன்மையைக் காப்பாற்றுதல் முதற்கருத்து. இதைக்காப்பாற்றுவதால் மஹாராஜ்யத்தைச் சேர்ந்த தேசங்களும் குடியேற்றநாடுகளும் க்ஷேமமடையும்,

தாய்தேசத்தின் வியாபாரம் அழியும், ஆங்காங்கு விளையும் பண்டமும் பொருளும் தனக்குவரும். ஹாலண்டு, பெல்ஜியத்தின் துறைமுகங்களை ஜேர்மனி கைப்பற்றினல் தன் க்ஷேமத்திற்கு ஹானிவரும். அதுபோன்றே ரஷியாவிற்கு நார்வேஸ்வீடன் கடலுக்குப் போகும்வழி கிடைத்தால் தன் கடற்பெருமைக்கு இடையூறும். ஜெர்மனியாவது ரஷியாவாவது கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றுமல் பார்த்துக்கொண்டு வருவது, ப்ரிட்டனுடைய நடுத்தரைக்கடல் வழியே வர்த்தகம் தூரதேசப் போக்கு வரவிற்கு இன்றியமையாதாதலால் டர்க்கி இராஜ்யம் அழிந்துபோகாமல் ஜீவித்திருக்கின்றது. ஜப்பான் தீவுடன் ப்ரிட்டன் உறவு செய்துகொண்டபடியால் ரஷியா மறுபடியும் மஞ்சூரியாவைப் பெறமுயலும் பக்ஷத்தில் ஜப்பான் தடைசெய்து ஒட்டிவிடும். ருஷோ-ஜப்பான் யுத்தத்திற்குப் பின் ரஷியா தூங்கவில்லை, விழித்துக்கொண்டிருக்கின்றது.

### ப்ரான்ஸ்

ப்ரிட்டனைப்போன்று இத்தேசத்திற்கும் உள்ளது போதுமென்ற திருப்தியுண்டு. அதை விருத்திசெய்து நன்னிலைமைக்குக்கொண்டுவருதலே இதன்கண்ணும். 1898ல் பஷோடாவில் ப்ரிட்டன், ப்ரான்ஸ் படைவீரர் கைகலந்தபின் வேறு எண்ணம் இத்தேசத்திற்குக் கிடையாது. இது ஜெர்மனி ரஷியாவைப்போல அரசரால் ஆளப்படாமல் குடிகளாலே ஆண்டுவரப்பட்டு வருகின்றது. ஆல்ஸேஸ் லோரேனை எவ்விதத்தாலும் ஜெர்மனியிடமிருந்து திரும்பப் பெறுதல் இதன் முக்கியமான கவலையாம். குடியரசுநாடு ஜெர்மனிக்குப் பக்கத்தில் செழிப்பது அதற்குப்பெருங்கேடு என்பது கெய்ஸர் நினைப்பு. ப்ரிட்டனுடைய ஆட்சி அரசவாட்சியாயினும் பொதுஜன அபிப்பிராயம் மன்னன் செய்கையைக் கட்டுப்படுத்தும்.

### ஆஸ்ட்ரியா

ஸெர்வியாவைத் தொலைத்தல் இதன் முதற் கருத்து. ஜெர்மனிக்குத் துணையா யிருத்தலால் இதுசாத்தியமாகும் என்பது மற்றொன்று. இதனால் ரஷியா பிரிட்டனுக்கு இதன் மேல் பகை.

### இற்றலி

பால்க்கன் விஷயத்தில் ஆஸ்ட்ரியாவின் நடவடிக்கை சரியென்று காணப்படாததால் ஜென்மசத்துருவாகிய ஆஸ்ட்ரியாவின்பேரில் இற்றலிக்கு நல்ல எண்ணங்கிடையாது. ஆல்பேனியாவிலுள்ள துறைமுகங்களும், ஆஸ்ட்ரியாவிற்குச் சொந்தமான அட்ரியாட்டிக்கடலிலுள்ள ட்ரீஸ்டு, போலா, ப்யூம் என்ற துறைமுகங்களும் தனக்கு வேண்டுமென்பது இற்றலியின் பேராசை.

---

## அநுபந்தம் II.

## ஈரோப்பில் பெரிய அதிகாரிகள்

---

### I. ப்ரிட்டன்

1. ஜியார்ஜ் V. இதையாளும் மன்னன் 5-வது ஜியார்ஜ் என்பவர். அவரே நம்முடைய காருண்ய சக்ரவர்த்தி. அவருடைய பட்டாபிஷேகம் 1911-ல் வெகு விமரிசையாக லண்டனிலும், டில்லி நகரிலும் நடந்தேறியது. அவருடைய ஜெனனம் 1865ஹு ஜூன்மீ 3உ. அவர் மனைவியும் நம்முடைய சக்கரவர்த்தினியுமாகிய மேரியம்மை 1867ஹு மேமீ 26உ பிறந்து 1893ஹு ஜூலைமீ 6உ நம்மன்னனை மணந்தனள். இம்மாது சிரோமணிக்கு இதுவரை ஐந்து ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும் இருக்கின்றனர். பட்டத்திற்கு உரியவராகிய முதல் இளவரசருக்கு

சென்ற ஜூன் 23௳ இருபது வயது கழிந்தது. ஆதலால் இவருக்கு இப்பொழுது நடக்கும் வயசு 21. இவர் யுத்தத்திற்குப் போயிருக்கின்றனர். இராணுவங்களையும் காயப்பட்டுச் சிகிச்சையிலிருப்பவர்களையும் பார்ப்பதற்காக இவர்பிதா ப்ரான்ஸ் தேசத்திற்குப் பெருந்துணையுடன் நவம்பர் 30-ல் போயிருக்கின்றனர். இதனால் யுத்தவீரர்களுக்கு ஊக்க மதிகரிக்கும் என்பது திண்ணம்.

2. ஹெர்பேர்ட் ஹென்ரி ஆஸ்குவித். இவர் ப்ரிட்டனுக்கு முதல் மந்திரி, கஜானாவிற்கு முதல் பிரபு. இவர் 1852ம் வருஷம் செப்டெம்பர் மீ 12௳ யார்க் ஷயரில் மோர்லி என்ற வூரில் பிறந்தனர். ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையின் மாணவராகி, 24 வயதில் பாரிஸ்டர் ஆயினார். இவர் 1886ல் பார்லிமென்று மெம்பராய் நாலு வருஷமான பின் ஹோம் காரியதரிசியாக நியமிக்கப் பெற்றனர். 1895ல் லிபரல்கக்ஷியார் தோல்வியடைந்த படியால் பதினொருவருஷம் உத்தியோக மில்லாமலிருந்தார். ரோஸ்பரி பிரபு அயர்லண்டு தீவிற்கு ஹோம் ரூல், சுய ஆட்சி, கொடுக்கவேண்டுமென்று கருதியவாறு இவரும் எண்ணங் கொண்டனர். 1905ல் பால்போர் முதல் மந்திரிஸ்தானத்தை இராஜிநாமாச் செய்தனர். அந்த ஸ்தானத்திற்கு ஸர்ஹென்ரி பானர்மென் என்பவர் வந்தனர். அப்பொழுது ஆஸ்குவித் கஜானாவிற்கு முதன்மை (சான்ஸெலர்) உத்தியோகம் பெற்றனர். விருத்தாப்பியருக்குப் பென்ஷன் கொடுப்பதிலும் மற்றும் ஜனசமூக சீர்திருத்தங்கள் செய்வதிலும் இவர் தலைப்பட்டபடியால் இவருடைய கீர்த்தி பெருகியது. 1908ல் இவர் முதல் மந்திரி ஆயினர். பெரிய குடும்பம், ஆஸ்தி, செல்வாக்கு அன்னியில் தம்முடைய சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்தவர் இந்தமகான்.

3. ஸர் எட்வேர்ட் கிரே. இவர் சென்ற ஒன்பது ஆண்டு

களாக அன்னியதேச ஆபீஸின் தலைமை வகித்து வருகின்றனர். கிளாட்ஸ்டன் முதல் மந்திரியா யிருந்த காலத்தில் அவர் கைக்கீழ் இராஜாங்கக் கீழ்காரிய தரிசியாக இருந்தார். இவருக்கு இப்பொழுது ஸெர்விஸ் 30 வருஷம் ஆகிறது. இவர் எந்தச் சங்கதியையும் நேர் நேரில் பேசுபவர். கேடு கருதும் கபடம், சூது இவரிடங்கிடையாது. எல்லாத் தேசங்களுடனும் ஐக்கியமாக இருத்தலே இவருடைய முக்கியமான எண்ணம். ஆதலால் பிறருடன் வீணான சண்டைக்குப்போக இடங்கொடார். 1912ம் வரு ஜெனவரியீ இவர் தம்முடைய கொள்கையை வியக்தமாகக் கூறினர். தற்காலம் நடக்கும் மஹாயுத்தத்தின் ஆரம்பத்தில் குடிகளின் பிரதிநிதிகள் கூடும் ஓலக்கத்தில் இவர் பேசியதை எவரும் மறவார். ப்ரான்ஸ், ரஷியாவிற்காக இங்கிலண்டு சண்டைக்குப் போவதற்கு ஒப்பந்தமாவது சங்கேத மாவது கிடையாது என்பதே. இவருடைய நட்புக்கொள்கையால் இத்தருணம் இங்கிலண்டுக்கு அநேக கூட்டுறவினர் ஏற்பட்டனர், ஜெர்மனி ஏகாங்கியாகத் தனித்தது.

4. ஹொரேஷியோ ஹேர்பேர்ட் கிச்சனர். இவர் இப்பொழுது யுத்தத்திற்குக் காரியதரிசியாகவும் சேனைக்கு முதல் தளகர்த்தராகவும் இருக்கின்றனர். இவருக்கு வயது 64. இவர் உயரமாக வளர்ந்தவர். இவர் 1850ம் வரு பிறந்தவர். உல்விச் என்னும் பட்டணத்தில் ராயல் மிலிட்டரி பாடசாலையில் கல்விபயின்றனர். இருபத்தொரு வயதில் சேனையிற் சேர்ந்தனர். பாலெஸ்டீனில் இவர் சில வருஷங்களாக உத்தியோகமா யிருந்தனர். சைப்ரஸ் தீவை சர்வே செய்தனர். 1882ல் ஈஜிப்ட் குதிரைப் பட்டாளத்தை நடத்தினர். 1884-5ல் நைல் நதிப்படையெடுப்பில் சேர்ந்திருந்தனர். 1887ல் சூவாக்கில் தளகர்த்தரா யிருந்தனர். 1890—ல் ஸர்தார் ஆயினர். 1896ல் சௌடானைத் திரும்பப் பிடித்த

காலத்தில் இவர் பிரபலமாய் மேஜர் ஜெனரல் உத்தியோகம் பெற்றனர். இவருக்கு ஒலக்கத்தார் 150,000 பவுன் இனமளித்தனர். பிரபுப்பட்டமும் கிடைத்தது. கார்ட்டூம் கிச்சனர் என்று அழைக்கப் படுகின்றனர். 1899ல் லார்ட் ராபர்ட்ஸுடன் தென் ஆப்ரிக்காவிற்குச் சென்றனர். போவர் யுத்தத்தைமுடித்து, வேரீனிகிஞ்ச் சமாதான வுடம்படிக்கையைச் செய்து, இவர்தம் தேசத்திற்கு வந்த பொழுது வைக்கவுண்ட் பட்டமும் 250,000 பவுன் இனமும் பெற்றனர். இவருக்கு ஒலக்கத்தார் வந்தனமும் அளித்தனர். 1902-9 வரை இந்தியாவிலுள்ள இராணுவத்திற்கு முதல் தளகர்த்தராயிருந்தனர். பின் ஈஜிப்டில் கேயிரோ வென்னும் நகரில் ப்ரிட்டிஷ் ஏஜெண்டாயிருந்தனர். ஜியார்ஜ் மன்னன் இவருக்கு எர்ல் பட்டம் அளித்தனர். அவருடன் யுத்தமுனைக்குப் போயிருக்கின்றனர்.

5. ஸர் ஜான் டேன்றன் பிங்க்ஸ்டோன் ப்ரஞ்சு. இவருக்கு வயசு 62. இராணுவத்தில் இவர் கிச்சனருக்கு அடுத்த ஸ்தானத்திலுள்ளவர். இவர் இந்தியா, ஆப்ரிக்கா, கானடா தேசங்களில் இராணுவத்தை நடத்தினவர். போவர் யுத்தத்தில் இவர் எந்த விடத்திலும் தோல்வியடைந்ததே கிடையாது. கிம்பர்லி முற்றுகையில் லேடிஸ்மித் என்ற விடத்தில் இவரை போவர்கள் சூழ்ந்து கொண்டனர். கிம்பர்லியிலுள்ள வைரச் சுரங்கங்களைக் கைப்பற்றவேண்டி லேடிஸ்மித்திலிருந்து இவர் தப்பியவிதம்வியக்கத்தக்கது. போவர் மாதர்களையுங் குழந்தைகளையும் முற்றுகையான இடத்திலிருந்து இருப்புவண்டித் தொடர்களில் அனுப்பிய பொழுது இவரும் இரண்டாம் வகுப்பு வண்டியறையொன்றின் இருப்பின்கீழ் நுழைந்து கொண்டனர். பின் கேப்பிற்குப் போய் 8000 குதிரைப்படை வீரருக்குத்தலைமைவகித்தனர். இரவும் பகலுமாகப்போய் கிம்பர்லியைக்

காப்பாற்றினர். இவரைப் பாதிரியாக்குவதற்காக இவர் குடும்பத்தார் முயன்றனர். ஆனால் இவர் பிரிட்டானியா கப்பலில் வேலைக்கு அமர்ந்தனர். 1874ல் இவர் கப்பலைவிட்டு இராணுவத்திற்கு வந்தனர். 1889 முதல் 1893வரை 19-வது ஹஸ்ஸார் படையை நடத்தினர்; 1907ல் இராணுவத்திற்கு இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆயினர்; 1913ல் பீல்டு மார்ஷல் உத்தியோகம் கிடைத்தது. இவர் அயிரிஷார்; குட்டையாள்.

6. வின்ஸ்டன் ஸ்பென்ஸர் சர்ச்சில். லண்டன் நகரிலுள்ள கப்பல் மேற்பார்வை (அட்மிரால்டி) ஆபீஸில் 1911 முதல் முதன்மையான பிரபு. இவர் வளர்ந்த ஆசாரமோஜன். இவருக்கு வயது 45 நடக்கிறது. இவர் தென் ஆப்ரிக்கன் யுத்தகாலத்தில்பெயர்பெற்றவர். இவருடைய தாயார் அமெரிக்காவைச் சேர்ந்தமாது. இவர் 1874-ஸ்நவம்பர் 30-ல் பிறந்தனர். ஹாரோ பாடசாலையில் படித்தனர். 1893-ல் ஸாண்ட்ஹர்ஸ்ட் என்றவிடத்தில் இராணுவக்கல்வி பயின்றனர். 1895-ல் நான்காவது ஹஸ்ஸர்ஸ் சேனைக்கு லெப்டினண்டு ஆயினர். கூபாவில் சிறிதுகாலம் ஸ்பானிஷ் இராணுவத்துடன் போயிருந்தனர். தினசரிகிராபிக் என்ற பத்திரிகைக்கு வர்த்தமான மெழுதிக்கொண்டிருந்தனர். மேற்கூறிய சேனை இந்தியாவிற்கு வந்தபொழுது இவருக்கு சண்டையில் பழக்கமானது. கார்ட்டுமைத் திரும்பக் கைப்பற்றிய காலத்தில் கிச்சனர்கூட இவர் வேலை செய்தார். காலைத்தபால் (மார்னிங் போஸ்ட்) பத்திரிகைக்குச் சண்டை விவரங்கள் எழுதியனுப்பியதை அநேகர் வாசித்து மெய்ச்சினர். போவர்யுத்தத்தில் இவர்போவர்களால் பிடிக்கப்பட்டு பிரேட்டோரியாவில் கைதியாக அடைக்கப்பட்டிருந்தனர். அதனின்று சாதுரியமாகத்தப்பித்து ஓடிவந்தனர். 1900-ல் ஐக்கிய இராச்சியங்க(யூனைட்டெட்ஸ் டேட்ஸ்) ளுக்குப்போய் போவர் யுத்தத்தைப்பற்றிப் பிரசங்கஞ்செய்தனர். அதன்

பின் ஓல்டுஹோம் என்றவிடத்தினரால் ஒலக்க அங்கத்தின ராகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். 1906–8 ல் குடியேற்ற நாடுகளுக்குக் கீழ்காரியதரிசியாக இருந்தனர். 1908–10 ல் இவர் வியாபாரச் சங்கத்திற்குத் தலைமைவகித்தனர். 1910-ல் ஹோம் காரியதரிசியாகவும், 1911-ல் கப்பல் ஆபீஸின்முதற் பிரபுவாகவும் ஆக்கப்பெற்றனர். இவர் முயற்சியால் டிரெட் நாட் கப்பல்கள் அதிகமாயின. இவர் பிரிட்டிஷ் கப்பல் களின் பெருமையை விருத்திசெய்வதிற் கருத்துடையவர்.

7. ஸர்ஜான் ரஷ்வோர்த் ஜெல்லிக்கோ. ப்ரிட்டிஷ் கப் பல்களுக்கு இவர் உதவித்தலைமை. இவருக்கு வயது 55. 42-வருஷம் கப்பலில் வேலை பார்த்திருக்கிறார். அலெக் ஸாண்டிரியாவைத் தாக்கின காலத்திலும் டெலெல்கெபிர் சண்டையிலும் அநுபவப்பட்டவர். விக்டோரியா கப்பல் காம்பாடாவினல் தாக்கப்பட்டு சமுத்திரத்தில் மூழ்கின பொழுது இவர் அத்தருணந் தப்பிப்பிழைத்தது ஆச்சரியம். ஏனெனில் இவருக்கு அப்பொழுது கடுஞ்சுரம். 1898–ல் இவர் சைனுவிற்குப்போயினர். 1900–லும் பீக்கின் நகரத் திற்குப்போகநேரிட்டது. டீட்ஸாங் என்ற இடத்தில் இவருக் குப் பெரிய காயம் பட்டது. இவருக்கு ஜெர்மன்சக்கரவர்த்தி ரெட் யீகிள்பட்டம் அளித்தனர். சைனுவிலிருந்து திரும்பி வந்தபின் 1900-ல் இவருக்கு விவாகம் நடந்தது. 1907-8-ல் ரீயர் அட்மிரல் உத்தியோகமும், 1908–10-ல் லார்டுகமிஷ்னர், கப்பல் கன்ட்ரோலர் உத்தியோகமும் இவருக்குக் கிடைத் தன. 1911–2–ல் ஹோம் கப்பற்றெகுதியின் இரண்டாவது பகுதியின் தளகர்த்தராயிருந்தனர். 1914 ஜுலையில் இவ ருக்கு உதவி அட்மிரல் உத்தியோகம் கிடைத்தது. இங்கிலீஷ் கப்பல் பீரங்கிகள் நல்ல நிலைமைக்கு வருவதற்கு இவரே காரணஸ்தர். ப்ரிட்டிஷ் கப்பற்சேனையின் பெருமை இவர் கையிலிருக்கின்றது.

## II. ப்ரான்ஸ்

1. பாயின்கேர். இவர் ப்ரான்ஸ்தேசத்தின் குடியரசிற் குத்தலைவர். இவர்காலத்தில் சபைகளுக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் விஷயத்தில் அனேக சீர்திருத்தங்கள் செய்திருக்கின்றனர். அன்றியும் மூவர் உறவிற்கும் காரணபூதர் இவரே. இவரால் ரஷியாவிற்குத் தூதாக அனுப்பப் பட்ட டேல்காஸி என்பவர் மூவருறவிற்குப் பிதாவென்று கூறலாம். இப்பொழுது நடக்கும் ஜெர்மன் சண்டையில் இங்கிலண்டும் ரஷியாவும் கூட்டாளிகளாக இருப்பது இவ்விரு மகான்களின் வேலையாம். இவருக்குத் தாடி மிகுதி. முகம் வெளுத்திருக்கும். இவர் குட்டையானவர், தடித்தவர். பகை உறவாளி எவரும் இவரை விரும்புவர். இவர் தொழிலறிந்த இராஜகாரியஸ்தர். இவர் குதிரைப்பந்தயத்திற்குப் போஷகர். இவர் அனேகர் வாசித்துவரும் பலபுத்தகங்களை ப்ரஞ்சு பாஷையில் எழுதியுள்ளார். வக்கில் உத்தியோகத்தில் முதல் ஸ்தானம் பெற்றவர். கல்வியிலாக்காவிற்கும் முதன்மந்திரியாயிருந்தனர். ப்ரான்ஸ்தேச மந்திரியானபின் லக்ஷக்கணக்கான சாதாரண ஜனங்களுக்கு ஏற்பட்ட தீர்வையை ஒழுங்குப்படுத்தினர். ப்ரான்சில் சர்வகலாசாலை நண்பர்சபை, காட்சி பங்களா, பலதொழிற்சாலை முதலான சபைகளுக்கு இவர் உதவியுண்டு. இவருக்கு வயது 54—தான் ஆகிறது. இவர் இத்தருணத்தில் தலைமை வகித்திருப்பது நாட்டின் பாக்கியமே.

2. ரீனி விவியானி. ப்ரான்ஸ்தேசத்தின் முதல்மந்திரி இவர். இவருடைய ஜெனனபூமி ஆல்ஜீரியா. 1906—ல் வேலை மந்திரி உத்தியோகம் ஏற்படுத்தப்பட்டபொழுது இவரே முதல் மந்திரி ஆயினர். சேனையில் ஒவ்வொருவரும் கட்டாயமாக மூன்று வருஷம் உழைக்கவேண்டுமென்ற பிரேரேபனை வந்தகாலத்தில் இவர் அதைத்தடுத்தபடியால் இவ

ருக்குப் புகழுண்டாயிற்று. தேசத்தாரும் இவர் சொன்ன படி கேட்டு வோட் (சீட்டு) கொடுத்தனர். இவர் திறமை யுடையவராயினும் யுத்தத்திலும் இராஜ்ய்பரிபாலனத்திற் குச் செய்யத்தக்க ஒழுங்குகளிலும் இவருக்கு அநுபவங் காணாது.

3. ஜெனரல் ஜாபர். இவர் ப்ரஞ்சு சேனைகளுக்குப் பெரிய தளகர்த்தர். இவர் ஸர் ப்ரஞ்சுகூடச் சேர்ந்து ஜெர் மன் படைகளை யுடைக்கின்றார்.

4. ஜெனரல் பவ். இவர் ஜாபருக்கு அடுத்தஸ்தானம் இராணுவத்தில் பெற்றிருப்பவர். இவர் 67-வயசில் வேலையி னின்று நீங்கிவிட்டாலும் இவர்பேரில் ஜனங்களுக்குள்ள நன்மதிப்பினாலும் இவர் திறமையாலும் இந்த மஹாயுத்தத் தில் இராணுவத்தை நடத்தவேண்டுமென்று கேட்கப்பட்ட னர். இவர் உருவத்தில் குள்ளர். கட்டுப்பாடான உடம்பு படைக்கப் பெற்றவர்.

## III. ஜெர்மனி

1. கெய்ஸர் வில்லியம் II. இவர் ஜெர்மன்சக்கரவர்த்தி. இவர் பட்டத்திற்குவந்து 25-வருஷத்திற்கு மேலாகின்றது. இவர்காலத்தில் கல்வி, தொழில், வர்த்தகம் முதலானவை முன்னுக்குவந்தன. சேனைப்பெருமை ஜெர்மனிக்கு ஏற்பட் டிருப்பதுபோல கப்பற் சிறப்பும் ஏற்பட்டு சமுத்திராராஜனாக வேண்டுமென்ற அவா இவருக்குமிகுதி. இவர்புத்திசாலி. படபடத்தவராதலால் எதையும் திடீரென்று செய்பவர். இவர் ஆள் பார்வைக்கு சமத்தராயினும் இவருக்கு ஒருகை சொஸ்தியென்று தெரிகிறது. தாம் யுத்தத்திற்கு முன் வந்து இரவும்பகலும் யுத்தம் நடக்கும் இடங்களுக்கு ஓயா மல் பிரயாணஞ்செய்து கொண்டிருக்கின்றாரென்றும் தம் முடைய ஆறு அருமைப்பிள்ளைகளையும் யுத்தத்திற்கு அனுப்பிவிட்டனரென்றும், அவர்களில் இருவர் மடிந்தன

ரென்றும் பத்திரிகைகள் கூறுகின்றன. இவர் இன்னும் யௌவனர் என்றே சொல்லவேண்டும். ஜெர்மனியின் கதி இந்த மகாயுத்தமுடிவில் தெரியவரும். பேராசை பெருங்கேடு என்பது முதுமொழி.

2. ப்ரடரிக் வில்லியம் விக்டர். இவர் சக்கரவர்த்தியின் முதல் புத்திரர். இவருக்கு இப்பொழுது பிராயம் 32. இவர் எப்பொழுதும் நெப்போலியனைப் பெரியவரென்று பாராட்டுபவர். இவர் யுத்தமுனையில் துருப்புகளை நடத்திவருகின்றனர். சிலவருஷங்களுக்குமுன் பொது ஜனசபைக்கு இவர்போய் மொராக்கோ விஷயத்தில் சமாதானங் கூடாதென்று தடை செய்தபடியால் ஜெர்மனியில் யுத்தத்தை நாடுபவரனைவரும் இவரைச் சிலாகித்துப் பேசுவர். இவர் அரசவுரிமை கடவுள் கொடையென்று சாதித்து நாட்டவல்லவர். இவர் வளர்ந்தவர். கம்பிபோன்ற உடம்பினர். இவர்முழுப்பெயர் ப்ரடெரிக் வில்லியம் விக்டர் அகஸ்டு எர்னெஸ்ட். இவருக்கு ஞானஸ்நானத் தாயாயிருந்தமாதரசி இவருடைய பிதாவிற்குப் பாட்டியும் இந்தியாவிற்கு முதல் சக்கரவர்த்தினியுமாகிய விக்டோரியா என்ற நெடுநாளரசி. இவர்முதலில் புளோயன் என்ற இடத்தில் இராணுவக்கல்வி பயின்று, பின் பான் சர்வ கலாசாலையில் மாணவராயினர். 1903-ல் இவர் கலை பயின்றபின் நாடுகள் பார்க்கப் பிரயாணஞ் சென்றனர். இராஜத்துவம் வகித்தற் பொருட்டு பாட்ஸ்டாம் என்ற நகருக்குப்போய் அதிகாரமுறையைத் தெரிந்துகொண்டனர். ப்ரஷியா மந்திராலோசனைச் சபையில் நடக்கும் காரியாதிகளை நன்கு அறியுமாறு இந்த இளவரசன் அனுப்பப்பட்டனர். அதன் பின் கப்பற்படை விஷயமாயும் தெரியவேண்டியனவற்றை இவர் தெரிந்துகொண்டனர். அன்னிய தேசக் காரியம்பார்க்கும் ஆபீஸில் முதன்மந்திரியாயிருந்த பிஸ்மார்க்கின் இராஜகாரியம் நடத்தும் முறைகளைக் கற்றுக்

கொண்டனர். இவருக்குக் கல்யாணம் 1905-ல் நடந்தது. இவர் மனைவியின்பெயர் டச்சேஸ் ஸேஸிலியா. இளவரசன் தன்காலத்தில் மோல்ட்கியைப்போன்று பெய ரெடுப்பன் என்று கெய்ஸர் சொல்லுவர்.

3. தியோபால்டு வான் பேத்மன் ஹால்வேக். இவர் ஒரு பெரிய தத்துவசாஸ்திரி. பெரிய கலைஞன். இந்த மகா யுத்தத்தில் மந்திரி பிஸ்மார்க்கின் கொலை, கத்திக்கொள்கையைப் பின்பற்றிய வரானதால் இவரை வியவாதாரிலர். இவர் வளர்ந்த ஒல்லியான மனிதர். ஒளியாமல் சுருங்கப் பேசுதலே இவர் சுபாவம். இவர் பதமைப்பட்டவர். எடுத்த காரியத்தை முற்றுப்பெறச்செய்தல் இவருடைய சிறப்பு. இவரும் கெய்ஸரும் பான் சர்வகலாசாலையில் தோழர்களாயிருந்தனர். இருவருக்கும் அன்பும் நம்பிக்கையும் வாலிபத்திலே உண்டாயின. இவர் படிப்படியாக உயர்ந்த உத்தியோகத்திற்கு வந்தனர். 1875-ல் காட்டிஞ்சன், ஸ்ட்ராஸ்பெர்க், பெர்லின் சர்வகலாசாலைகளில் கல்விகற்றுப் பெரிய சட்ட நிபுணராயினர். ஆறாண்டு வக்கீல்வேலையில் அமர்ந்திருந்தனர். முதலில் பாட்ஸ்டாமில் இவருக்கு ஜட்ஜ் (நியாயாதிபதி) வேலை அளிக்கப்பட்டது. 1908-ல் சான்செலர் வேலை கிடைத்தது. மகாராஜ்யத்திற்கு 100,000 பவுன் செலவுவரும்படி ஒரு மசோதா ஜனசபைமுன் வைக்கப்பட்டது. இவருடைய சாமர்த்தியத்தால் இதைச்சபை யங்கீகரித்தது. இவர் கெய்ஸர் மனம்போலவே நடப்பவர்.

4. கிராண்டு அட்மிரல் வான் டிர்ப்பிட்ஸ். ஜெர்மனியின் கப்பற்படைக்குக் கர்த்தா டிர்ப்பிட்ஸ் என்பவரே. ஜெர்மன் கப்பல்கள் உலகத்திலுள்ள எந்தக்கப்பல்களுக்கும் இணையாகும் என்பது இவருடைய அபிப்பிராயம். 1894-ல் இவர் செய்த ஏற்பாடுகளால் கெய்ஸர் இவரை வியந்துபேச

ஆரம்பித்தனர். இவருக்கு முதன்மை ஸ்தானம் அளித்தனர். 1900, 1906-ல் இவருடைய முயற்சிகளால் அதிகக் கப்பற்படை சேர்ப்பதற்காக வேண்டியபொருளும் பொது ஜனசபை அளித்தது. இவருக்குப் பட்டங்கொடுக்கப்பட்டது. பிரபுவுமாயினர். 40-வருடங்களுக்கு முன்னரே இவர் கப்பல் இராணுவத்தைச்சேர்ந்து ப்ரிட்டிஷ் கப்பற்படைக்கு எதிரியாக ஜெர்மன் படையையும் நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்தவர். இதனால் இவர் ப்ரிட்டிஷாருக்கு விரோதியன்று. இவருடைய பிள்ளைகளெல்லாம் இங்கிலண்டில் கல்வி பயின்றனர். இவர் ப்ரிட்டிஷார் நடையிலும் செய்கையிலும் சிறந்தனவற்றை எடுத்துப்பாராட்டுபவர். ப்ரிட்டிஷாருக்கு இரண்டு கப்பலிருந்தால் ஜெர்மனிக்கு மூன்று இருத்தல் வேண்டுமென்பது இவர் கொள்கை.

5. அட்மிரல் ஹியூகோ வான் போகில். இவர் ப்ரஸ்லா நகரில் 1855ஹு ஆகஸ்டுமீ 25உ பிறந்தவர். ஆதலால் இவருக்கு இப்பொழுது வயது 58. இவருக்கு 21 பிராயத்திலேயே இவர் ஜெர்மன் கப்பற்படைக்கு லெப்டினேண்டு ஆயினர். 1887-ல் கரோலா க்ருஸரில் லெப்டினெண்டு காப்டன் வேலைபெற்றனர். 1894-ல் கப்பற்சங்கத்தில் முதல் ஸ்தானங் கிடைத்தது. இவர் வுரட்டெமிர், ஈஜிர், ஹான்ஸா கப்பல்களில் வேலைபார்த்தனர். 1900-ல் இவர் காப்டன் ஆயினர். இதுமுதல் 5 வருஷத்திற்குள் இரண்டாவது அட்மிரல் உத்தியோகங் கிடைத்தது. 1908-ல் கீல் துறைமுகத்திலிருந்து சாண்டர்ஸ்பேர்க் வரையிலும் சரியான துறைமுகங்கள் ஏற்படுத்தும்படி இவருக்குக் கட்டளையிடப்பட்டது. இதைத் திருப்திகரமாகச்செய்து முடித்ததற்காக 1909ல் உதவி அட்மிரல் ஸ்தானம்பெற்றனர். இவர் கப்பல்கள் சண்டைக்கு முதல் முதலில் போனது சைனாவில் பாக்ஸர்களுக்கு விரோதமாகவே. அதிகக் கப்பல்கள் ஜெர்

மனிக்கு வேண்டும் என்பதே இவருடைய அபிப்பிராயமும். கப்பல்களை இரண்டு பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியை வடகடலில் ஜெர்மன் கடற்கரையைக் காக்கவும் மற்றொரு பகுதி சமுத்திரங்களில் உலாவித் திரிந்து பகைவர்கப்பல்களைப் பிடிக்கவும் சத்துருக்களின் சொத்துக்களை அழிக்கவும் ஏற்பாடு செய்தனர். கெய்ஸரும், ஸாரும் இவருக்குப் பெரிய பட்டங்கள் அளித்திருக்கின்றனர்.

6. கவுண்ட் ஹெல்மத் வான் மோல்ட்கீ. இவர் ப்ரெஞ்சு ஜெனரலாயிருக்கும் ஜாபரைக் காட்டிலும் 4 ஆண்டு மூத்தவர். இவர் கெய்ஸர் மனிதன் (ஆள்). யுத்தத்தில் பேர்ப்போன இவருடைய சிற்றப்பன் 1891 ல் இறந்த காலத்தில் கெய்ஸருக்கு எயிட். டி. காங் ஆயினர். 1904 ல் சேனைத் தலைமை பெற்றனர். வான் கோல்ட்ஸ் என்பவருக்கு இவர் எவ்விதத்திலும் சிறந்தவரன்றாயினும் அரசர் தயவால் முதன்மை பெற்றனர். இதனால் இருவருக்கும் மனமாச்சரியம் சிறிது காலம் நிகழ்ந்தது. நாளடைவில் இவர் கைதேறவும் அது ஒழிந்தது.

## IV. ஆஸ்ட்ரியா.

1. ப்ரான்ஸிஸ் ஜோஸப் ஸக்ரவர்த்தி. இவர் முதிர்ந்த விருத்தாப்பியர். வயது 84. 66 வருஷத்திற்கு முன் பட்டத்திற்கு வந்தவர். இவர் தைரியமுள்ளவர் அன்று. சண்டைப்பொறுப்பு கூடாது என்று நினைப்பவர். ஆதலால் தெரிசியானம் கல்லூரியில் கல்வி பயின்று வந்த தம்முடைய மூத்தகுமாரனை யழைத்து இந்தப் பொறுப்பை ஏற்கும்படி செய்தனர். 17 மாகாணங்கள் ஒன்றுக்கொன்று சச்சரவு செய்து கொண்டிருந்தன. 19 வருஷங்களாக இவற்றை நீக்குவதிலேயே இவர் கவனமாயிருந்தனர். 1867ல் ஹங்

கேரியைக் கூட்டு இராஜ்யமாகச் செய்தனர். இக்காலத்தில் இவர் ப்ரான்ஸிஸ் ஜோஸப் என்று அழைக்கப்பட்டனர். இவர் காலமெல்லாம் துக்கமே. மெக்ஸிக்கோவில் இவருடைய சகோதரர் மாக்ஸிமிலியன் கொல்லப்பட்டார்; இளவரசனுகிய ரூடால்ப் அதன்பின் கொலையானுர்; இவர் மனைவியாகிய எலிஸபெத் சக்கரவர்த்தினி இவருடைய ஜூபிலி காலத்தில் கொலைசெய்யப் பட்டாள்; அதன்பின் ஆர்ச்டியூக் பேர்டினுண்டும் அவர் மனைவியும் சராஜீவோ நகரில் கொலை செய்யப்பட்டபடியால் இந்த மகாயுத்தம் ஆரம்பித்தது. சக்ரவர்த்தி சாகும்வரை தன் அதிகாரத்தை இழக்கப்பிரியமில்லாதவரா யிருப்பதால் இவருக்கு 24 மந்திரிகளிருந்தும் இவரே எதையும் யோஜித்துச் செய்வர் என்று கெய்ஸர் கூறுவர்.

2. ஆர்ச்டியூக் பேர்டினுண்டு. இவர் மரணமே முன் கூறியபடி இந்தஉலக யுத்தத்திற்குக் காரணம். இவருக்கு மூத்தவரும் இராஜவுரிமைக்கு ஏற்றவருமாகிய ரூடால்ப் இருந்தபடியால் 26 ஆண்டுவரை இவருக்குப்பட்டங் கிடைக்குமென்று நினைக்க இடமில்லாதிருந்தது. இவர் 1863ல் பிறந்தனர். இவருக்கு 30 வயதில் போகீமியன் மாது ஒருத்தியை இவர் மணம் புரிந்தனர். இவருக்குச் சேனைப் பயிற்சியில் பழக்கமே தவிர இராஜ்ய முறையில் பழக்கம் கிடையாது. இவர் ஆள் மாறுட்டமாகப்போனுலும் அமெரிக்காவில் சிக்காகோ, நியூயார்க்கு முதலான நகரங்களில் இவரை இன்னுரென்றுதெரிந்து இவருக்கு அந்நகரவாசிகள் மரியாதைசெய்தனர். 1908ல் பாஸ்னியா, ஹெர்ஸ்கோவினு மாகாணங்கள் பிடிக்கப்பட்டதற்கும், 1912-13ல் பால்க்கன் யுத்தங்கள்நடந்ததற்கும் இவரே முக்கியஸ்தர். இவர் வேட்டையாடுவதில் வல்லபமுடையவர். இவருடைய கோனேப்பீஷ்ட் அரண்மனையைப் பார்த்தால் இது நன்கு விளங்கும். 2,000 மான்

கொம்புகளும், இந்தியாவில் இவர் கொன்ற புலிகளின் தலைகளும், ஸிலோன் தீவில் வேட்டையாடிக்கொன்ற யானைகளின் தந்தங்களும், அமெரிக்காவில் ராக்கிமலைகளில் கொன்ற காடிகளின் பச்சைத் தோல்களும் காணப்படும். இவர் 1891-ல் இராணுவத்திற்கு ஜெனரல் ஆயினர். இவருக்கு உகந்த பயிற்சி லோக்கோமோட்டிவ் எஞ்சினீரிங் (நடைப்போக்கு வண்டிகளைச் செய்தல்).

3. பாரன் கான்ராட் வான் ஹாட்ஸன் டார்ப். இவரே ஆஸ்ட்ரியா—ஹங்கேரியின் இராணுவங்களை நடத்துபவர். இவரிடம் அரசனுக்கும் சேனைக்கும் பூர்ணமான நம்பிக்கையுண்டு. இவரை கிச்சனருக்கு சமானமாகச் சொல்லலாம். 1906ல் இவர் முன்னுக்கு வந்தனர். 1908ல் ஜெனரல் ஆயினர். 1911-ல் சேனைசோதகர் ஆயினர். அடுத்தவருஷத்தில் மறுபடியும் சேனையில் முக்கிய ஸ்தானத்தை வகிக்க அழைக்கப்பட்டனர்.

4. கவுண்ட் லியோபால்டு பேர்ச்சோல்டு. இவருக்கு ஸெர்வியாவின் பேரில் துவேஷமுண்டு. இவர் வெகு புத்திசாலி. நற்குண முடையவர். இவருக்கு இராணுவப் பயிற்சி கிடையாது. 1907—ல் ரஷியாவிற்கு இவர் தூதுபோயினர். ரஷியாவின் இராஜகாரிய முறைகளை நன்கு அறிந்தவர் இவரே. சஞ்சாக்கைப் பெறுதலும் ஈஜியன் கடலில் துறைமுகம் ஏற்படுத்தலும் இவரால் நேர்ந்தன. ஆஸ்ட்ரியமகாராஜ்ய அதிகாரத்தை நிலை நாட்டுவதே இவருடைய முக்கிய கருத்தாம். இவர் பிரபுஸ்தானத்தைப் பாராட்டுபவர்.

## V. பெல்ஜியம்

1. ஆல்பேர்ட் அரசன். இவருக்கு வயசு 39 நடக்கிறது. இவர் 1875ம் ஸு ஏப்பிரல் 8உ பிறந்தனர். இவர் சுறு சுறுப்புள்ளவர். படிப்பில் பிரியமுள்ளவர். 1900ல் பவேரியா மாதரசியை மணஞ் செய்தனர். 1909ல் பெல்ஜியத்திற்கு அரசனக ஏற்பட்டார். இவர் 1898ல் அமெரிக்காவிற்குப் போனுர். பாரன்பூலோ என்பவரை ஐக்கிய இராஜ்யங்கட்குத் தூதனுப்பித் தாம்பட்டத்திற்கு வந்த செய்தியைத் தெரிவித் தனர். லண்டன் டைம்ஸ், பாரிஸ் டெம்ப்ஸ், பெர்லின் க்ரூஸ் ஸீட்டங்க், வியன்ஞ நியூ ப்ரீ பிரஸ் என்ற தினசரிப் பத்திரிகைகளை வாசிப்பாதிரார். மின்சார சம்பந்தமான மாதப் பத்திரிகைகளையும் அடிக்கடி வாசிப்பர். தந்தியில்லாமல் சமாசாரம் பேசுகின்ற யந்திர விஷயத்தில் இவருக்கு மிகுந்த பயிற்சியுண்டு. நன்கு உழைக்கும் அரசர்களில் இவர் ஒருவர். இவர் காங்கோ நாட்டிற்குப் போய் அந்த நாட்டாருக்குத் தம் முன்னேர் செய்த கொடுமையைக் கண்டுங் கேட்டும் பொறுதவராய் அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து அன்னுர் மனத்தைக் கவர்ந் தனர். இவர் இப்பொழுது தம் தேசத்தை இழந்து ப்ரான்ஸில் ஹாவர் பட்டணத்தில் காலங் கழிக்கின்றனர். யுத்த முடிவில் இவர் நிலைமை தெரியவரும்.

## VI. இற்றலி.

1. மார்க்குவிஸ் அன்டோனியோ டி. சான் குயுலி யானே. இற்றலி தேசத்தின் அயல் நாட்டு சம்பந்தத்தை மேற்பார்ப்பவர் இவராம். இவர் டர்க்கியுடன் யுத்தத்திற்

குப் போனவர். இப்பொழுது ஜெர்மனி ஆஸ்ட்ரியாவிற்கு விரோதமாக இருக்கின்றார். இவர் 1853ல் பிறந்தவர். இவர் பிரபுஸ்தானத்தைப் பாராட்டுபவர். பேச்சில் வல்லவர். முதலில் சேனேட்டராயிருந்து பின் இராஜாங்கசபையில் அங்கத்தினர் ஆயினர். கிரிஷ் இலாக்காவில் கீழ்காரியதரிசியாக இருந்தார். 1899ல் இவர் போஸ்டு மாஸ்டர் ஜெனரல் ஆயினர். பழைய்நாணயங்கள், புராதனச்சிலைகள், முன்காலத்துச்சாமான்கள், இவற்றின்மேல் இவருக்குள்ள பிரியத்தால் இவருக்கும் எம்மானுவல் III-வது அரசனுக்கும் நட்பு உண்டானது. இவர் சூடான், அபிஸினியா, பால்க்கன் இராஜ்யங்களிலும் ஏஷியாவிலும் பிரயாணஞ் செய்திருக்கின்றனர். மூவர் கூட்டுறவு, ஆஸ்டரியன் வேவுகார விஷயம், இவற்றின் இரகசியங்களை நன்கு அறிந்தவர். இவர் ஒருகாலத்தில் ப்ரிட்டனுக்குத் தூதுபோயிருந்தனர். எவ்விஷயத்திலும் இவர் இற்றலி தேசத்தாரென்று மதிக்கும்படி நடந்து கொண்டனர். இவர் இற்றலியில் பத்திரிகை யொன்றிற்கு அதிபரா யிருந்தனர். நாடகம், தொழில் இவற்றில் இவருக்கு அறிவு மிகுதி. 1904-ல் சென்ட்லூயி என்ற நகரில் நடந்த பல நாட்டு ஒலக்க ஐக்கிய கூட்டத்திற்குப் போயிருந்தனர். டர்க்கியுத்தம் முடிந்தபின் இவருக்கு நைட்டுப் பட்டம் அளிக்கப்பட்டது. அரசனுக்கு அண்டியவரென்று அரசவுரிமை மரியாதைகள் இவருக்கு ஏற்பட்டன.

## VII. ஸெர்வியா.

1. நிக்கோலஸ் பாஷிஸ்ட்சு, முதல் மந்திரி. இவருக்கு வயது 68. இவருடைய உயர்ந்த அகலமான நெற்றியைக் கண்டவர்கள் இவருடைய வீரத்தையும் யூகத்தையும் பெரிதாக மதிப்பர். 1846-ல் ஸெர்வியாவில் ஸேயென்சார்

என்றவூரில் பிறந்தவர். பெல்கிரேட்நகரில் கைத்தொழிற் சாலையில் நாலுவருஷம் கல்விகற்றனர். 1876-ல் இவர் டர்க்கிஷ்யுத்தத்தில் இராணுவ எஞ்சிநீர் உத்தியோகம் பெற்றனர். இரண்டாண்டு இதை வகித்தனர். 1881-ல் ராடிக்கல் (முற்றுஞ் சீர்திருத்தக்கருதும்) கக்ஷியின் தலைமையாயினர். 1883ல் தம்முடையவூர்க்கலகத்திற்சேர்ந்தனர். ரஷியாவிற்கு ஓடிப்போய் அங்கே ஒளித்துக்கொண்டனர். இவருடன் சேர்ந்த 21 தோழர்களிற் சிலர் சுடப்பட்டனர். மற்றவர்கள் சிரச்சேதமடைந்தனர். 1889-ல் எல்லோருக்கும் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டது. அத்தருணம் இவர் பெல்கிரேட் மேயர் (முன்சிபல் சேர்மென்) ஆயினர். அதன்பின் ஸெர்வியாவிற்கு முதல் மந்திரி ஸ்தானம் பெற்றனர். 1893-ல் ரஷியாவிற்குத் தூதுபோயினர். அப்பொழுது ரஷியாவிற்கும் ஸெர்வியாவிற்கும் நட்பைப் பலப்படுத்தினர். 1899-ல் இவர் இராணுவத்தில் கலகம் உண்டுபண்ணினரென்று குற்றஞ் சாட்டப்படவும் அத்தருணம் ரஷியா தலைகொடுத்தபடியால் இவர் தப்பித்தனர். அலெக்ஸாண்டர் அரசன்கொல்லப்பட்டான். இவர் அன்னிய நாட்டுக்காரியாதிகளைப் பார்க்கும்படி நியமிக்கப்பட்டனர். பீற்றர் ஸிம்மாஸனம் ஏறினவுடன் இவருக்கு முதன் மந்திரி ஸ்தானம் அளிக்கப்பட்டது. பால்க்கன் கூட்டுறவு இவரால் ஏற்பட்டதென்பது ஜெர்மனியின் அபிப்பிராயம்.

2. ஜெனரல் பட்நிக். ஜெனரல் ரடோமில் பட்நிக் என்பவருக்கு வயசு 65. தானாக முன்னுக்குவந்தவர். ஸெர்வியாவில் யுத்தங்கள் கலகங்கள் நடந்த சம்பந்தமாக இவர் பெயர் எவருக்கும் தெரியவந்தது. இவர் பிறந்த வருஷம் 1849. இவர் சோல்ஜராகவே இருந்துளார். இவர் ஸெர்வியாவில் இராணுவத்தில் தாக்கல் செய்துகொண்டு பிரான்ஸ்தேசத்திற்குப் போய் நெப்போலியனுடைய தந்திரங்களைக் கற்றனர். பால்க்

கன் கூட்டாளிகள் யுத்தத்தில் இவர் ஸெர்வியாவின் இராணுவத்தலைமை பெற்றனர். இவர் படாடோபத்திற் பிரியமில்லாதவர். இவர் தமக்குக் கிடைத்த பொருளையெல்லாம் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதில் செலவு செய்கின்றனர்.

---

## VIII. ரஷியா.

---

1. ஐவான் கோரமிகின், முதல் மந்திரி. இவர் இராஜகாரியமுறையிற் கைதேர்ந்தவர். பொருள் வருவாய் நூலில் சிறப்புற்றவர். ஜனசமூகசாஸ்திர நடையிற் பேர் பெற்றவர். 1848ல் ஸேண்ட் பீற்றர்ஸ்பேர்க் நகரில் பிறந்தவர். அந்த நகரிலேயே கல்வி கற்றவர். சர்வகலாசாலையில் பட்டம்பெற்றவர். 21வயதில் புத்தகமெழுதிப் பதிப்பித்தவர். முதவில் போல்ஸ் குடியானவர்களின் சரித்திரம் எழுதினர். அதன் பின் ரஷியக் குடிகளின் சரித்திரமும் வரைந்தனர். இவற்றால் சைபீரியாவிற்குப் போகும் ஜனங்களை மேல்பார்க்கும் இலாக்காவில் முதல் ஸ்தானம் பெற்றனர். பின் உள்நாட்டு மந்திரி ஸ்தானமும் கிடைத்தது. 1906ல் முதல் மந்திரியினர். கொலை முதலான பெரிய குற்றங்கள் செய்தவர்களுக்கு ரஷியாவில் மன்னிப்புக் கிடையாது என்று ஏற்படுத்தினர். யூதர்கள் சம்ஹரிக்கப்பட்ட காலத்து குழப்பங்களுண்டாயின. திலப்பயிர் சீர்திருத்தங்கள் வேண்டுமென்று ஜனங்கள் கேட்க மறுபடியும் ஆரம்பித்தனர். அப்பொழுது இவருக்குப் பதிலாக ஸ்டோலிப்பின் என்பவர் அதிகாரத்திற்கு வந்தனர். அவர்கொலையுண்டார். அதன்பின் இவர் ஐந்து வருஷங்களாக ஸாருக்குப் பொருள் ஜனசமூக விஷயங்களில் ஆலோசனை சொல்லிவந்தனர். ரஷியர்களைப் பலநாடுகளுக்குப் போகும்படி செய்து பொருள் சம்பாதிக்க

வழிகாட்டி நாட்டைச் செழிக்க வைப்பதே இவருடைய தலைமையான எண்ணம். இவர் அவசரப் படுபவரன்று. மெல்ல மெல்லக் காரியங்களை நடத்துபவர்.

2. ஸாஸனாப் ரஷ்யாவின் அயல்நாட்டுக் காரியாதி மந்திரி. சூக்காம் லினாப் என்பவர் ரஷியாவின் யுத்த மந்திரி. கிராண்டு டியூக் நிக்கோலாஸ் நிக்கோலெய் விச் என்பவர் ரஷியாவின் சேனைக்குத் தளகர்த்தர். இவரும் சூக்காம் லினாப் என்பவரும் ரஷிய சேனையின் தற்கால ஸ்திதிக்குக் காரணஸ்தர்.

---

## IX. டர்க்கி.

---

1. பாரன் வான் டேர் கோல்ட்ஸ். இரண்டு வருஷத்திற்குமுன் துருக்கர்களை கிரேஸ், மாஸிடோனியாவினின்று பல்கர் (பல்கேரியாநகரவாசி)களும் ஸெர்வியர்களும் துரத்திய பொழுது ஜெர்மானியர் தோல்வியடைந்தனரென்று ஈரோப்பிலுள்ள மற்ற அதிகாரிகள் நினைத்தனர். துருக்கியில் சேனை சேர்த்து ஒழுங்குப்படுத்தும் முறை ஜெர்மனிதேசத்தில் நடைபெறுவதுபோன்றதே. குருப் பீரங்கி தவறினால் அது புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களின் அநுபவக்குறையே தவிர வேறில்லை. கோல்ட்ஸ் என்பவர் துருக்கிச்சேனைக்குத் தற்காலச்சண்டை முறையைக் கற்பித்தனர். (துருக்கர் இயற்கையில் தைரியசாலிகள்). இவர் இராணுவ உடுப்பைக்களைந்துவிட்டால் சர்வகலாசாலையில் வாத்திமைக்குத் தகுந்தவர். இவருக்கு வயது எழுபத்து. சென்ற 50 வருஷகாலமாக இவர் எழுதுவதிலும், வேலைசெய்வதிலும், சண்டைபோடுவதிலும் காலங்கழித்தவர். இவர் எழுதிய சரித்திரமும், புத்தகங்களும் ஜெர்மனியிலும் வெளிநாடுகளிலும் வாசிக்கப்பட்டு

வருகின்றன. மேற்கூறிய காரணங்களால் டர்க்கி ஜெர்மனியுடன் சேர்ந்து யுத்தத்திற்கு முன்வந்தது. ஒட்டோமான் எம்பயர் என்ற பெரிய இராஜ்யம் காலடைவில் நசித்துச் சிறிய நாடாயிருப்பதுவும் இந்தப் போர் முடிவில் எவ்வாறாகுமோ?

## அநுபந்தம் III.

### அருமபத விளக்கம்

### I. சேனை.

ஸ்குவாட்.—8 பேர்கொண்டது. அதற்கு அதிகாரி கார்ப்போரல்.

பகுதி.—ஸோர்ஜண்டுக்கு உட்பட்ட 16 பேர்.

பளாட்டூன், கம்பெனி.—லெப்டிநெண்டுக்கு உட்பட்ட 50 முதல் 75 ஆட்கள்.

பட்டாலியன்.—மேஜருக்கு உட்பட்ட 4 அல்லது மேற்பட்ட கம்பெனிகள், 3 பளாட்டூன்கள், 200–250 ஆட்கள் கொண்டது, காப்டன் மேலதிகாரி.

ரெஜிமெண்டு.—கர்னல், லெப்டிநெண்டு கர்னலுக்குட்பட்ட 3 அல்லது மேற்பட்ட பட்டாளங்கள், 2 அல்லது 3 ரெஜிமெண்டுகள் சேர்ந்தது. பிரிகேடியர் ஜெனரல் மேற்பார்வை.

டிவிஷன்.—மேஜர் ஜெனரல் கைக்கீழ் 2 அல்லது 3 பிரிகேட்டுகள் அடங்கியது.

கோர்.—டிவிஷனுடன், குதிரைப்படை, பீரங்கிப்படை, என்ஜினீர்கள் சேர்ந்தவை. இவை மேஜர் ஜெனரல் அதிகாரத்திற்கு உட்பட்டவை.

## II. குதிரைப் படை.

ஸெக்ஷன்.—8 பெயர்கொண்டது. கார்ப்போரல் அதிகாரி.

பளாட்டூன்.—36 முதல் 50 பேர் கொண்ட படை. ஜூனியர் காப்டன் அதிகாரி.

துருப்பு.—125 முதல் 150 பெயர்கொண்டது; காப்டன் அதிகாரி.

ஸ்குவாட்ரன்.—3 துருப்புகள் சேர்ந்தது, ஸீனியர் காப்டன், மேஜர், இவர்கள் அதிகாரிகளாவர்.

ரெஜிமெண்டு.—கர்னல் அதிகாரத்திற்குட்பட்ட 4 முதல் 6 ஸ்குவாட்ரன்கள் சேர்ந்தது.

பிரிகேட்.—பிரிகேடியர் ஜெனரல் கைக்கீழ்ப்பட்ட 3 ரெஜிமெண்டுகள் சேர்ந்தது.

டிவிஷன்.—மேஜர் ஜெனரலுக்குக் கீழ்ப்பட்ட 2 அல்லது 3 பிரிகேடுகள் சேர்ந்தது.

## III. பீரங்கி.

பாட்டரி.—130 முதல் 180 பேருள்ளபடை; 4 முதல் 6 பீரங்கிகளுண்டு; காப்டன் அதிகாரி.

பட்டாலியன்.—மேஜருக்குக் கீழ்ப்பட்ட 3 அல்லது 5 பாட்டரிகள் சேர்ந்தது.

ரெஜிமெண்டு.—கர்னலுக்குக் கீழ்ப்பட்ட 3 அல்லது 4 பட்டாளங்கள் சேர்ந்தது.

---

PRINTED BY P. R. RAMA AIYAR AND CO., MADRAS.

எம். எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை பி. ஏ. எல். டி. யால்
இயற்றப்பட்ட நூல்கள்.

---

| | | | | |
|---|---|---|---|---|
| பன்னிருபெண்மணிகள் ... ... | ... | 0 | 6 | 0 |
| செய்யுள் கோவை ... ... | ... | 0 | 12 | 0 |
| விவேக விளக்கம் ... ... | ... | 0 | 6 | 0 |
| கதையுங் கற்பனையும் ... ... | ... | 0 | 2 | 0 |
| காமாட்சி (நாடகம்) ... ... | ... | 0 | 8 | 0 |
| நவராத்திரிப் பிரசங்கம் ... | ... | 0 | 8 | 0 |
| வாகடநூல் அரும்பத அகராதி ... | ... | 0 | 8 | 0 |
| அப்பாஜி மரியாதை ராமன் கதைகள் | ... | 0 | 2 | 0 |
| வாசகத்திரட்டு ... ... | ... | 0 | 8 | 0 |
| ஐரோப்பிய யுத்தம் (படங்களுடன்) | ... | 0 | 8 | 0 |

ஒரு தினுசில் 10 புத்தகம் வாங்குபவர்களுக்கு ஒரு புத்தகம் கமிஷன் கொடுக்கப்படும்.

மேற்படி புத்தகங்கள் கிடைக்கும் இடம்:—

பி. ஆர். ராமய்யர் கம்பெனி
எஸ்பிளனேடு
சென்னபட்டணம்.